In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

கந்தபுராணம்

உரைநடை



வெளியிடுவோர்

ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம்

திருப்பரங்குன்றம், மதுரை - 625 005.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொக்கரும், மீனாக்ஷியும்
ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயத்தின் வெள்ளிவிழா நினைவாக
சமர்ப்பிக்கப்பட்ட தங்க அம்பாரியில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

வடமொழியும், தென்தமிழும்

மறைகள் நான்கும் ஆனவன் காண்

கந்த புராணம்

(உரைநடை)

எழுதியவர் :

முனைவர் திருமதி. கோமதி சூரியமூர்த்தி

❖ ❖ ❖

வெளியிடுவோர் :

ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம்

திருப்பரங்குன்றம், மதுரை - 625 005.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூல் குறிப்புகள்

நூலின் பெயர் : கந்த புராணம் (உரைநடை)

நூலின் வகை : சைவ சமயம்

உரைநடை ஆசிரியர் : முனைவர் திருமதி. கோமதி சூரியமூர்த்தி அவர்கள், மதுரை

பதிப்பு : விளம்பி - வைகாசி-15, 16 (29, 30-5-2018) செவ்வாய்கிழமை, புதன்கிழமை

நூலின் அளவு : 1/8 டெம்மி

பக்கங்கள் : 144

தாள் : 13.6 கி.கி. மேப்லித்தோ

எழுத்து : 12.6 புள்ளிகள்

படிகள் : 1000

விலை : ரூ. 100/-

வெளியிடுவோர் : ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம்
66, சன்னதி தெரு,
திருப்பரங்குன்றம்,
மதுரை - 625 005.

புத்தக அமைப்பு : ஸ்ரீகணநாத நாயனார் நூலகம்
திருச்சிராப்பள்ளி

அச்சாக்கம் : ஆர்.ஜி.பிரிண்டர்ஸ்
30, சின்னக்கடைத்தெரு,
திருச்சிராப்பள்ளி-620 002.
Cell : 0431-2700417, 98949 08437

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருப்பரங்குன்றம்
மதுரை-624 005

இந்நூல்

திருப்பரங்குன்றம்

ஆண்டவர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்,

இரண்டாவது ஸ்தானிகர்,

மதுரை, அருள்மிகு மீனாக்ஷிசுந்தரேசுவரர் திருக்கோயில், அர்ச்சகர்

ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலய முதல்வர்

'சிவாகம சிரோமணி' 'சிஷ்ய வாத்ஸல்ய ஜலதி'

சிவஸ்ரீ க. ராஜா பட்டர்

அவர்களது திருவுளப்பாங்கின் வண்ணம்

மதுரை, தமிழிசைச் சங்கம்

இராஜா முத்தையா மன்றத்தில் நடைபெறும்

திருப்பரங்குன்றம்

ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயத்தின்

வெள்ளி விழா மலராக

வெளியிடப்பட்டது.

2018, மே மாதம், 29,30

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருப்பரங்குன்றம்
மதுரை-624 005

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளடக்கம்

	சுப்பிரமணியக் கடவுள் துதிகள்	4
	பதிப்புரை	5
1.	உற்பத்திக் காண்டம்	7
2.	அசுர காண்டம்	36
3.	மகேந்திர காண்டம்	63
4.	யுத்த காண்டம்	77
5.	தேவ காண்டம்	100
6.	தட்ச காண்டம்	105
	கந்தபுராணம் உணர்த்தும் தத்துவக் கருத்துக்கள்	140
	வாழ்த்து	144

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுப்பிரமணியக் கடவுள் துதிகள்

இருப்பர் அங்கு உறைத்திடும் எஃகம் வேல் உடைப்
பொருப்பர் அங்கு உணர்வுறப் புதல்வி தன்மிசை
இருப்பர் அங்கு அமர் இடை விளங்கக் காட்டிய
திருப்பரங் குன்றமர் சேயைப் போற்றுவாம்.

சூரலை வாயிடைத் தொலைத்து மார்பு கீண்டு
ஈரலை வாய் இடும் எஃகம் ஏந்தியே
வேர் அலைவாய் தரு வெள்ளி வெற்பு ஓரீஇச்
சீர் அலைவாய் வரு சேயைப் போற்றுவாம்.

காவினன் குடிலுறு காமர் பொன் நகர்
மேவினன் குடிவர் விளியச் சூர் முதல்
பூவினன் குடிலையம் பொருட்கு மாலுற
ஆவினன் குடி வரும் அமலர் போற்றுவாம்.

நீரகத்தே தனை நினையும் அன்பினோர்
பேரகத்து அலமரும் பிறவி நீத்திடும்
தாரகத்து உருவமாம் தலைமை எய்திய
ஏரகத்து அறுமுகன் அடிகள் ஏத்துவாம்.

ஒன்றும் தொறு ஆடலை ஒருவி ஆவிமெய்
துன்று தொறு ஆடலை தொடங்கி ஐவகை
மன்று தொறு ஆடிய வள்ளல் காமுறக்
குன்று தொறு ஆடிய குமரன் போற்றுவாம்.

எழ முதிரைப் புனத்து இறைவி முன்பு தன்
கிழ முதிரிள நலம் கிடைப்ப முன்னவன்
மழ முதிர் களிறென வருதல் வேண்டிய
பழ முதிர் சோலையம் பகவன் போற்றுவாம்.

ஈறு சேர் பொழுதினும் இறுதி இன்றியே
மாறிலாது இருந்திடும் வளங்கொள் காஞ்சியில்
கூறு சீர்புனை தருகுமரக் கோட்டம் வாழ்
ஆறு மாமுகப் பிரான்அடிகள் போற்றுவாம்.

நூல்பயன்

இந்திரராகிப் பார்மேல் இன்பமுற்று இனிது மேவிச்
சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி அதனில் சேர்வர்
அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேல்
கந்தவேள் புராணம் தன்னைக் காதலித்து ஓதுவோரே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பதிப்புரை

"கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாட் பரிசிவை யுணர்ந்தி லேன்யான்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தி அன்றோ."

-கந்தபுராணம்

எல்லாம்வல்ல இறைவன் குன்றமமர்ந்த குமரன் தெய்வானை மணாளன் முருகப் பெருமானின் திருவருளாலும், அங்கயற்கண்ணி உடனமர் ஆலவாயண்ணல் சொக்கநாதப் பெருமானின் திருவருளாலும், ஸ்ரீகாஞ்சீ மஹாஸ்வாமிகளின் அருளாசியாலும், அல்லூர் குலபதி, சாம்பவஸ்ரீ வை. விச்வநாத சிவாசார்ய ஸ்வாமிகள் அவர்களால் கடந்த 1993-ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்ட நமது ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம் 25 ஆண்டுகளை மிகச் சிறப்பாக நிறைவு செய்துள்ளது.

இவ்வித்யாலயத்தின் மூலமாக பல்வேறு அறப்பணிகள் இதுவரை செய்யப்பட்டு வந்துள்ளன. அவற்றுள் ஒன்று நம் சமயத்தின் கருத்துக்களை விளக்குகின்ற நூல் வெளியீடுகளும் ஆகும். அவ்வழியில் 25-ஆம் ஆண்டு நிறைவு - வெள்ளி விழாவை முன்னிட்டு, பல நூல்கள் வெளியிடத் திருவருள் கூட்டியுள்ளது. அந்நூல் வரிசைகளுள் ஸ்ரீகச்சியப்ப சிவாசார்யர் இயற்றிய கந்தபுராணத்தைத் தழுவி மதுரை திருமதி. கோமதி சூரியமூர்த்தி அவர்கள் எழுதிய இந்த உரைநடை நூலும் ஒன்றாகும்.

கலியுக வரதன் கந்தப் பெருமானின் அருள் வரலாற்றை விளக்கும் இப்புராணம் ஆறுமுகன் அடியார்கள் அறுமுகச்சிவனை தியானம் செய்து போற்றி வழிபட உதவும் ஓர் உன்னதமான நூல். "எந்தப் புராணத்தையும் கந்த புராணத்துள் காணலாம்" என்ற பழமொழி இப்புராணத்தின் பெருமையை நமக்கு உணர்த்துகிறது. வடமொழியில் பல

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாகங்களாக அமைந்திருக்கும் ஸ்கந்தபுராணத்தின் சங்கர ஸம்ஹிதையின் ஒரு பகுதியே முருகப்பெருமானின் வரலாற்றை விளக்கும் கந்தபுராணம் ஆகும்.

இப்புராணத்தை அன்போடு படிப்பதாலும் கேட்பதாலும் கலியினால் ஏற்படும் துன்பங்கள் யாவும் அகலும் என்கிறது வடமொழி ஸ்கந்தபுராணம்.

அன்பர்கள் அனைவரும் முருகப்பெருமானின் பரமபவித்திரமான திருவிளையாடல்கள் கொண்ட இந்நூலைப் படித்துப் பயனடைய வேண்டுகிறோம்.

இந்நூல் வெளியிடுவதற்கான பொருளுதவி செய்த மானாமதுரை, அருள்மிகு ஆனந்தவல்லி சோமநாதர் ஆலய அர்ச்சகர், சிங்கப்பூர் ஸ்ரீவீரமாகாளியம்மன் ஆலய தலைமை அர்ச்சகர், ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயத்தின் முன்னாள் ஆகம ஆசிரியர் சிவஸ்ரீ D.சோமசுப்பிரமணிய பட்டர் என்ற ராஜேஷ் சிவம் அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தாங்கள் முன்பு வெளியிட்ட நூலின் ஒரு பிரதியை தந்துதவிய புலவர் நீ.சி.சுந்தரராமன் (செயலர், பன்னிரு திருமுறை மன்றம், மதுரை) அவர்களுக்கும், புராணத்தை உரைநடையில் எழுதியுள்ள மதுரை, முனைவர் திருமதி. கோமதி சூர்யமூர்த்தி அவர்களுக்கும், இந்நூலாக்கப் பணியில் உதவிய திருச்சிராப்பள்ளி, ஸ்ரீகணநாத நாயனார் நூலகப் போற்றுநர் ஸ்ரீ மு.ஜயக்குமார் அவர்களுக்கும், அனைவரையும் ஒருங்கிணைக்கும் பணிகளை பாங்குறச் செய்த திருப்பரங்குன்றம், ஸ்ரீபொன்.முத்துவிநாயக ஓதுவார் மூர்த்திகள் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பேரன்புடன்,

ஸ்ரீஸத்குருநாதர் அவர்களின் அருளாணையின் வண்ணம்

சிவஸ்ரீ S. **பாஸ்கர சிவம்**

காரைக்குடி (லண்டன்)

❖ ❖ ❖

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

திருச்சிற்றம்பலம்

கந்த புராணம்

(கச்சியப்ப சிவாசாரியார்)

1. உற்பத்திக் காண்டம்

கந்த புராணத்தில் முதல் காண்டம் உற்பத்திக் காண்டம். இது திருக்கயிலாயப் படலம், பார்ப்பதிப் படலம், மேருப் படலம், காமதகனப் படலம், மோனம் நீங்கு படலம், தவங்காண் படலம், மணம் பேசு படலம், வரைபுனை படலம், கணங்கள் செல் படலம், திருக்கலியாணப் படலம், திருவவதாரம், துணைவர் வரு படலம், அயனைச் சிறை புரிதல், அயனைச் சிறை நீக்குதல், விடை பெறு படலம், படையெழுச்சிப் படலம், தாரகன் வதைப்படலம், தேவகிரிப் படலம், அசுரேந்திரன் மகேந்திரம் செல் படலம், வழிநடைப்படலம், குமாரபுரிப் படலம், சுரம் புகு படலம், திருச்செந்திப் படலம் என 26 படலங்கள் கொண்டது.

1. திருக்கைலாயம்

சிவபெருமான் வீற்றிருந்தருளும் கயிலைமலை, அவர் ஏறிச் செல்லும் வெள்ளை இடப வாகனம் போன்றும், அச்சிவனது திருநீற்றுக் கோலத்தையும், பாற்கடலையும் போன்றும் வெண்ணிறம் கொண்டது. அதனை முக்கண்ணும், நாற்புயமும், பொன்மேனியும் உடைய நந்தியெம்பெருமான் பொற் பிரம்பைக் கையிலேந்திக் காவல் புரிந்து கொண்டிருந்தார். ஊழிக்காலத்தும் அழியாத அம்மலையில் பொன்னெடுங் கோயில் ஒன்றின், நடுவிலமைந்துள்ள மணி மண்டபத்தில் சிவபெருமான் உமாதேவியுடன் வீற்றிருந்தார். தும்புருவும், நாரதரும், வித்தியா தரர்களும் சிவபெருமான் புகழைப் பாடிக் கொண்டிருந்தனர்.

2. இமவான் மகள் ஆதல்

உமாதேவி எழுந்து இறைவனை வணங்கி, ''கற்பனை கடந்த கண்ணுதலே! அடியேன் தங்களை இகழ்ந்த தக்கனிடத்தில் பல

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாட்கள் வளர்ந்து, அத்தீயவன் பெற்ற மகள் என்று சொல்லப்படும் தாட்சாயணி என்ற பெயரையும், அவன் வளர்த்த உடம்பையும் இதுவரை சுமந்தேன். இனியும் அவற்றைச் சுமக்க அஞ்சினேன். அவற்றை நீக்கும் வழியைத் தேவரீர் அடியேனுக்குக் கூறித் திருவருள் புரிய வேண்டும்'' என இறைஞ்சினாள்.

அம்பிகையின் பதிபக்தியைக் கண்டு வியந்த சிவபெருமான், ''தேவி! இமயமலை அரசனாகிய இமவான் உன்னைக் குழந்தையாகப் பெற நெடுங்காலமாகத் தவம் செய்கின்றான். நீ அவனுக்கு மகளாகப் பிறந்து அருள் செய்து, ஐந்தாம் வயதில் நம்மை நோக்கித் தவம் செய். உன்னைத் திருமணம் செய்து யாம் திருவருள் புரிகின்றோம்'' என்றார்.

விண்ணளாவி உயர்ந்த எழில்மிகு இமயமலையில், பத்மை என்ற பெயருடைய தடாகத்தில் தாமரை மலரில் தேவி குழந்தையாய் எழுந்தருளினாள். அத்தடாகத்தின் அருகில்தான் மலையரசன் அம்பிகை தனக்கு மகளாய்த் தோன்ற வேண்டும் என்று தவம் செய்து கொண்டிருந்தான்.

தேவி மரகத மேனியுடன் குழந்தையாய்த் திருஅவதாரம் செய்தாரே அன்றி இமவான் மனைவி வயிற்றில் பிறக்கவில்லை. தெய்வக்குழந்தையைக் கண்ட இமவான், ''அடியேன் செய்த தவம் பலித்தது'' என்று ஆனந்தக் கூத்தாடிக் குழந்தையைக் கையில் எடுத்து உச்சி மோந்து, குழந்தையுடன் தனது மாளிகையை அடைந்தான். ''இது எம்பெருமான் கொடுத்த பிரசாதம்'' என்று தன் மனைவியாகிய மேனையின் கரங்களில் குழந்தையைக் கொடுத்தான். மேனை அத்தெய்வக் குழந்தையைத் தொழுது வாங்கி, மார்போடு அணைக்கப் பால் சுரந்தது. ஊட்டி விட்டாள்.

பொன்னாபரணங்கள் பலவற்றைக் குழந்தைக்கு அணிவித்து, பொன்னாலான தொட்டிலில் இட்டு, பருவத ராசனுக்கு மகளாக வந்ததால் பார்வதி என்று பெயரிட்டு வளர்த்து வந்தனர்.

குழந்தை நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து ஐந்து வயதை அடைந்தது. தந்தையிடம் தான் தவம் செய்ய வேண்டும் என விருப்பத்தைத் தெரிவித்தது. தந்தை, ''ஐந்து வயதில் தவம் செய்தல் கூடாது. உடல் தாங்காது'' என்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குழந்தையோ, ''அப்பா, உடலையும் உயிரையும் கொடுத்த எம்பெருமான் என்னைக் காப்பாற்றுவார். தடை சொல்லாமல் தவம் செய்ய விடை தாருங்கள்'' என வேண்டியது.

தவச்சாலை அமைக்கப்பட்டது. பார்வதி சிவ வழிபாடு செய்து தவம் இயற்றினாள். அத்தருணத்தில் கந்த புராணக் காவிய நாயகரான முருகப்பெருமான், அசுரரை மாய்த்து, அமரர் குறை தீர்த்து, அறத்தை நிலைநாட்ட அவதாரம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

3. மேருவில் நிகழ்ந்தது

பார்வதிதேவி தவம் செய்து கொண்டிருந்த காலத்தில், சூரபன்மன் என்னும் அசுரன் தோன்றி, சிவனை நோக்கித் தவம் செய்து, ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகங்கள் அரசு செலுத்தும் வரம் பெற்று, தேவர்களையும் உலகத்து உயிர்களையும் துன்புறுத்தத் தொடங்கினான்.

அதே காலத்தில் பிரம்ம புத்திரர்களான சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர் என்ற நால்வரும் வேதங்களைக் கற்றும் தெளிவான அறிவு பெறாமல், மன அமைதியின்றிக் கயிலைமலையை அடைந்தார்கள். நந்தியெம்பெருமானை வணங்கி, அவர் அனுமதியுடன் உள்ளே சென்று, சிவபெருமானிடம் தங்கள் மயக்கத்தைப் போக்கி மனம் அமைதியடைய தெளிவான அறிவைப் பெற உதவ வேண்டினர்.

சிவபெருமான் சனகாதியர்கட்குச் சைவாகமங்களின் சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்று பாதங்களையும் உபதேசித்தார். அதைக் கேட்ட முனிவர்கள், ''மனம் அடங்கச் செய்யும் ஞான போதத்தை உபதேசித்து அருள்க'' என வேண்டினர். சிவபெருமான் புன்னகைத்து, ''அந்த ஞானபோதம் வாயினால் சொல்லப்படுவது அன்று. இப்படிச் சும்மாயிருப்பதே அதுவாகும்'' என்று தம் திருமார்பில் திருவிரலால் அமைந்த சின்முத்திரையைத் தாங்கி யோகத்தில் அமர்ந்து காட்டியருளினார். கட்டைவிரல் பதி. ஆள்காட்டும் விரல் ஆன்மா. நடுவிரல், மோதிர விரல், சுண்டு விரல் மூன்றும் முறையே ஆணவம், கன்மம், மாயை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்ற மும்மலங்களைக் குறிக்கும். ஆள்காட்டு விரல் இந்த மூன்று விரல்களிலிருந்தும் நீங்கிக் கட்டை விரலின் அடிப்பாகத்தைத் தொட்டுக் கொண்டிருப்பது ஆன்மா, மும்மலங்களிலிருந்து நீங்கி பதியின் திருவடியைச் சேர்தல் வேண்டும் என்பதை உணர்த்தும்.

ஞானபோதம் சொல்லால் விளக்கத் தக்கது அன்று என்ற உண்மையை உணர்ந்த சனகாதி முனிவர்கள் ஒடுங்கிச் சித்திரப் பதுமை போல் செயலற்றுச் சிவஞானத்தில் இருந்தனர். சிவபெருமான் ஞானபோதத்தை இவ்வாறு மோன நிலையில் உபதேசித்த ஒரு நொடிப் பொழுதில் பிரமன் முதலிய தேவர்கள் அனைவர்க்கும் பலப்பல யுகங்கள் கழிந்தன. (மனிதனின் ஓர் ஆண்டு தேவர்கட்கு ஒரு நாள் இரண்டாயிரம் சதுர் யுகம் பிரமனுக்கு ஒரு நாள் . சிவனின் ஒரு நொடி பிரமனுக்குப் பற்பல யுகங்கள் ஆகும்.)

இறைவன் ஒரு கணம் செயலற்று மௌனமாக இருந்ததால் உலகம் செயலற்றது. அப்போது சூரபன்மன் தேவர்கள் எல்லோரையும் மிகத் துன்புறுத்தினான். சூரபன்மன் மகன் பானுகோபன் விண்ணுலகை எரித்தான். இந்திரனின் மகன் சயந்தனையும் தேவர்களையம் சிறை வைத்தான். இந்திரன் மேருமலையின் ஒரு புறத்திலிருந்து சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்தான். தவத்திற்கு இரங்கிய பரமேசுவரன் காட்சி தந்தார். இந்திரன் சூரபத்மன் செய்யும் துன்பங்களை எடுத்துக் கூறி, அவனை அழித்துத் தேவர்களைக் காத்தருள வேண்டினான்.

சிவபெருமான், ''இந்திரா! என்னை நிந்தித்து தட்சன் யாகம் செய்த போது அதில் நீயும் மற்ற தேவர்களும் கலந்து கொண்டதால் இத்துன்பம் வந்தது. வருந்தாதே. விரைவில் முருகப்பெருமான் அவதரித்து சூராதியர்களை அழித்து உங்கள் துயர் தீர்ப்பான்'' என்று கூறி மறைந்தார். இந்திரன் பிரம்மலோகம் சென்றுகுமரக்கடவுள் தோன்றுவார் என்று சிவபெருமான் அருளியதைப் பிரமனுக்கு உரைத்தான்.

பிரமன், ''பெற்ற தாய் தந்தையர்கள் தம் குழந்தைகளிடம் ஒரு நோய் ஏற்பட்டால், மருத்துவர் முதலிய பிறர் மூலம் மிகுந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துன்பம் செய்தும், அந்த நோயைத் தீர்ப்பார்கள் அல்லவா? நமக்குத் தாயும் தந்தையுமாகிய எம்பெருமான் அகந்தை மிகுந்து போன நம் தீவினைகளை நீக்கவே இக்கொடுமைகளை இழைக்கிறார். நம்மிடமுள்ள பாவங்கள் தீர்கின்ற காலம் ஓரளவு நெருங்கிவிட்டது. அதனால் சிவபெருமானே இனி அருள் செய்வார். நாமும் முயற்சி செய்வோம். இவை அனைத்தையும் திருமாலிடம் தெரிவித்துச் செய்ய வேண்டிய செயல்களைச் செய்வோம்'' என்றார்.

பின் தேவர் கூட்டம் தொடர இந்திரனும், பிரமனும் திருமாலைக் காணச்சென்றனர். திருமால், ''யோக நிலை கலைந்து பார்வதி தேவியை அவர் மணந்தால்தான், தேவர்கள் துயர் நீங்கக் குமரக்கடவுள் அவதாரம் செய்வார். எனவே பிரம்மனே! நீ உடனே மன்மதனை அழைத்துச் சிவபெருமானிடம் அனுப்பி, அவர் மனத்தில் மலைமகள் பால் மையல் உண்டாகச் செய்'' என்று பிரமனைப் பணித்தார். பிரமன் இசைந்து திருமாலை வணங்கித் தன் மனோவதி நகருக்குச் சென்று தன் கோயிலுக்குள் புகுந்து தாமரை மலராசனத்தில் வீற்றிருந்தான்.

சிவபெருமான் யோக நிலையில் அமர்ந்திருந்த போது அனைத்துயிர்களும் காம வேட்கையும், கலவி இன்பமும் இல்லாமலிருந்ததும், பிரமனிடம் படைப்புத் தொழில் நின்று விட்டதும், சிவபெருமானே அனைத்துயிர்கட்கும் காரணனரான முழுமுதற் கடவுள் என்பதை உணர்த்தும்.

4. காமதகனம்

பிரமன், மன்மதன் தன் இடத்திற்கு வர வேண்டுமென எண்ணினான். மன்மதன் என்றால் மனத்தினின்று தோன்றியவன் என்பது பொருள். திருமால் மனத்தினின்றும் தோன்றிய மன்மதன் பிரமனின் தம்பி ஆவான். மன்மதன் வந்தான். பிரமன் மன்மதனைப் பார்த்து, ''தம்பி! தேவர்கள் துயர்தீர நீ போய்ச் சிவபெருமான் மீது மலர்க் கணைகளைப் போடு. அவர் யோக நிலை நீங்கி அம்பிகையை மணப்பார். மகன் ஒருவனைப் பெறுவார். அவன் சூரபத்மனை அழிப்பான்'' என்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மன்மதன் பதறிப் போனான். ''சிவபெருமான் ஆற்றலை அறியாயோ. அவரை எதிர்த்து வென்றவர் எவரும் இலர். முன்னொரு காலத்தில் புன்சிரிப்பால் பகைவர்களின் முப்புரங்களை எரித்து அழித்தார். மார்க்கண்டேயருக்காகக் காலனைக் காலால் உதைத்தார். நீயும் திருமாலும் ''பரப்பிரம்மம் நாமே'' என வாதிட்டபோது சிவபெருமான் அங்கு வர, திருமால் வணங்க, வணங்காத உன் நடுத்தலையைக் கிள்ளினார். சலந்தராசுரனை அழித்தார். தக்கன் வேள்வியைத் தகர்த்தார். பாற்கடலில் தோன்றிய நஞ்சை உண்டார். பெருகிப் பாய்ந்த கங்கையை ஓர் அணுவாக அடக்கிச் சடையில் தாங்கிக் கொண்டார். தாருகவனத்து முனிவர்கள் அனுப்பிய வலிய புலியைத் தோல் உரித்துப் போர்த்துக் கொண்டார். இத்தகைய ஆற்றல் மிக்க சிவபெருமானை எனது கணையால் மயக்க முடியாது

சிவபெருமான் கையில் நெருப்பு. அவரது வாயில் நெருப்பு. கண்ணிலும் நெருப்பு. நெருப்பின் வடிவம் அவர். அவரை எதிர்த்து உயிருடன் திரும்ப முடியாது அண்ணா'' என்றான். பிரமன் வருந்தி, ''தம்பி! நீ சொன்னவை அனைத்தும் உண்மைதான். அவரை வெல்ல யாராலும் முடியாது. அவனன்றி அணுவும் அசையாது. நீ இப்போது எம்பெருமானை மயக்கச் செல்வதும் அவன் செயலே. எந்த வகையினாலும் ஒருவன் ஒருவர்க்கு ஒரு உதவியைச் செய்ய முடியும் என்றால் அவர் கேட்கும் முன்பே தானே முன் வந்து செய்தல் உத்தமம். அவர் கேட்ட பிறகு செய்தல் மத்திமம். கேட்ட பின்பும் பலமுறை மறுத்து பின்பு செய்தல் அதமம். நீ போய்ச் சிவபெருமானால் உயிரிழந்தால் அது தேவர்களுக்காகச் செய்த பெரிய தியாகம் அல்லவா? விருத்திராசுரனை வதைக்கும் பொருட்டுத் ததீசி முனிவர் தம் முதுகெலும்பைத் தந்து உயிரிழந்த செய்தியை நீ கேட்டதில்லையா? குமரக் கடவுள் அவதாரத்திற்காக நீ பஞ்ச பாணங்களுடன் சிவபெருமானிடம் போகத்தான் வேண்டும்'' என்று ஆணையிட்டார்.

மன்மதன் மீண்டும் மறுக்கவே, பிரமன் கோபமுற்றுச் சபித்து விடுவதாகக் கூறினான். பிரமனின் சாபத்தில் அழிவதை விட, சிவனின் கோபத்தில் அழிவதே மேல் என்று மன்மதன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நினைத்தான். கயிலை செல்ல உடன்பட்டான். மன்மதன் தன் அரண்மனைக்கச் சென்று, கயிலைக்குப் புறப்படும் சமயம் இரதி, அவன் மனைவி விவரமறிந்து போக வேண்டாம் என தடுத்தாள். மன்மதன் உடன்படாததால் அவளும் அவனுடன் சென்றாள்.

நந்திதேவர் சிவபெருமான் கட்டளைப்படி கோயிலுக்குள் செல்ல அனுமதித்தார். உள்ளே சென்ற மன்மதன் இறைவனைக் கண்டு நடுங்கி மயங்கிக் கீழே விழுந்தான். அவனை இரதி தூக்கி நிறுத்தினாள். இவர்களைப் பின்பற்றிச் சென்ற பிரமனும், இந்திரனும், தேவர்களும் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தனர். மன்மதன் மலர் அம்புகளைச் சிவபெருமான் மீது போட்டான். சிவன் நெற்றிக் கண்ணைத் திறந்தார். மன்மதன் எரிந்து சாம்பலானான். அவன் மனைவி இரதி கணவனை எண்ணிப் பலவாறு புலம்பி அழுதாள். சிவபெருமான் மன்மதனை எரித்து விட்டு மீண்டும் முன்போலவே மோன நிலையில் வீற்றிருந்தார். சிவன் மன்மதனை எரித்தது அவரது மறக்கருணையைக் காட்டும்.

5. இறைவனின் மோனம் நீங்கியது

மன்மதன் இறந்ததைக் கண்ட பிரமன் உள்ளிட்ட தேவர்கள் கண்ணீர் விட்டு அழுதனர். பெருமானின் மோன நிலையைப் பிரார்த்தனையாலேயே மாற்ற முடியும் என உணர்ந்து, கோபுரத்தின் அருகே நின்று பிரார்த்தித்தனர். பெருமான் நந்தியிடம் அவர்களை உள்ளே அனுப்பும்படிக் கூறினார். அவர்களும் கோயிலினுள் வந்து சிவபெருமானை வணங்கி, ''பெருமானே! சூரபத்மனால் நாங்கள் துன்புறுகிறோம். அவனைக் கொன்று எங்களைக் காத்தருள தேவரீர் பார்வதியைத் திருமணம் செய்து ஒரு புதல்வனைத் தரவேண்டும்'' என்று வேண்டினர். சிவபெருமானும் இசைவு தெரிவித்தார். தேவர்கள் தத்தம் இருப்பிடம் சென்றனர். அவர்கட்கு அருள் புரிந்ததைக் கண்ட இரதி இறைவன் முன் வந்து வணங்கி, தேவர்களுக்காக உயிரை விட்ட தன் கணவன் மன்மதனை உயிர்ப்பித்தருள வேண்டினாள். சிவபெருமான் அது கேட்டு உமையம்மையைத் தான் திருமணம் செய்து கொள்ளும்போது மன்மதனை உயிர்ப்பித்துத் தருவோம் என்று அருள்பாலித்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமான், ''சிவஞானபோதம் சொற்களால் உணர்த்தப்படுவதன்று. மோன நிலையிலிருந்து தம்மை ஒருமை உணர்வுடன் உன்னுவதே'' என்பதைச் சனகாதி முனிவர்கட்கு உணர்த்தி அவரவர் இருப்பிடங்கட்கு அனுப்பி வைத்தார்.

6. பார்வதியின் தவத்தைக் காணுதல்

சிவபெருமான் முதிய அந்தணர் வடிவம் கொண்டு பார்வதி தவம் செய்யும் தவச்சாலைக்குச் சென்றார். பார்வதி தேவியும், ''இவர் எம்பெருமானின் அடியவர்'' என்று பக்தியுடன் வழிபட்டார். வேதியர் அன்புடன் தேவியைப்பார்த்து, ''சின்னஞ் சிறு வயதில் உடலை வாட்டி யாரைக் குறித்து எதற்காகத் தவம் செய்கிறாய் பெண்ணே?'' என்று கேட்டார்.

பத்தினிப் பெண்ணுக்கு நாயகனைப் பற்றிப் பேசுவதே நாணம் ஆதலால் பார்வதி தன் தோழி விசயையைப் பார்க்க, அவள் குறிப்புணர்ந்து சிவபெருமானைத் திருமணம் செய்து கொள்ள தேவி தவம் இருப்பதாகக் கூறினாள். வேதியர் ''பிரமனும் திருமாலும் காணாத சிவன் இவளது தவத்திற்கு இரங்கி எப்படி வருவார்?'' எனக் கூறி நகைத்தார். அவர்களைப்போல அகந்தையாலா பெருமானை அடைய விரும்புகிறேன். அன்பாலல்லவா? எம்பெருமான் அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை என்பதை இவ்வேதியர் அறியாதிருக்கிறாரே என எண்ணி, ''இத்தவம் போதவில்லை என்றால் இன்னும் கடுமையாய்த் தவம் செய்வேன். அதில் என் உயிரை போனாலும் சரி'' என்றாள்.

வேதியரோ, ''பெண்ணே சிவனுக்கு உடை தோல், வாகனம் எருது, ஆபரணங்களோ பாம்பு, எலும்பு, தலைமாலை,பன்றிக் கொம்பு, உண்கின்ற பாத்திரம் மண்டையோடு. நடமாடும் இடம் சுடுகாடு. அவரையா மணம் புரியப் போகிறாய். நான் உன்னை மறை விதிப்படி மணக்கவே வந்தேன்'' என்றார். பார்வதி கோபமுற்று அவரைப் பொய்க் கோலம் கொண்ட பார்ப்பனன் என இகழ்ந்துரைத்து அவ்விடமிருந்து அகல எழுந்தாள். வேதியர் உண்மைக் கோலத்தில் இடப வாகனத்தில் காட்சி கொடுத்தார். பார்வதி தன் பிழை பொறுக்க வேண்டினாள். சிவபெருமான் மறுநாள் பார்வதியை மணம் செய்து கொள்ள வருவதாகக் கூறி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மறைந்தார். இந்நிகழ்ச்சியைத் தோழியர் மலையரசனிடம் போய்த் தெரிவித்தனர். அவர் மனைவி மேனையுடன் தவச்சாலைக்கு வந்து மகளை அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்.

7. திருமணம் பேசுதல்

மனிதர்கள் ஒழுக்க நெறியுடன் அடங்கி இல்லற வாழ்வு நடத்த திருமணமே உபாயம் என்பதை உலகிற்கு உணர்த்தச் சிவபெருமான் பார்வதியைத் திருமணம் செய்ய திருவுள்ளம் கொண்டார். திருமணம் பேச சப்த ரிஷிகளை இமவானிடம் அனுப்பினார். அவர்களும் மலையரசனிடம் வந்து சிவபெருமானுக்குப் பார்வதியை மணம் பேச வந்ததாகத் தெரிவித்தனர்.

முன்பு தக்கன் தன் மகளைச் சிவனுக்கு மணம் முடித்தான். சிவன் மாமனார் தலையையே அறுத்துவிட்டானே. அவனுக்கு எப்படி பெண் கொடுப்பது என மேனை தயங்கினாள். உடனே முனிவர்கள் தக்கன் சிவனுக்கு அவி உணவு கொடுக்காததுடன் சிவ நிந்தையும் செய்ததால் அவ்வாறு நிகழ்ந்தது என்றனர். உடனே மேனையும், மலையரசனும் மன்னிப்புக் கேட்டுத் திருமணத்திற்கு இசைவு தந்தனர்.

8. திருமணப் பணிகள்

மலையரசன் தேவதச்சனை அழைத்து திருமணத்திற்காக நகரத்தையும், மணமண்டபத்தையும் அலங்கரிக்கப் பணித்தான். திருமணப் பணிகளைக் கச்சியப்ப சிவாசாரியார் அழகாக வர்ணிக்கின்றார். தேவர் கூட்டங்களும், முனிவர் குழாமும் இமய மலையில் கூடினர். இலக்குமி, சரசுவதி, துர்க்கை, முனிபத்தினிகள், தேவ மாதர்கள் முதலியோர் பார்வதியை அலங்கரித்தனர். மலையரசன் தன் உறவினர்களுடன் கயிலைக்குச் சென்று இன்று பங்குனி உத்தர நாள். திருமணத்திற்குரிய நன்னாள். பார்வதியைத் திருமணம் செய்ய சிவனை வருமாறு அழைத்தார்.

9. கணங்களுடன் செல்லுதல்

சிவனின் திருமணக் கோலத்தைக் காண உருத்திர கணங்கள், சிவபூத கணங்கள், தேவர்கள், திக்குப் பாலகர்கள், கிரகங்கள், சப்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாதர்கள், அஷ்ட வசுக்கள், வித்தியாதரர்கள், முனிவர்கள் இன்னும் பலரும் ஏழுகடல் திரண்டதெனக் குழுமினர். பிரமன் தான் கொண்டு வந்த இரத்தினாபரணங்களைச் சிவனை அணிந்து கொள்ளும்படி வேண்டினார். பரமேசுவரனோ புன்னகைத்துத் தன் திருமேனியிலுள்ள பாம்பு, பன்றிக் கொம்பு, ஆமை ஓடு, எலும்பு முதலிய இரத்தினாபரணங்களாக ஆகத் திருவுள்ளம் கொள்ள அவை அவ்வாறாயின.

10. திருமணம் நிகழ்தல்

சிவபெருமான் கணங்களுடன் இமயமலைக்கு எழுந் தருளினார். மலையரசன் மணமகனைப் பூரண கும்பத்துடன் வரவேற்றான். மேனையும் மலையரசனும் அரம்பையர்களுடன் வந்து காமதேனுவின் பாலால் இறைவனின் இணையடிகளை அபிடேகம் செய்து வணங்கிச் சென்றனர். திருமாலும், பிரமனும் மாப்பிள்ளைத் தோழர்களாக வர சிவபெருமான், திருமணக் கோலத்துடன் மண மண்டபத்தில் எழுந்தருளினார்.

திருமணத்தைக் காண சகல புவனத்திலுள்ளவர்களும் வந்து இமயமலையில் கூடியதால் வடபகுதி தாழ்ந்து தென்பகுதி உயர்ந்தது. சிவபெருமான் அகத்தியரை அழைத்து "நீ பொதிய மலைக்குப் போ. நில உலகம் சமமாகிவிடும்" என்றார். அகத்தியர் எம்பெருமானின் திருமணக் காட்சியைக் காண முடியாமல் போய்விடுமே என வருந்தினார். சிவபெருமான் அகத்தியருக்குத் திருமணக் காட்சியைப் பொதிகை மலையில் காட்டுவதாகக் கூறினார். அகத்தியரும் பொதிகை மலை சென்றார். நிலம் சமம் ஆகியது.

துர்க்கை காக்க, இந்திராணி தாம்பூலம் தாங்க, கங்கைகள் கவரி வீச, காளிகள் குடை பிடிக்க, இலட்சுமி கை கொடுக்க, சரசுவதி தேவி துதிக்கப் பார்வதி தேவி திருமண மண்டபத்திற்கு எழுந்தருளிச் சிவபெருமானின் திருவடிகளை வணங்கி அமர்ந்தார்.

மேனை கரகத்தினின்று நீர் வார்க்க, மலையரசன் மகளின் கரங்களை இறைவனின் திருக்கரத்தில் வைத்துத் தாரை வார்த்துக் கொடுத்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரமதேவன் புரோகிதராக அமர்ந்து திருமணத்தை இனிதே நடத்திக் கொடுத்தார். திருமணச் சடங்குகளைக் கச்சியப்ப சிவாசாரியார் அழகாக வர்ணிக்கின்றார்.

இரதி வந்து சிவனை வணங்கினாள். சிவனும் தான் முன்பு வாக்குக் கொடுத்தபடி மன்மதனை உயிர்ப்பித்து அவன் இரதி கண்கட்கு மட்டும் தெரியும் வண்ணம் வரம் தந்தார். மன்மதனிடமும், **"உண்மையான சிவனடியார்பால் உன் ஆட்சி செல்லாது. மற்றவர்கள் பால் செல்லும்"** என்று கூறியருளினார்.

சிவனும் பார்வதியும் கயிலைக்கு எழுந்தருளினர். சிவபெருமான் பார்வதியைத் திருமணம் செய்தது உலகுயிர்கள் உய்யும் பொருட்டே சிவன் என்றைக்கும் பிரம்மச்சாரி. அம்பிகை என்றைக்கும் கன்னி சிவமும் சக்தியும் சேர்ந்தால்தான் எச்செயலும் நடைபெறும். எவ்வடிவம் தோன்றும். அதனால்தான் அவற்றின் சேர்க்கையைத் திருக்கலியாணம் எனச் சிவபக்தர்கள் கொண்டாடுகிறார்கள். ஆணும் பெண்ணும் ஒன்று கூடாமல் இரு பகுதியாக இதுவரை விலகியிருந்த உயிர்கள் யாவும் இத் திருமணத்திற்குப் பின் துன்பம் நீங்கி, இன்பத்தோடு போகத்தை அனுபவித்துச் சுகமாக வாழ ஆரம்பித்தன.

"மலையரையன் பொற்பாவை வாள்நுதலாள் பெண்திருவை
உலகு அறியத் தீ வேட்டான் என்னும் அது என்? ஏடி!
உலகு அறியத் தீ வேளாது ஒழிந்தனனேல் உலகு அனைத்தும்
கலை நவின்ற பொருள்கள் எல்லாம் கலங்கிடும் காண் சாழலோ"

என்று மாணிக்கவாசகர் திருவாசகத்தில் திருச்சாழலில் கூறுவது இங்கு நினைவு கூரத்தக்கது.

11. முருகன் திரு அவதாரம்

திருமணம் நிகழ்ந்து பல நாட்கள் ஆன போதிலும் இறைவன் குமரக் கடவுளைத் தந்தருளவில்லை. எனவே தேவர்கள் அனைவரும் கயிலைக்குச் சென்றனர். நந்திதேவரின் அனுமதி பெற்றுத் திருக்கோயிலினுள் நுழைந்து, சிவபெருமானை வணங்கி, அசுரர்களின் தொல்லை நீங்க மகன் ஒருவனைத் தரவேண்டும் என வேண்டினர். சிவபெருமான், "நீங்கள் வருந்த வேண்டாம். ஒரு புதல்வனைத் தருவோம்" எனக் கூறியருளினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறைவன் தன் சத்யோஜாதம், வாமதேவம், தத்புருஷம், ஈசானம், அகோரம் என்ற ஐந்து முகங்களோடு சிவஞானியர்களின் உள்நோக்குக்கு மட்டும் புலப்படும் ஆறாவது முகமான அதோமுகத்தோடு, ஆறு திருமுகங்களையும் கொண்டருளினார். அவை ஒவ்வொன்றின் நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகள் தோன்றச் செய்தார். அவை வெப்பம் மிகுந்து இருந்தன. தேவர்கள் அஞ்சினர். உமாதேவியும் சிலம்பொலிக்கத் திருக்கோயிலுக்குள் ஓடினார்.

தீப்பொறிகளின் வெம்மை நீங்கத் தேவர்கள் சிவனிடம் வேண்டினர். அவர் ஆறு தீப்பொறிகளையும் தம்மிடம் அழைத்தார். அவற்றை வாயுதேவன், அக்கினி தேவன் இருவர் கைகளிலும் தந்து அவற்றைக் கங்கையில் விடப் பணித்தார். கங்கை சரவணப் பொய்கையில் கொண்டு விட்டுவிடும் என்றார். அவற்றின் வெப்பத்தைத் தாங்கும் ஆற்றலையும் அளித்தார். சரவணப் பொய்கையில் சேர்க்கப்பட்ட தீப்பொறிகள் பரசிவ சோதிப் பிழம்பே திருமேனியாக வடிவு கொண்டது. பரம்பொருளே கருணை பொழியும் ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் கொண்டு, உலகம் எல்லாம் உய்யும் பொருட்டு முருகக் கடவுளாகத் திருஅவதாரம் செய்தருளியது.

அப்பொழுது தேவ துந்துபிகள் முழங்கின. தேவர்கள் மலர் மழை பொழிந்து துதித்தனர். உலக உயிர்கள் மகிழ்ந்தன. இவ்வாறு இறைவனின் நெற்றிக் கண்களிலிருந்து புறப்பட்ட தீச்சுடர் வானத்தில் நின்று, பின் வாயு, அக்கினி கைகளைச் சென்றடைந்து, கங்கையாகிய நீரில் தவழ்ந்து, நிலத்தை அடைந்தது. உலக நன்மைக்காக பரம்பொருள் பஞ்ச பூதங்களின் வழியே தோற்றம் பெற்றது என்பது முருகன் திருஅவதாரத் தத்துவம் ஆகும்.

தமிழ்மொழியில் உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு. முருகப் பெருமானின் தோள்கள் பன்னிரண்டு. தமிழில் மெய்யெழுத்துக்கள் ஆறாக வல்லினம், மெல்லினம், இடையினம் என முப்பிரிவாக பதினெட்டு. முருகப்பெருமானுக்கு ஆறு திருமுகங்கள் ஒவ்வொன்றிலும் மூன்று கண்களாக மொத்தம் பதினெட்டு. மு-ரு-க என்ற எழுத்துக்களில் ஒவ்வொன்றும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மெய்யெழுத்தின் ஒவ்வோர் இனத்தைச் சார்ந்தது. தமிழில் ஆய்தஎழுத்து ஃ. இச்சை, கிரியை, ஞானம் என்ற மூன்றும் மூன்று புள்ளிகளாகச் சேர்ந்தது முருகப் பெருமானின் வேலின் உருவத்தை ஒத்தது.

தேவர்கள் கார்த்திகைப் பெண்களைப் பார்த்து முருகப் பெருமானுக்குப் பாலூட்டும்படிக் கூறினர். கார்த்திகைப் பெண்கள் அறுவரும் சரவணப் பொய்கையை அடைய, அங்கு குமரக் கடவுள் ஒருவரே ஆறு தாமரை மலர்களில் ஆறு குழந்தைகளாகக் காட்சி அளித்தார். கார்த்திகைப் பெண்கள் அறுவரும், ஆளுக்கொரு குழந்தையை எடுத்துப் பாலூட்டினார்கள். சீராட்டினர். தாலாட்டினர். ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு செயலைச் செய்தது. ஒன்று தூங்கியது. ஒன்று பால் குடித்தது. ஒன்று பேசியது. ஒன்று தவழ்ந்தது ஒன்று அழுதது. ஒன்று சிரித்தது. குழந்தைகளின் செயல்களைக் கண்டு தேவர்கள் மகிழ்ந்தனர்.

12. முருகனுக்குத் துணைவர்கள் தோன்றுதல்

சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய நெருப்புப் பொறிகளைக் கண்டு உமையம்மை அஞ்சி ஓடியபோது அவளது திருவடிச் சிலம்பிலிருந்து ஒன்பது இரத்தினங்கள் உதிர்ந்தன. அவைகளில் உமையம்மையின் திருவுருவங்கள் தோன்றின. சிவபெருமான் அவ்வுருவங்களைத் தன்முன் வரும்படி அழைத்தார். அவை ஒன்பது சக்திகளாக மாறி சிவன்முன் வந்து வணங்கினர்.

அச்சக்திகளைச் சிவன் விரும்ப, அவர்கள் கருக்கொண்டார்கள் உமையம்மை கோபம் கொண்டு, ஒன்பது சக்திகளையும் பார்த்து '' இந்தக் கருவோடு நீண்ட காலம் இருப்பீர்களாக'' என ஆணையிட்டார்.

அது கேட்ட நவ சக்திகள் அஞ்சி நடுங்கினர். உடல் வியர்த்தனர். அவ்வியர்வையினின்றும் சிவனருளால் இலட்சம் வீரர்கள் தோன்றினர். சிவபெருமான் அவர்களை நோக்கி, ''மைந்தர்களே! அசுரர்களை அழிப்பதற்கு முருகப் பெருமானுக்குப் படை வீரர்களாக ஆகுக'' எனக் கூறியருளினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நவசக்திகளும் கர்ப்பத்தோடு பல காலம் இருந்தமையால் பாரம் தாங்காது இறைவனைப் பணிந்து வணங்கினர். பின் சிவபெருமானின் வேண்டுகோளுக்கு இணங்க, உமையம்மை அச்சக்திகள் குழந்தைகளைப் பெறும்படித் திருவுள்ளம் கொண்டாள்.

ஒன்பது சக்திகளுள் மாணிக்கவல்லியிடம் வீரவாகுத் தேவரும், மௌத்திகவல்லியிடம் வீரகேசரியும், புட்பராக வல்லியிடம் வீர மகேந்திரரும், கோமேதகவல்லியிடம் வீர மகேசுவரரும், வைடூரிய வல்லியிடம் வீரபுரந்தரரும், வைரவல்லியிடம் வீரராக்கதரும், மரகதவல்லியிடம் வீர மார்த்தாண்டரும், பவள வல்லியிடம் வீராந்தகரும், இந்திர நீலவல்லியிடம் வீரதீரரும் தோன்றினர்.

சிவபெருமான் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒளி பொருந்திய வாளைக் கொடுத்து, ''இலட்சம் மைந்தர்களோடு நீங்களும் சேர்ந்து முருகப் பெருமானுக்கு ஏவல் புரிவீர்களாக'' என அருளிச் செய்தார். அவர்களும் இசைந்து, சிவனை வணங்கிச் சென்றனர்.

13. ஆறு குழந்தைகளும் ஒருருவானது

சிவபெருமான் சரவணப் பொய்கையில் வளரும் குழந்தைகளைக் கொண்டு வரும்படி உமையம்மையிடம் கூறினார். உடன் உமையுடன் தானும் சரவணப் பொய்கைக்கு எழுந்தருளினார். உமையம்மை ஆறு குழந்தைகளையும் இரண்டு கைகளால் தழுவி எடுத்தாள். அவை ஒருடல் ஆறுமுகங்களை யுடைய ஒரு குழந்தை ஆயிற்று. அதனால் கந்தன் என்னும் பேர் பெற்றது. அப்பெயராலேயே அவனது வரலாறு கூறும் இந்நூல் ''கந்தபுராணம்'' என வழங்கப்படுகின்றது. பார்வதி தேவி குழந்தைக்குப் பாலூட்டினார்.

கார்த்திகைப் பெண்கள் வந்து சிவனை வணங்கினர். சிவன் ''எம் மகனை நீங்கள் வளர்த்தமையால் கார்த்திகேயன் எனப் பேர் பெறுவான். கார்த்திகை நாளில் இவனை வழிபடுவோர்க்கு நாம் இகபர நலன்களை அருள்வோம்'' எனக் கூறியருளினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உமை ஊட்டிய பாலில் சிறிது சரவணப் பொய்கையில் சிந்திப் பெருகியது. அப்பாலை உண்ட அப்பொய்கையிலுள்ள ஆறு மீன்கள் ஆறு முனிவர்கள் வடிவம் கொண்டு சிவனைத் துதித்தனர். இது கண்டு வியந்த உமை காரணம் வினவ சிவன் பின்வருமாறு கூறியருளினார். ''வசிஷ்டரின் குமாரர் சக்தி முனிவர். இளமையிலேயே இறந்து விட்டார். அப்போது கருவுற்றிருந்த அவரது மனைவி பெற்றெடுத்த பிள்ளை பராசரர். இவருக்குத் தப்தர்,அனந்தர், நந்தி, சதுர்முகர், சக்ரபாணி, மாலை என்ற ஆறு புதல்வர்கள் பிறந்தனர். ஆறுபேரும் பொய்கையில் விளையாடியபோது அதிலுள்ள மீன்கள் இறந்தன. எனவே பராசர முனிவர் தம் குழந்தைகளை மீனாகும்படிச் சாபம் கொடுத்தார், பின் புதல்வர்கள் வேண்ட, சரவணப் பொய்கையில் முருகன் அவதரிப்பார். அவனுக்கு ஊட்டப்படும் ஞானப்பால் அதில் சிந்தும். அதனை நீங்கும் சுவைத்தால் சாபம் நீங்கும் என்றார். இன்றுஅவர்கள் சாப விமோசனம் பெற்றனர்.'' என்றார் சிவன். பின் சிவன் பராசரப் புதல்வர்களை நோக்கி, ''நீங்கள் திருப்பரங்குன்ற மலையில் தவம் செய்யுங்கள். முருகன் அங்கு வந்து அருள் செய்வான்'' என்று கூறி விடை கொடுத்தார்.

சிவன் உமையம்மை கந்தனோடு கயிலையிலுள்ள பொற் கோயிலில் வீற்றிருந்தருளினார். நவ வீரர்களும், இலக்க வீரர்களும் கந்தப் பெருமானுக்குத் தொண்டு செய்து வரலாயினர்.

14. ஆறுமுகனின் அருள் விளையாடல்கள்

ஆறுமுகப் பெருமான் தன் அழகிய திருவடிகளில் தண்டை, சிலம்பு, வீரக்கழல், சதங்கைகள் ஒலிக்கவும், அரைஞாணில் கோத்த மணிகள் ஒலிக்கவும், செவிகளில் குண்டலமும், மார்பிலே மதாணியும், நெற்றியிலே வீரபட்டமும் ஒளிவீச திருவிளையாடல்கள் பலசெய்யத் தொடங்கினான்.

எவராலும் இத்தன்மையன் என்று கூற முடியாத இயல்புடைய பரமசிவன் பெற்ற பாலகன் அண்டங்கள் அனைத்திலும் உலாவுவான். நடந்தும் செல்வான். குதிரை, யானை, தேர், சிங்கம்,ஆட்டுக்கடா மீதும் செல்வான். விமானத்திலும் செல்வான். மணி அடிப்பான். குழல் ஊதுவான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொம்பு ஊதுவான். வீணை மீட்டுவான். தோல் கருவிகளை முழக்குவான். பாடுவான். ஆடுவான்.

கந்தக் கடவுளின் திருவிளையாடல்களைக் கண்டு வியந்த உமையம்மை, அவனுடைய பெருமைகளைக் கூறும்படி இறைவனிடம் வேண்டினான். சிவபெருமான், ''உமையே நம்மகன் கங்கையில் தவழ்ந்ததால் **காங்கேயன்** என்னும் பேர் பெற்றான். சரவணப் பொய்கையில் அமர்ந்ததால் **சரவணபவன்** எனப்படுவான். கார்த்திகைப் பெண்களால் பாலூட்டி வளர்க்கப்பட்டதால் **கார்த்திகேயன்** எனப்படுவான். நீ அவனின் ஆறு வடிவங்களையும் சேர்த்து ஒரு வடிவம் ஆக்கியதால் **கந்தன்** என்னும்பெயர் பெற்றான். எம்முடைய ஆறுமுகமே அவனுடைய ஆறுமுகம். பிரணவம் ஓர் எழுத்தாக முதலில் சேர்த்து எம் பஞ்சாட்சர மந்திரத்தின் ஆறு எழுத்துக்களும் ஒன்று சேர்ந்து அவனை ஆறுஎழுத்துக்களாக அமைந்தன (சிவனின் ஆறெழுத்து - ஓம் நமசிவாய; முருகப் பெருமானின் ஆறெழுத்த சரவணபவ) எமது சக்தியே அவன். அவனும் யாமும் வேறுபாடு உடையவர் அல்லோம். அவன் யாண்டும் நிறைந்தவன். முற்றறிவினன். தன்னை அன்போடு வழிபடுவோர்க்கு செல்வத்தையும் ஞானத்தையும், அழியாத முக்தியையும் அருள வல்லவன். இனிமேல் அவன் பிரணவத்தின் பொருளறியாது மயங்கும் பிரமனைக் குட்டிச் சிறை இருத்துவான். சூரபன்மாதியர்களை அழித்துத் தேவர்கட்கு அருள் புரிவான். நீ பிற்காலத்தில் இவற்றை நேரில் பார்ப்பாய் '' என்பது கூறியருளினார்.

முருகப் பெருமானின் திருவிளையாடல்களைக் கச்சியப்ப சிவாசாரியார் விவரித்துக் கூறுகிறார். அவனின் திருவிளையாடல்களால் ஐம்பூதங்களும் நிலை கலங்கின. தேவர்களும் அஞ்சினர். இவனுடைய ஆற்றல் அசுரர்களின் ஆற்றலைக் காட்டிலும் கொடியதாக உள்ளது எனக் கருதி அவனுடன் போர் செய்யப் புறப்பட்டனர்.

இந்திரன் குலிசம், வாள், வில், வேல் முதலிய ஆயுதங்களை ஏந்தி வெள்ளை யானையில் ஏறி முருகப் பெருமானோடு போர் செய்யத் தொடங்கினன். பலவகை ஆயுதங்களால் இந்திரன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முருகப் பெருமானைத் தாக்கினான். ஆனால் ஒரு ஆயுதமும் முருகப்பெருமானை ஒன்றும் செய்யவில்லை.

முருகப் பெருமான் சங்கல்ப மாத்திரத்தில் ஒரு வில்லையும், பல கணைகளையும் படைத்து இந்திரனையும் அவனுடைய யானை ஐராவதத்தையும் தாக்கி வீழ்த்தினார். வருணனையும், இயமனையும், சூரியனையும் சந்திரனையும் வாயுவையும் அக்கினியையும் வதம்செய்தார். எஞ்சிய தேவர்கள் அஞ்சி ஓடி ஒளிந்தனர்.

இந்நிகழ்ச்சியை நாரதர் கண்டார். தேவகுருவாகிய வியாழனிடம் சென்று கூறினார். அவர் வந்து, ''முருகப் பெருமானே! இந்திரன் அசுரர்களால் துன்புறுத்தப்பட்டான். பதவி இழந்தான். உம்மால் அசுரர்களைக் கொன்று தம் பதவியைப் பெறலாம் எனத் தவம் புரிந்தான். நீர் அவதரித்ததும் மகிழ்ந்தான். ஆனால், உம்மை யார் என்று அறியாமல் போர் புரிந்து அவனும், தேவர்கள் பலரும் மாண்டனர். நீ அவர்களை மன்னித்து அருள் புரிய வேண்டும்'' என்று வேண்டினார்.

முருகப் பெருமான் திருவருளால் இறந்த தேவர்கள் அனைவரும் உயிர் பெற்று எழுந்தனர். முருகனைப் புகழ்ந்தனர். பாலன் என நினைத்து, இகழ்ந்து தன்னுடன் போர் செய்த தேவர்கள் தன் பெருமையை உணரும் வண்ணம் முருகப் பெருமான் பேருருவம் எடுத்தார். தேவர்களால் முற்றும் தரிசிக்க முடியவில்லை. பின் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அறிவுக்கண் அவர்கட்குத் தந்தார். அனைவரும் முருகப் பெருமானின் விசுவரூபத்தை அடி முதல் முடிவரை தரிசித்து, ஆனந்த பரவசத்துடன் வணங்கினர். பின் முருகப் பெருமான் தனது விசுவரூபத்தை மறைத்து, முன்னைய வடிவில் காட்சி தந்தார்.

இந்திரன், ''எம்பெருமானே! தங்களின் திருவிளையாடல் களால் அண்டங்களெல்லாம் முறை பிறழ்ந்தன. அவற்றை முன்பு போல நிறுவியருள வேண்டும்'' என இறைஞ்சினான். எம்பெருமானும் ''நம்மால் முறை பிறழ்ந்தன எல்லாம் பண்டைய நிலையை அடையக் கடவன'' என சங்கல்பம் செய்தார். உடனே அவை முன்னை நிலையை அடைந்தன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பின் முருகப் பெருமான் தேவர்கள் பின் தொடர மேருமலையிலிருந்து புறப்பட்டுக் கயிலைமலைக்கு அருகிலுள்ள ஒரு மலையை அடைந்தார். அங்குத் தேவதச்சன் அமைத்த ஆலயத்தில் ஒப்பற்ற அரியணையில் அமர்ந்தார். இந்திரனும் மால், அயனாதி தேவர்களும், ''ஞான நாயகரே! நாங்கள் உமது சேனைகள். தாங்கள் எமக்குச் சேனாபதியாகுக'' என்று கூறி ஆகாய கங்கையால் திருமஞ்சனம் செய்து அர்ச்சித்துப் போற்றி வழிபட்டு தேவசேனாபதியாக முருகப் பெருமானுக்கு முடி சூட்டினார்கள்.

தேவர்கள் பூசிக்கக் கந்தக் கடவுள் எழுந்தருளிய மலை ''கந்தவெற்பு'' எனப் பெயர் பெற்றது. பின் முருகப் பெருமான் திருக்கயிலையை அடைந்தார். தேவர்கள் தத்தம் இருப்பிடம் சென்றனர்.

15. ஆட்டு வாகனம் பெறுதல்

சிவனருள் பெற நாரத முனிவர் ஒரு வேள்வி செய்யத் தொடங்கினார். தேவர்கள் பலர் அதில் கலந்து கொண்டனர். வேள்வி செய்யும் போது மந்திரம் மாறுபட்டதால் யாக அக்கினியிலிருந்து செவ்வானம் போன்ற நிறத்துடன் ஓர் ஆட்டுக்கடா தோன்றியது. பெருஞ் சினத்துடன் ஆரவாரித்தது. நாரத முனிவர் முதலியோர் நடுங்கி யாக சாலையை விட்டு வெளியே ஓடினர். ஆட்டுக்கடா அவர்களை துரத்திச் சிதைத்தது. யாராலும் அதை அடக்க முடியவில்லை. நாரதர் முதலியோர் கயிலைக்குச் சென்றனர். கந்தப் பெருமானைக் கண்டனர். ஆட்டுக்கடாவிடமிருந்து தங்களை காப்பாற்ற வேண்டினர்.

அதைக் கேட்ட கந்தப் பெருமான்,அந்த ஆட்டினை அடக்கிக் கொண்டு வரும்படி வீரபாகு தேவருக்குக் கட்டளை இட்டார் ஆட்டுக்கடா பல உலகங்களையும் நாசம் செய்து பிரமனின் உலகமாகிய சத்திய லோகத்தில் இறுமாந்து நின்றிருந்தது. வீரபாகுதேவர் அதைப் பிடித்துக் கயிலைக்குக் கொண்டு வந்தார். கந்தப் பெருமான் தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஆட்டுக்கடாவைத் தன் வாகனமாக ஏற்றுக் கொண்டார். நாரதர் முதலியவர்களை வேள்விகளை மீண்டும் செய்யுமாறு பணித்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

16. பிரமனைச் சிறையிலிடுதல்

ஒருநாள் பிரமன் உள்ளிட்ட தேவர்கள் கைலைக்குச் சிவனை வழிபடச் சென்றனர். சிவ சந்நிதிக்குச் செல்லும் வழியில் முதல் கோபுர வாயிலின் வடபுறம் சிங்காதனத்தில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானைப் பிரமன் தவிர ஏனையோர் வழிபட்டுச் சென்றனர். திரும்பி வரும் வழியில், முருகப்பெருமான் தருக்குடன் சென்ற பிரமனை அழைத்தார். அவன் பெருமானை லேசாகக் கைகளை மட்டும் சிறிது கூப்பி வழிபட்டான். பிரமனின் ஆணவத்தை முருகப் பெருமான் உணர்ந்தார். அருகில் அழைத்து அமரச் செய்து, ''என்ன தொழில் செய்கிறாய்? எனக் கேட்டார். சிவபெருமான் ஆணையினால் படைத்தல் தொழிலைச் செய்வதாகப் பிரமன் கூறினான். முருகப் பெருமான் ''வேதங்கள் எல்லாம் தெரியுமா?'' என வினவினார். தெரியும் என்றான் பிரமன்.''முதல் வேதமாகிய இருக்கு வேதத்தைச் சொல்'' என்று முருகப் பெருமான் கூறினார். பிரமனும்'ஓம்' என்ற குடிலை மந்திரத்தைக்கூறி இருக்கு வேதத்தைச் சொல்ல ஆரம்பித்தார். முருகப்பெருமான், ''ஓம் என்றபிரணவ மந்திரத்தின் பொருள் யாது?'' எனக் கேட்டார். பிரமன் பொருள் தெரியாது விழித்தான். திகைத்தான்.

சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பீடமாயும், எல்லா மந்திரங்கட்கும், வேதங்கட்கும் மூலமாயும் தேவர்கட்கெல்லாம் பிறப்பிடமாயும் காசியில் இறப்பவர்கட்கு எம்பெருமான் உபதேசித்தருளும் தாரகப் பிரமமாயும் விளங்குவது பிரணவ மந்திரம். தாரகம் என்ற சொல்லுக்குத் தாண்டச் செய்வது எனப் பொருள்.பிறவிப் பெருங்கடலைத் தாண்ட (கடக்க) உதவுவதால் ஓம் என்பது தாரக மந்திரம் எனப்பட்டது.

''பிரணவத்தின் பொருளை அறியாத நீ படைத்தல் தொழிலை எவ்வாறு புரிவாய்?'' என்று கூறி, பிரமனின் நான்கு தலைகளும் குலுங்கும் வண்ணம் முருகப்பெருமான் குட்டினார். அவனது ஆணவம் அழியும்படித் தம் திருவடியால் உதைத்து, திருவடி தீட்சை தந்தருளினார். முருகப் பெருமான் வீரவாகு தேவரை நோக்கிப் பிரமனைக் கந்த வெற்பில் உள்ளசிறை ஒன்றில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடைக்கும்படி ஆணையிட்டார். பின் தாமே படைப்புத் தொழிலை மேற்கொண்டார்.

"உகந்த பிரணவத்தின் உண்மை - புகன்றிலையால்
சிட்டித் தொழிலதனைச் செய்வது எங்ஙன் என்று முனங்
குட்டிச் சிறையிருத்தும் கோமானே" (கந்தர் கலிவெண்பா)

என்று குமரகுருபரர் முருகப் பெருமானைப் போற்றுவது இங்கு நினைவு கூறத்தக்கது.

17. பிரமனைச் சிறையிலிருந்து விடுவித்தல்

முருகப் பெருமானே பல காலம் படைப்புத் தொழிலைச் செய்து வரலானார். பிரமனைச் சிறையிலிருந்து மீட்க எண்ணிய திருமால், தேவர்கள், முனிவர்கள் சூழ கயிலை வென்று சிவனிடம், முருகப் பெருமான் பிரமனைச் சிறையில் இட்டதைக் கூறினார். சிவன் பிரமனைச் சிறையிலிருந்து விடுவிக்க முருகப் பெருமானிடம் கூறும்படி நந்திதேவரை அனுப்பினார். நந்தி தேவரும் கந்தவெற்பு சென்று பிரமனை விடுவிக்குமாறு சிவபெருமான் கூறியருளியதாக முருகப்பெருமானிடம் தெரிவித்தார். முருகப் பெருமானோ மறுத்து விட்டார். நந்தி தேவர் திரும்பி வந்து சிவபெருமானிடம் தெரிவித்தார். சிவபெருமான் தாமே கந்த வெற்புக்கு எழுந்தருளினார். தந்தையைக் கண்ட தனயன் எழுந்து வணங்கி வரவேற்றான். பிரமனை சிறையிலிருந்து விடுவிக்கத் தான் வந்ததாகச் சிவன் கூறினார். முருகப் பெருமான், "தந்தையே பிரணவத்தின் பொருள் தெரியாதவன் உலகத்தைப் படைப்பது பேதைமை. அவனை விடுவிப்பது முறையன்று" என்றார்.

சிவபெருமான் , "மகனே! நமது ஆணைப்படி நந்திதேவர் வந்து கூறியும் நீ கேட்கவில்லை. நாமே நேரில் வந்து கூறியும் மறுக்கலாமோ?" என்றார். முருகப் பெருமான் "தங்களின் திருவுளம் இதுவாயின் விடுவிக்கிறேன்" என்று கூறி, பூதர்களில் சிலரை நோக்கி "நீங்கள் பிரமனைச் சிறை நீக்கி அழைத்து வாருங்கள்" என பணித்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரமனும் வந்து சிவபெருமானையும், முருகனையும் வணங்கினார். சிவபெருமான், ''பிரமனே! சிறைவாசத்தால் இளைத்தனை போலும்'' என்றார். பிரமன், ''தங்களின் திருக்குமாரர் அடியேனுக்கு அளித்த இத்தண்டனை சிறைவாசம் அன்று தவச்சாலை வாசம். அடியேன் ஆணவம் அழிந்து புனிதனானேன்'' என்றார். சிவபெருமான் பிரமனை முன்புபோல படைப்புத் தொழில் செய்ய அருள்பாலித்தார்.

பின் சிவபெருமான் தன் புதல்வனை மடியில் அமர்த்தி, உச்சிமோந்து, அன்புடன் தழுவி, பிரணவப் பொருளைத் தமக்குச் சொல்லியருளுமாறு வேண்டினார். காலம் இடம் அறிந்து முறைப்படி கேட்டால் சொல்வோம் என்று முருகப் பெருமான் கூறினார். சிவபெருமானும் எழுந்து கைகளைக் குவித்து, சிரம் தாழ்த்தி, வாய் பொத்தி நின்றார். முருகப் பெருமானும் சிவனார் மனம் குளிர செவிகளில் பிரணவப் பொருளைச் சொல்லியருளினார். சிவபெருமான் கயிலை சென்றார். இவ்வற்புதம் நிகழ்ந்த இடம் திருவேரகம் அல்லது சுவாமிமலை என்று கூறப்படும். இத்தலம் சோழநாட்டில் கும்பகோணத்திற்கு அருகிலுள்ளது.

முருகப்பெருமானிடம் சிவபெருமானே உபதேசம் கேட்டார் என்பதை அறிந்த அகத்தியர் கந்தவெற்பு வந்து தனக்கும் உபதேசித்தருள வேண்டினார். முருகப்பெருமானும் ஓர் எழுத்து மந்திரத்தின் உண்மைப் பொருளையும், இறைவன் அருளிய வேத சிவாகமங்களின் மெய்ப்பொருளையும் உலகெலாம் உய்யும் பொருட்டு அகத்தியருக்கும் உபதேசித்தருளினார்.

18. விடைபெறுதல்

திருமாலுக்கு அமிர்தவல்லி, சுந்தரவல்லி என இரு பெண்குழந்தைகள். இருவருமே முருகப் பெருமானை மணம் செய்ய விரும்பிச் சரவணப் பொய்கையில் தவம் செய்தனர். முருகப் பெருமான் அவர்கள் முன் தோன்றினார். இருவரும் தங்கள் வேண்டுகோளைத் தெரிவித்தனர். முருகப் பெருமான் அமிர்தவல்லியைத் தேவலோகத்தில் இந்திரனிடம் வளரும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

படியும், சுந்தரவல்லியைப் பூவுலகில் சிவமுனிக்குப் புதல்வியாக வேடர் மகளாக வளரும்படியும், தன் அவதார நோக்கம் நிறைவேறியதும் உரிய காலத்தில் வந்து இருவரையும் திருமணம் செய்து கொள்வதாகவும் கூறியருளினார்.

அமிர்தவல்லி அழகிய குழந்தை வடிவில் இந்திரன் முன் சென்று, ''தேவர் கோமானே! நான் உன்னுடன் உபேந்திரனாகப் பிறந்த திருமாலின் மகள். என்னை வளர்ப்பீராக'' என்றாள். தேவேந்திரன் தன் ஊர்தியான ஐராவதத்தை அழைத்து, ''இவள் நம்மகள். அன்புடன் வளர்க்க'' என்றான். தேவராஜனின் யானை வளர்த்ததால் அக்குழந்தைக்குத் தெய்வானை என்ற பெயர் ஏற்பட்டது. சேனையும், அரசும் இழந்து தவித்த தேவராஜனுக்கு ஒரு சேனையே கிடைத்தாற் போன்ற மகிழ்ச்சி தந்ததால் தேவசேனை என்றும் கூறுவர்.

இளையவளாகிய சுந்தரவல்லி தொண்டை நாட்டிலுள்ள வள்ளி மலையில் வேடர்குலப் பெண்ணாக வளர்ந்து வரலானாள்.

பிரமன், திருமால், தேவர்கள் முதலியோர் கயிலைக்கு வந்து சிவபெருமானிடம் அசுரர்களால் தாங்கள் படும் துன்பங்களை அவரது புதல்வரைக் கொண்டு தீர்த்தருளுமாறு முறையிட்டனர். சிவபெருமான் தேவர்களின் துயர் தீர்க்கத் திருவுளம் கொண்டார். குமரக் கடவுளைச் சூரனாதியர்களை வெல்ல பூதப் படைகளுடன் புறப்படப் பணித்தார்.

சிவபெருமான் பதினொரு உருத்திரர்களைத் தம் திருவுள்ளத்தில் நினைக்க அவர்கள் சிவன் முன் தோன்றினர். பதினொரு பேரும் தோமரம், கொடி, வாள், குலிசம், அம்பு, அங்குசம், மணி, தாமரை, தண்டு, வில், மழு ஆகிய ஆயுதங்களாக மாற் முருகப்பெருமானின் கரங்களில் வீற்றிருந்தனர்.

ஐம்பெரும் பூதங்களை அழிக்க வல்லதும், எல்லா உயிர்களையும் ஒரு சேர முடிக்க வல்லதும், யார் மேல் விடுப்பினும் அவர்களின் வரங்களை அழித்து உயிரைக் கொல்வதும், எல்லா ஆயுதங்கட்கும் தலைமையாக விளங்குவதும் ஆகிய ஒப்பற்ற ஒளி பொருந்திய வேலாயுதத்தை உண்டாக்கிக் குமரன் திருக்கரத்தில் சிவபெருமான் கொடுத்தருளினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முருகப்பெருமான் அம்மையப்பரை வணங்கி விடை பெற்றார். இருவரும் குமரன் வெற்றி பெற வாழ்த்தினர்.

ஒரு இலக்கத்து ஒன்பது வீரர்களும் முருகப் பெருமானுக்குத் துணையாகச் செல்ல சிவபெருமான் ஆணையிட்டார். நந்தி உள்ளிட்ட கணநாதர்களை நோக்கி இரண்டாயிரம் வெள்ளம் பூதங்களோடு படைத் தலைவர்களாகச் செல்லப் பணித்தார். இலக்கம் குதிரைகள் பூட்டப்பட்ட, மனத்தை விட வேகமாகச் செல்லக்கூடிய தேரினைக் குமாரனுக்குக் கொடுத்தார். தேவர்கள் சிவபெருமானை வணங்கி மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்தனர். அவர்களையும் குமாரனோடு செல்லும்படிச் சிவபெருமான் விடை கொடுத்தருளினார்.

19. படை எழுதல்

திருமால் வாயுதேவனைப் பார்த்து, ''நீ முருகப் பெருமானுக்குத் தேர்ப்பாகனாக இருந்து தேரைச் செலுத்து'' என ஆணையிட்டார். அதன்படி வாயுதேவன் சாரதியாகத்தேரை ஓட்ட, இலக்கத்து ஒன்பது வீரர்கள், இரண்டாயிரம் வெள்ளம் பூதகணங்கள் நூற்றெட்டுச் சேனாதிபதிகளோடு, படைகள் படைக்கலங்கள் பல தாங்க முருகப்பெருமான் பூவுலகிற்கு வந்தார்.

20. தாரகன் வதம்

முருகப் பெருமான் சேனையுடன் செல்லும் வழியில் கிரௌஞ்சமலை எதிர்ப்பட்டது. அம்மலையைப் பார்த்துத் தேவர்களும், இந்திரனும் நடுங்கினர். அங்கு நாரதர் வந்து முருகப் பெருமானை வணங்கி, ''எம்பெருமானே! இம்மலையின் பெயர் கிரௌஞ்ச மலை. அந்தணர்,அருந்தவர் முதலியோர் இவ்வழியில் செல்லும்போதுஇது தவறான வழிகாட்டி, மாயை செய்து அவர்களைக் கொல்வது வழக்கம். அகத்திய முனிவரின் சாபத்தால் இம்மலை இவ்வடிவில் நிற்கிறது. இம்மலைக்க அருகில் மாயாபுரி என்னும் நகரம் உள்ளது. அங்குச் சூரனின் தம்பி தாரகன் வசிக்கிறான். யானை முகம் உடையவன் போரில் விஷ்ணுவை வென்று அவருடைய சக்கரத்தை மார்பில் பதக்கமாக அணிந்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துள்ளான். இவனை முதலில் கொன்றான். இவனுடைய தமையனான சூரனைக் கொல்வது எளிது'' என்றார்.

வீரவாகுதேவர் முருகப் பெருமானை வணங்கி, ''பகைவனின் தம்பியுடன் போர் செய்யத் தங்களின் தம்பியாகிய என்னை அனுப்புங்கள்'' என வேண்டினான். முருகப் பெருமானும் இசைய, தேவதச்சன் ஒரு கணப்பொழுதில் பல தேர்களைச் செய்துதர, வீரவாகு தலைமையில் வீரர்கள் மாயாபுரிக்குப் படையுடன் போர்புரியச் சென்றனர்.

தாரகனின் தூதர்கள் ஓடிப்போய் அவனிடம், ''தங்களின் தமையன் சூரபத்மன் சிறை வைத்துள்ள தேவர்களை மீட்க சிவபெருமானின் குமாரர் படைகளுடன் வந்துள்ளார்'' எனப் பதறிக் கூறினர். அது கேட்ட தாரகன் பலவித படைகளுடன் போருக்குப் புறப்பட்டான்.

கடும்போர் நடந்தது. அசுரர்கள் பலர் அழிந்தனர். பூதப்படைகளில் சில அழிந்தன. பூதப் படைகளால் தன் சேனை அழிவதைக் கண்டு கோபம் மிகுந்த தாரகன் தன் கையிலிருந்த பெரும் தண்டத்தால் பூதர்கள் பலரை அடித்துக் கொன்றான். பூத சேனாபதிகள் எதிர்க்கும் வலிமையின்றிப் புறமுதுகிட்டு ஓடினர். அது கண்ட இலக்கம் வீரர்கள் தாரகனை வளைத்துக் கொண்டு தெய்வப் படைக்கலங்கள் பலவற்றை அவன் மீதுவீசினர். அவை தாரகனுக்குத் தீங்கு விளைவிக்காமல் துகளாயின.

இதுகண்ட வீரகேசரி நூறு அம்புகளைத் தாரகன் மீது விட, அவன் மகுடம் கீழே விழுந்தது. தேவர்கள் பூமாரி பொழிந்தனர். வெட்கமும் கோபமும் கொண்ட தாரகன் தன்கைத் தண்டத்தை வீரகேசரி மார்பின் மீது எறிய அவன் மயங்கி விழுந்தான். தாரகன் தேர் மீது ஏறி வேறொரு மகுடத்தை அணிந்து கொண்டான்.

வீரவாகு தேவர் ஓடி வந்து அம்புகளை எய்து தாரகனின் வில்லை ஒடித்தார். தாரகன் வீரவாகு மீது சூலாயுதத்தை எறிந்து மயங்கி விழச் செய்தான். வீரவாகுவின் தம்பியர் எழுவரும் தாரகனை எதிர்த்துப் போரிட்டுத் தோற்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதற்குள் மயக்கம் தீர்ந்து எழுந்த வீரவாகுத் தேவர் மீண்டும் தாரகனுடன் கடுமையாகப் போர் புரிந்தார். தாரகன் எய்த படைக்கலங்கள் அனைத்தையும் வீரவாகு தடுத்து நிறுத்திவிட்டார். எனவே தாரகன் மாயப்போர் புரியத் தொடங்கினான். உடனே வீரவாகுத் தேவர் வீரபத்திரப் படைக்கலத்தை எடுத்தார். உடனே தாரகனுடைய மாய உருவங்களெல்லாம் அழிய, அவன் புறமுதுகிட்டு ஓடி கிரௌஞ்ச மலையின் குகையில் போய் ஒளிந்து கொண்டான். அவனைத் தேடிக் குகைக்குள் நுழைந்த வீரவாகுத் தேவர், அவனைக் காணாதும், திரும்பி வர வழி தெரியாதும் மயங்கி விழுந்தார். வீரவாகு திரும்பி வாரததைக் கண்ட தம்பியர்களும், பூதப்படைத் தலைவர்களும் குகையினுள் சென்று அதன் மாயத்தால் மயங்கி விழுந்தனர்.

தாரகன் அனைவரும் மாயத்தால் இறந்தனர் எனக் கருதி வெளியே வந்து பூதப் படைகளுடன் மீண்டும் போர் செய்யத் தொடங்கினான். இது கண்ட நாரதர் முருகப் பெருமானிடம் சென்று நிகழ்ந்ததைக் கூறினார். முருகப்பெருமான் தாமே போருக்குப் புறப்பட்டார்.

சிவகுமாரனைக் கண்ட தாரகன், ''இவர் எம்முன் போர் புரிய வந்தாரெனின் கற்பனையையும் கடந்த ஆதிக் கடவுள் இவரே போலும்'' என்று கருதினான். சிவபெருமான் தனக்குஅளித்த ஒப்பற்ற வரங்களை நினைத்தான். ''சிவபெருமானுக்கும் எங்களுக்கும் போர் நிகழக் காரணம் இல்லையே! அப்படியிருக்க நீ போர் செய்ய வந்தது ஏன்?'' எனக் கேட்டான்.

''அறவழியில் நடப்பவர்கட்கு அருளையும், மறவழியில் செல்வோர்க்குத் தண்டனையையும் தருபவர் சிவபெருமான். நீங்கள் தேவர்களைச் சிறையிலிட்ட கொடுமையை நினைத்து உமது வீரத்தையும் ஆற்றலையும் அழிக்குமாறு எம்மை ஏவினார்'' என்றார் முருகப் பெருமான்.

''எம்மை எதிர்த்து வென்றவர் எவரும் இலர். நீ முன்னர் அனுப்பிய படைத் தலைவர்களை வென்று கிரௌஞ்ச மலையில் அகப்படுமாறு செய்தேன். நீ அறியாய் போலும்'' என்றான் தாரகன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"மாயையின் உறைவிடமாகிய கிரௌஞ்ச மலையையும், உன்னையும் எம் வேற்படையால் வென்று எம் சேனைகளை விரைவில் மீட்கின்றோம்" என்றார் முருகப்பெருமான்.

இருவருக்கும் கடும்போர் நிகழ்ந்தது. முருகப் பெருமான் எய்த அம்புகள் தாரகனின் உடல் முழுவதையும் துளைத்தன. தாரகன் தன் தெய்வப் படைக் கலங்களை முருகப் பெருமான் மீது ஏவினான். அவை அஞ்சி முருகப் பெருமான் பக்கத்தே ஒதுங்கி நின்றன. இறுதியில் தன் தந்தையாகிய சிவபெருமானைத் தியானித்து அதனைத் தம் திருக்கரம் நீட்டிப் பற்றிக் கொண்டார்.

தாரகன் கிரௌஞ்ச மலை முன் சென்று மாயைகளைச் செய்யும்படிக் கட்டளையிட்டான். முருகப் பெருமான் தன் கையிலுள்ள வேலாயுதத்தை நோக்கி, "நீ தாரகனையும், கிரௌஞ்ச மலையையும் அழித்து, குகையில் மயங்கிக் கிடக்கும் வீரர்களையும் மீட்டுக் கொண்டுவா" எனப் பணித்தார். தாரகன் அழிந்தான். கிரௌஞ்சமலை வீழ்ந்தது. மயங்கிக் கிடந்தவர்கள் உணர்வு பெற்று எழுந்து முருகப் பெருமான் முன் வந்து வணங்கித் துதித்தனர். முருகப் பெருமான் தாரகன் ஏவிய சிவப் படைக்கலத்தை வீரவாகுத் தேவரிடம் கொடுத்தார். தேவர்களெல்லாம் துதிக்கப் போர்க்களத்தினின்றும் புறப்பட்டார்.

21. தேவகிரி அடைதல்

இமயவெற்பைக் கடந்து தென்திசையிலுள்ள தேவகிரியை அடைந்தார். இரவு வந்தது. தேவர்கள் முருகப் பெருமானை தேவகிரியில் எழுந்தருள வேண்டினர். முருகப் பெருமானின் ஆணையால் தேவதச்சன் அங்கு ஒரு அழகிய நகரம் அமைத்து செம்பொன் கோயில் கட்டி, இரத்தின சிங்காதனமும் அமைத்து முருகப் பெருமான் முன் வந்து நின்றான். முருகப் பெருமான் அத்திரு நகரத்துள் சென்று, திருக்கோயிலினுள் புகுந்து சிம்மாசனத்தில் எழுந்தருளினார். தேவர்கள் முருகப் பெருமானைக் கங்கை நீரால் அபிடேகித்து நறுமண மாலை சூட்டி, சந்தனக் குழம்புசாத்தி, அழகிய ஆபரணங்களால் அலங்கரித்து, மலர்கள் தூவி அர்ச்சித்து, தூபதீபம் காட்டி, போற்றி வழிபட்டனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

22. அசுரேந்திரன் மகேந்திரம் செல்லுதல்

தாரகன் இறந்த செய்தியைத் தூதர் சொல்லக் கேட்ட அவன் மனைவி சௌரியும், மற்ற மனைவிகளும் போர்க்களம் சென்று அவனின் உடலைக் கண்டுப்புலம்பி அழுதனர். அவ்வமயம் தாரகனின் புதல்வன் அசுரேந்திரன் சிங்கமுகனுடைய நகரான ஆசுரபுரிக்குச் சென்றிருந்தான். தந்தையின் மரணச் செய்தியைக் கேட்டு விரைந்து வந்து ஈமக் கடன்களைச் செய்தான். தனயன் தடுத்தும் கேளாமல் தாயார்கள் உடன்கட்டை ஏறினர். அசுரேந்திரன் வீரமகேந்திரபுரி அடைந்து தன் பெரிய தந்தை சூரபத்மனிடம், தன் தந்தையும் தாயரும் இறந்ததைக் கூறி அழுதான். சூரபத்மன் கோபமுற்றுப் போருக்குப் புறப்பட எழுந்தான்.

அப்போது அமோகன் என்னும் அமைச்சன் சூரபன்மனை வணங்கி, ''அரசே! சாம, தான, பேதம் என்ற முதல் மூன்று உபாயங்களைப் பின்பற்றாமல் எடுத்த எடுப்பில் நான்காவது உபாயமாகிய போருக்குப் புறப்படுவது முறையன்று. தங்கட்குச் சமமானவர் எவரும் இல்லை என்பது உண்மைதான். நேற்றுப் பிறந்த குழந்தை மீது மகா சூரராகிய தாங்கள் போருக்குப் போவது ஒரு வேளை பழிப்புக்கு இடமாகலாம். முதலில் பகைவரின் பலத்தை ஆராய்வோம். பின் போர் செய்வோம்'' என்றான்.

சூரபன்மன் அதனை ஏற்று பகன், மயூரன், சேனன் சக்கரவாகன், சுகன் முதலிய தூதர்களைக் கூப்பிட்டு முருகப் பெருமானின் படை வலிமையை ஆராய்ந்து வரப் பணித்தான். அவர்களும் சென்றனர்.

23. முருகப் பெருமானின் வழிநடைப் பயணம்

தேவகிரியிலிருந்து முருகப் பெருமான் தேவர்களும் சேனைகளும் புடை சூழத் தென்திசை நோக்கிப் புறப்பட்டார். திருகேதாரம், காசி, திருப்பருப்பதம், திருவேங்கடமலை, திருக்காளத்தி, திருவாலங்காடு, காஞ்சி, திருவண்ணாமலை, திருவெண்ணெய் நல்லூர், விருத்தாசலம், தில்லை முதலிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருத்தலங்களைத் தரிசித்து பின் காவிரியின் வடகரையிலுள்ள மண்ணியாற்றங்கரையை அடைந்தார்.

24. குமாரபுரி

மண்ணியாற்றங்கரையிலே தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கத் தேவதச்சனைக் கொண்டு ஓர் அழகிய நகரம் அமைக்கச் செய்து முருகப் பெருமான் எழுந்தருளினார். அந்நகரம் திருச்சேய்ஞலூர் எனப்படும். இதனைக் குமாரபுரி என வடமொழியில் கூறுவர்.

தாரகன் அழிந்ததைக் கண்ட இந்திரன் மகிழ்ச்சியுடன் அங்கு முருகப் பெருமானுடன் தங்கியிருந்தான். அப்போது சீர்காழியிலிருந்து ஒரு வனதேவதை அங்கு வந்தது. முன்பு இந்திரன் இந்திராணியுடன் சீகாழியில் தவம் செய்து கொண்டு இருந்தபோது தன்னிடம் அடைக்கலமாகக் கொடுத்திருந்த இந்திராணியின் ஆபரணங்களை அவனிடம் திரும்பக் கொடுத்தது. மனைவியின் ஆபரணங்களைக் கண்ட இந்திரன் காம நோயால் வருந்தினான். முருகப் பெருமானுடன் தங்கியிருந்த போது தனக்குக் காம உணர்வு வந்ததே என வெட்கினான். வருந்தினான். காலையில் முருகப் பெருமான் சந்நிதி சென்று வணங்கினான்.

முருகப் பெருமான் தாம் சிவபூஜை செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய இந்திரனைப் பணித்தார். இந்திரனும் பூசைக்குரிய உபகரணங்களை உடனே தருவித்தான். முருகப் பெருமான் தேவதச்சனைக் கொண்டு அங்கு ஒரு சிவாலயத்தை எழுப்புவித்துச் சிவாகம விதிப்படி சிவலிங்கத்தை ஸ்தாபித்துச் சிவபூசை செய்தார்.

சிவபெருமான் உமாதேவியோடு இடப வாகனத்தில் காட்சியளித்தார். உலகம் முழுவதையும் ஒரு நொடியில் அழிக்க வல்ல உருத்திரப் பாசுபதப் படைக்கலத்தை முருகப் பெருமானுக்குக் கொடுத்தருளினார். "மகனே! இது நம்மிடத்தே தோன்றிய படைக்கலம். சூரபன்மனுடைய அளவற்ற சேனையை அழிக்க வல்லது" என்று கூறியருளி மறைந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

25. பாலைநிலம் புகுதல்

முருகப்பெருமான் அங்கிருந்து தேரில் புறப்பட்டுத் திருவிடை மருதூர், மாயூரம், திருப்பறியலூர், திருவாரூர் முதலிய சிவத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு வெப்பம் மிகுந்த பாலை நிலத்திற்கு வந்தார். அவருடைய திருவடிகள் பட்டதும் பாலை நிலம் குளிர்ச்சி அடைந்தது.

அவ்வமயம் பராசர முனிவருடைய புத்திரர்கள் தத்தர், அநந்தர், நந்தி, சதுர்முகர், சக்ரபாணி, பாலி என்னும் ஆறுபேரும் திருப்பரங்குன்றத்தில் தவம் செய்து கொண்டிருந்தனர். ஞான நோக்கினால் முருகப் பெருமானின் வரவை உணர்ந்து எதிர்சென்று வணங்கினர். அவர்களுடைய வரலாற்றை இந்திரன் எடுத்துக் கூறினான். முருகப் பெருமான் அவர்கட்குத் திருவருள் புரிந்தனர்.

26. திருச்செந்திலில் எழுந்தருளல்

பின் முருகப் பெருமான் திருச்செங்குன்றூரை வணங்கித் திருச்செந்தூரை அடைந்து, தேவதச்சனைக் கொண்டு ஒரு திருக்கோயில் அமைக்கச் செய்து அங்கு வீற்றிருந்தருளினார். இந்திரனை நோக்கிச் சூரபன்மன் முதலிய அசுரர்களின் வரலாற்றைக் கூறும்படிச் சொன்னார். இந்திரன் தேவகுருவாகிய வியாழ பகவானைச் சொல்லும்படி வேண்டினான். வியாழ பகவானும் முருகப் பெருமானை வணங்கிக் கூறத் தொடங்கினார்.

உற்பத்திக் காண்டம் நிறைவுற்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2. அசுர காண்டம்

அசுர காண்டம் மாயைப் படலம் முதல் அமரர்சிறைபுகு படலம் முடிய 43 படலங்களைக் கொண்டது.

1. மாயையின் தோற்றம்

அசுரர்களுக்கு அரசனாகிய அசுரேந்திரன் மங்கலகேசி என்னும் அரக்கியை மணந்தான். கரசை என்னும் மகளைப் பெற்றான். அவள் வளர்ந்தபின் அசுர குருவாகிய சுக்கிராச்சாரியார் அவளுக்குத் தீய மாயையின் வித்தைகள் அனைத்தையும் கற்பித்தார். அவளுக்கும் மாயை என்றே பெயரை மாற்றினார்.

சுக்கிராச்சாரியார் மாயையை நோக்கி, ''பெண்ணே! திருமால், இந்திரன், முனிவர்கள் முதலியோரால் அசுரர்கள் பலர் அழிந்தனர். உன் தந்தையும் வலி இழந்தான். நீ சென்று காசிப முனிவரை மயக்கிக் கூடி, புதல்வர்களைப் பெற்று அசுரர்கள் பலம் ஓங்கச் செய்வாயாக'' என்று பணித்தார்.

மாயையும் இசைந்து அழகிய வடிவம் கொண்டு காசிபர் தவம் செய்யும் வனத்தை அடைந்தாள். அங்கு மாயை பூஞ்சோலைகளையும், தாமரைத் தடாகங்களையும், கொடிப் பந்தர்களையும், மலர்ப்படுக்கைகளையும் உண்டாக்கினாள். கண்டு வியந்த காசிபர் இதனை அமைத்தவர் யாரோ என ஐயுற்றார். மாயை அவர்முன் பேரழகுடன் தோன்றினாள். அவளைக் கண்ட காசிபர், புணர்ச்சியை விரும்பி வருந்தி வாடுகின்ற ஆண் அன்றில் பறவையின் தன்மைபோலத் துயருற்றார்.

காசிபர் அவளை யார் என வினவினார். அவள், ''நான் வடபுலத்தைச் சேர்ந்தவன். மேருமலைக்குத் தெற்கேயுள்ள கங்கையில் நீராடச் செல்கின்றேன்'' என்றாள். காசிபர், ''பெண்ணே! கங்கை முதலான ஏழு நதிகளையும், நிலவுலகத்திலுள்ள எல்லாக் கோயில்களையும் இங்கே வரவழைப்பேன். நீ விரும்பினால் புதல்வர்களைப் பெறச் செய்து, அவர்கட்கு ஒப்பு ஒருவரும் இல்லை என்னும்படி உம்பரிடை உய்ப்பேன்'' என்றார். மாயை. ''முனிவரே! நான் தனித்திருப்பதால்தானே இவ்வா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

றெல்லாம் பேசினீர். இது உமக்குப் பொருந்துமோ? நீர் இங்கிருந்து தவம் செய்யும்'' என்றுசூறி கங்கையை நோக்கி விரைந்து செல்வது போல் சென்று மறைந்தாள். அவளைக் காணாத காசிப்ர் வருந்தினார்.

2. காசிபன் புலம்பல்

கதிரவன் மறைந்தான். காசிபர் காம நோயால் கலங்கினார். காணும் இடமெல்லாம் மாயையின் தோற்றத்தையே கண்டார். அங்குள்ள இயற்கைப் பொருட்களையெல்லாம் பார்த்துத் தன் காதலைச் சொல்லிப் புலம்பினார். காசிபர் காண மீண்டும் அவர்முன் மாயை தோன்றினாள்.

3. அசுரர்கள் பிறப்பு

மாயை காசிபரை நோக்கி, ''நான் எடுக்கும் ஒவ்வொரு வடிவத்திற்கும் ஏற்ற வடிவத்தை நீர் எடுத்தால் நான் உம்மைக் கூடுவேன்'' என்றாள். காசிபரும் மகிழ்ந்து முதலில் மாயையின் அழகிய வடிவத்திற்கேற்ப அழகிய தேவ வடிவம் கொண்டார். இருவரும் அங்குள்ள ஒரு மண்டபத்தில் முதல் யாமத்தில் கூடினர். சூரபன்மன் தோன்றினான். இருவரின் வேர்வையிலிருந்தும் 30,000 வெள்ளம் அசுரர்கள் தோன்றினர். வேறு மண்டபத்தில் இருவரும் சிங்க வடிவம் கொண்டு இரண்டாம் யாமத்தில் கூடினர். அப்போது சிங்கமுகாசுரன் தோன்றினான். இருவரின் வேர்வையிலிருந்தும் சிங்கமுகத்துடன் 40,000 வெள்ளம் சிங்கமுக அசுரர்கள் தோன்றினர். பின் வேறொரு மண்டபத்தில் இருவரும் யானை வடிவம் கொண்டு மூன்றாம் யாமத்தில் கூடினர். யானை முகத்துடன் தாராகசுரன் தோன்றினான். அவர்களின் வேர்வையிலிருந்து 40,000 வெள்ளம் அசுரர்கள் தோன்றினார்கள். பின் வேறு மண்டபத்தில் இருவரும் ஆடு வடிவம் எடுத்து நான்காம் யாமத்தில் கூடினர். அசமுகி பிறந்தாள். அவர்களின் வேர்வையிலிருந்து ஆட்டுத் தலைகளுடன் 30,000 அசுரர்கள் தோன்றினர். பின் புலி, குதிரை, மான், பசு, கரடி, பன்றி, கூளி முதலிய வடிவங்களில் இருவரும் கூடிப் பல்லாயிரக்கணக்கான அசுரர்களைப் பெற்றனர். சூரபன்மன் அனைவரையும் கண்டு மகிழ்ந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. காசியரின் உபதேசம்

சூரபன்மன் தன் உடன் பிறந்தவர்களுடன் பெற்றோர் முன் சென்று தாங்கள் செய்ய வேண்டுவன யாவை என வணங்கி வேண்டினான். காசிபர் தம் பிள்ளைகட்கு ஞானோபதேசம் செய்தார். ''பெரியோர்கள் ஆராய வேண்டிய பொருட்கள் மூன்று.அவை பதி, பசு, பாசம் எனப்படும். ஐந்தொழிற்குரி அதிபராகிய சிவனே பதி எனப்படுவார். பிறப்பு இறப்பும்பட்டு உழலும் உயிர்களே பசுக்கள் ஆவர். ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களே பாசம். இவ்வாறு வேதம் கூறுகின்றது பாசமாகிய தளையிலிருந்து விடுபட்டுப் பதியைச் சென்றடை வதையே உயிர்கள் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். பசுக்களுக்கு உறுதியைத் தருவது அறமேயாகும். கல்வி, செல்வம் வீரம் முதலியவை நிலையற்றவை. அறம் செய்தால் அன்பும் அருளும் உண்டாகும். அதனால் தவம் உண்டாகும். தவம் செய்தால் உயிர்கள் பிறவித் துன்பம் நீங்கிச் சிவத்தைச் சார்ந்து இன்புறும். எனவே சிவபெருமானை நோக்கித் தவம் செய்யுங்கள் என அறிவுரை கூறினார்.

5. மார்க்கண்டேயர் வரலாறு

காசிபர் மகனின் உள்ளத்தில் தாம் கூறியவை நன்கு பதி வேண்டும் என்று எண்ணி மார்க்கண்டேயர் வரலாற்றைக் கூற தொடங்கினார். கடகம் என்னும் நகரில் குச்சகன் என்னும் ஓ அந்தணர் இருந்தார். அவருடைய மகன் கௌசிகன், தவ செய்தான். உடல் உணர்ச்சியில்லாது தவம் செய்த அவர் உட மீது விலங்குகள் உராய்ந்து தம் தினவைத் தீர்த்துக் கொண்டன தவம் செய்யும் அவன் முன் திருமால் தோன்றி அவன் உடம்பை தடவிக் கொடுத்து மிருகங்கள் அவன் உடலில் உராய்ந்து சென்றமையால் அவன் இனி மிருக கண்டீயன் என அழைக்கப்படுவான் என்றருளினார். மிருக கண்டீயர் தந்தைய அணைந்து, தாம் தவம் செய்ததைக் கூறினார். தந்தை மகிழ்ந்து மரபு வளர மகனை மணம் புரிய வேண்டினார். மக இசையவில்லை. தந்தை இறைவன் இறைவியுடன் விளங்குவதை கூறி இல்லறத்தின் மாண்பை எடுத்துரைத்தார். தந்தை, தாய், கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொல் மீறுபவர்கள், வேத நெறி மீறுபவர்கள் எரிவாய் நரகிடை மூழ்குவர் என உணர்ந்து திருமணத்திற்கு இசைவு தெரிவித்தார். தான் சொல்லும் இலக்கணங்கள் அமைந்த கற்புடைய பெண்ணுடன் கல்யாணம் செய்விக்கக் கூறினார். குச்சகர் பெண் தேடிப் பல நாடுகள் சென்றார்.

அநாமயம் என்னும் வனத்திலுள்ள உசத்தியன் என்னும் முனிவருக்கும், அவனுடைய பத்தினி மங்கலைக்கும் பிறந்த புதல்வி விருத்தையை மகனுக்கு மணம் பேசினார். ஒருநாள் அப்பெண் தோழியருடன் நீராடச் செல்லும்போது யானை ஒன்று துரத்த அஞ்சி ஓடி வழியிலுள்ள கிணற்றில் விழுந்து இறந்தாள். குச்சகர் அவளை உயிர்ப்பித்து மகனுக்கு மணம் செய்வித்தார். இவர்கட்குப் பிறந்த மகன் மிருகண்டு. அவன் உரிய வயதில் மருத்துவதி என்னும் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான். புத்திரப்பேறு வேண்டிச் சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்தார். சிவபெருமான் காட்சி கொடுத்து, "தவ முனியே! தீய குணங்கள் மிகப் பெற்றுச் சிறிதும் நல்லறிவு இல்லாது ஊமையும் செவிடும் முடமும் விழியும் இன்றி நூறாண்டு நோயுடன் வாழும் புதல்வனைத் தரட்டுமா? அல்லது அழகும் குறைவற்ற உடலும் எம்மிடத்து அன்பும் உடைய பதினாறு வயது மட்டும் வாழும் பல நூல் கற்க வல்ல பாலனைத் தரவா?" எனக் கேட்டார். மிருகண்டு முனிவர் பதினாறு வயது வாழும் நல்ல சத்புத்திரனை வேண்டினார். அவர் மனைவி மருத்துவதி பங்குனி மாதம், ரேவதி நாளில், மிதுன லக்கினத்தில் நல்லதோர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அக் குழந்தையின் பெயர் மார்க்கண்டேயர். சிறு வயதிலேயே சிவபெருமானிடம் பக்தி மிக உடையவர். தனது ஆயுள் பதினாறே என்பதைத் தாய் தந்தை மூலம் அறிந்த அவர் மணிகன்னிகை என்னும் கோயிலுக்குப் போய், சிவலிங்கத்தை அமைத்து வழிபட்டுத் தன்னை யமன் தொடக்கூடாது என்ற வரத்தை வேண்டிப் பெற்றார்.

பதினாறாவது வயதில் எமதூதன் மார்க்கண்டேயர் உயிரைக் கவர வந்தான். சிவ வழிபாடு செய்யும் அவர் உயிரை எடுக்க அஞ்சித் திரும்பிச் சென்றான். பின் யமனே நேரில் வந்து பாசக் கயிற்றை வீசினான். பரமேசுரன் லிங்கத்தினின்றும் உற்பவித்துக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காலனைக் காலால் உதைத்து மாய்த்துப் பாலனைக் காத்தார். பிந் திருமாலும் பிரமனும் வேண்ட எமனை உயிர்ப்பித்தார்.

''இயமனே! திருநீறு உருத்திராக்கம் அணிந்து எம்மை வழிபட்டும் அடியவர்களிடம் நீ செல்லாதே. அவர்களை மண்ணுலகில் வாழும் சாதாரண மனிதர்களாக நினையாதே. அவர்களைக் கண்டால் அவர்களின் திருவடிகளில் வீழ்ந்து வணங்குவாய்'' என்றார்.

இவ்வரலாற்றைக்கூறிய காசிபர் தம் புதல்வர்களைச் சிவ வழிபாடு செய்ய அறிவுரை கூறினார்.

6. மாயையின் உபதேசம்

காசிபர் புதல்வர்கட்குக் கூறிய அறிவுரைகள் மாயை கேட்டான். நகைத்தாள். நம் புதல்வர்கள் பெருஞ்செல்வம், வெற்றி, அழிவில்லாத ஆயுள், புகழ், இன்பம் பெற வழிகாட்டுங்கள் என்றாள். காசிபர், ''மாயை! உன் எண்ணம் அதுவாயின் நீயே அவர்கட்கு அவற்றைச் சொல்'' என்றார். மாயை புதல்வர்களை நோக்கி, திருத்தக்க செல்வம், குற்றமற்ற கல்வி என்னும் இரண்டனுள் ஒன்றைப் பெறாவிடில் அரிய அந்த உயிரை விடப் பேயின் பிறப்பு பெருமையுடையதாகும். கல்வியைக் காட்டிலும் செல்வமே சிறந்தது. அதைப் பெற முயற்சி வேண்டும். நீங்கள் அசுரர் இனத்தைச் சேர்ந்தவர்கள். தேவர்கள் உங்கள் பகைவர்கள் ஆவர். நீங்கள் அவர்களை விட மேனிலை அடைய வேண்டும். பூதவுலகிலுள்ள ஆலந்தீவு சென்று சிவபெருமானுக்கு வேள்வி செய்யுங்கள். அந்த வேள்வியில் நச்சுச் சமித்துகள் இட்டுத் தீ வளர்க்க வேண்டும். ஓமப் பொருட்களையும் இரத்தத்தையும் மாமிசத்தையும் வேள்வித் தீயில் இட வேண்டும்'' என்று வேள்வி செய்ய வேண்டிய முறைகளையும் வேள்விக்கு இடையூறு வராமல் தடுத்தற்கான முறைகளையும் மந்திர முறைகளையும் கூறினாள். அவ்வாறு வேள்வி செய்தால் சிவபெருமான் நீங்கள் விரும்பியதையெல்லாம் இப்பிறவியிலேயே உங்கட்கு அளிப்பார் என்று தீய வழிமுறைகளைக் கூறினாள். சூரபன்மன் அவனுடைய தம்பியரும் அவ்விடமிருந்து நீங்கினர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7. மாயை நீங்குதல்

மாயை காசிபரை நோக்கி, ''புதல்வர்களைக் காப்பாற்றும் பொருட்டு நானும் போகிறேன்'' என்று கூறிச் சென்றாள். காசிபர் மாயையின் பிரிவால் மதி மயங்கி வருந்தினார். காசிபரின் தந்தை பிரமன் அவர் முன் தோன்றி, ''மகனே! வேதம் கற்ற நீ ஒரு பெண்ணின் மீது மையல் கொண்டு அறியாமையுடைய மானிடனைப் போல் வருந்தலாமா? கள் காமம் என்ற இரண்டு கொடிய பொருள்களும் கள் உண்டபோது அறிவை அழிக்கும். காமம் மனத்தால் நினைத்த போதே உயிரை அழிக்கும் எல்லாத் தீவினைகளையும் செய்யத் தூண்டும். காமத்தை விட்டவரே வீடு பேற்றைப் பெறுவர். நீ கூடிய பெண் வஞ்சமுடைய மாயை ஆகும். உன் தவறு நீங்க முன்போல் தவம் செய்'' என்றார். காசிபரும் தவம் செய்யப் புறப்பட்டார்.

அங்கிருந்து நீங்கின மாயை தன் மைந்தர்கள் செய்யும் வேள்விக்கு வேண்டியவற்றையெல்லாம் கொடுக்கும்படி, சுக்கிராச்சாரியரின் ஏவலால் சிவபெருமானை நோக்கித் தவம் செய்தாள்.

8. அசுரர்களின் யாகம்

சூரபன்மன் வேள்வி செய்யத் தம்பிகளும், படைகளும் சூழ புறப்பட்டார். சுக்கிராச்சாரியார் சூரன் முன்பு போய் அனைவருக்கும் ஆசி கூறினார். நீங்கள் யார் என்று கேட்ட சூரனிடம் அவர், ''சூரா! நான் உன் குலகுரு சுக்கிராச்சாரியார். நீ வேள்வி செய்யும் போது பகைவர்கள் கொடுக்கும் துன்பத்தைப் போக்க ஒரு சிவ மந்திரம் உபதேசிக்கிறேன். நீ அதைத் தினந்தோறும் ஜபித்துப் புலன்களை அடக்கிப் பெருந்தவம் செய்'' என்றார்.

ஆலங்காடு ஒன்றில் பதினாயிரம் யோசனைப் பரப்பில் சூரன் வேள்விச் சாலையை அமைத்தான். மலைகளே மதில்கள். படைகள் காவல். நான்கு வாயில்கட்கு வீர மடந்தையர் காவல். ஆயிரம் யோசனை அகலமும் ஆயிரம் யோசனை ஆழமும் கொண்ட ஒரு வேள்விக் குழி அங்கு அமைக்கப்பட்டது. அதனைச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுற்றி நூற்றெட்டுக் குழிகள். அவற்றைச் சுற்றி ஆயிரத்தெட்டுக் குழிகள்.

சிவனருள் பெற்ற மாயை யாகத்திற்கு வேண்டிய திரவியங்கள் அனைத்தையும் கொண்டு வந்து குவித்தாள். சூரன், முன்பு மாயை கூறியபடி வேள்விகள் செய்தான். ஆண்டுகள் பதினாயிரம் கடந்தன. சிவபெருமான் காட்சி தரவில்லை. சூரன் வேள்விச் செயல்களைத் தம்பிகள் செய்யும்படிக் கூறித் தான் வானில் நின்று தன் உடல் சதைகளை அரிந்து வேள்வியில் இட்டான். இரத்தத்தைச் சொரிந்தான். ஆயினும் சிவன் தோன்றாததால் வேள்வித் தீயில் குதித்து எரிந்து போனான். தாரகனும், சிங்கமுகனும் அழுது புலம்பினர்.

பின் சிங்கமுகனும் தாரகனும் தங்கள் தலைகளை அரிந்து வேள்வித் தீயில்இட்டனர். தலைகளை அறுக்க அறுக்க அவை வளர்ந்தன. சூரனைப் போல சிங்கமுகனும் யாகத்தீயில் விழுந்து உயிர் விட எண்ணினான்.

சிவபெருமான் ஒரு வயோதிக அந்தணர் வடிவில்தோன்றி அவர்களின் வருத்தத்திற்கான காரணத்தைக் கேட்டார் சிங்கமுகன் அவரை வணங்கி நிகழ்ந்ததைக் கூறினான். அந்தணர், ''வருந்த வேண்டாம்'' என்று கூறித் தேவ கங்கை அங்கு வரும்படித் திருவுளம் செய்தார். கங்கை நடுக்குண்டத்தில் பாய்ந்ததும் சூரன் உயிர்த்தெழுந்தான். சிங்கமுகனும், தாரகனும் பெரு மகிழ்ச்சி யுற்றனர். அசுரர்கள் ஆரவாரித்தனர். தேவர்கள் அஞ்சி ஓடி ஒளிந்தனர்.

9. வரம் பெறுதல்

வயோதிக அந்தணர் தன் வேடத்தை நீக்கிஉமாதேவியோடு இடப வாகனத்தில் காட்சி தந்தருளினார். ''வேண்டும் வரம் யாது?'' என வினாவினார். சூரனும் கூறினான். சிவபெருமான் சூரனுக்கு ஆயிரம் கோடி அண்டங்கள் நூற்றெட்டு யுகம் ஆளும் வரம் அளித்தார். இந்திர ஞாலத் தேரையும் ஆக்ஞா சக்கரத்தையும் சிங்க வாகனத்தையும் தேவர்கட்குத் தலைமையையும் யாவரையும் வெல்லும் ஆற்றலையும் பாசுபதம் முதலிய படைக்கலங்களையும் வச்சிர உடலையும் தந்தருளினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகாய கங்கையை விண்ணுலகுக்கு அனுப்பினார். தாரகனையும் சிங்கமுகனையும் சூரனுக்குத் துணை நிற்குமாறு கூறி அவர்கட்கும் அழியாத தேர், பாசுபதாஸ்திரம் முதலியன கொடுத்தார். "உங்கள் மூவரையும் நம்முடைய சக்தியைத் தவிர வேறு ஒருவராலும் அழிக்க முடியாது" என்ற வரமும் தந்தருளினார்.

10. சுக்கிராச்சாரியாரின் உபதேசம்

சூரன் தன் தம்பியருடன் சென்று தந்தை காசிபரை வணங்கினான். இனிச் செய்ய வேண்டியது யாது? எனக் கேட்டாள் அவர் "உங்கள் குலகுருவாகிய சுக்கிராச்சாரியாரிடமே சென்று கேளுங்கள்" என விடை கொடுத்தார். சூரன் சிங்கமுகனுடன் சுக்கிராச்சாரியாரிடம் வந்தான். அவர் அவனுக்கு ஆசி கூறிப் பின் வருமாறு அறிவு ரைகள் கூறினார். "பதியும் பசுவும் ஒன்றே. பாசம் இருவினைகள், புண்ணிய பாவம், முக்தி, மறுபிறப்பு என எதுவும் இல்லை. நீயே பிரமம், தேவர்கள் உனக்குப் பகைவர்கள். அவர்களின் செல்வங்களைக் கவர்ந்து தண்டிப்பாயாக. இந்திரன் முன்பு அளவற்ற அசுரர்களை அழித்ததால் அவனைப் பிடித்துச் சிறையில் வை. சிவபெருமான் உனக்குத் தந்த ஆயிரத்தெட்டு அண்டங்களுக்குச் சென்று ஏவல் கொண்டு வருவாய்" என உபதேசித்தார்.

11. அண்ட கோசம் பற்றிக் கூறுதல்

சுக்கிராச்சாரியாரின் தீய உரைகளைக் கேட்ட சூரன் ஆயிரத்தெட்டு அண்டங்களைப் பற்றிக் கூறுமாறு கேட்டான். (அண்டம் என்பது விண்மீன்கள், கோள்கள், பிற பொருட்கள் அடங்கிய பெரிய வட்ட வடிவம். கோசம் - பல தொகைப் பொருட்களை உட்கொண்டிருப்பது) மூலப் பிரகிருதியிலிருந்து தத்துவங்கள் தோன்றுவது முதலாக ஆயிரத்தெட்டு அண்டங்கள் அதிலிருந்து தோன்றுவது வரை விரிவாகச் சுக்கிராச்சாரியார் கூறினார். அண்டங்களின் அகலம், உயரம், எல்லை, வாழ்வோர், வாழ்நாள், உணவு முதலியவற்றையும் நூற்றெட்டுப் புவனங்கள் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

12. சூரபன்மனின் திக்கு விசயம்

சுக்கிராச்சாரியாரிடம் விடைபெற்றுத் தாரகனிடம் வந்து அவரின் உபதேசத்தைக் கூறினான். அவ்வமயம் மாயை ஆகாயத்தில் தோன்றினாள். சூரன் தன் தம்பியரோடும், அசமுகியோடும் சென்று அவளை வணங்கினான். மாயை தேவர்களை வெல்ல அவர்கட்கு ஆசி வழங்கி ஏதேனும் மாயைகள் தேவையானால் அவளை நினைக்கும்படிக் கூறி மறைந்தாள்.

சூரன் இந்திரஞாலத் தேரில் ஏறி அசுரப் படைகளுடன் குபேரனுடைய அளகாபுரிக்குச் சென்று அதனைக் கொள்ளை அடித்தான். சூரன் இந்திரலோகம் சென்றான். இந்திரன் அஞ்சிநடுங்கிச் சுவர்க்கத்தில் போய் ஒளிந்து கொண்டான். சூரன் சுவர்க்கத்தைக் கொளுத்தினான். பின் அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு ஆகியோரை வெற்றி கொண்டு தன் அடிமைகளாக ஏவல் கொண்டான். ஆதிசேடனை வென்றுஅவன் வைத்திருந்த அமுதத்தைப் பறித்து தம்பியருடன் உண்டான். பாற்கடலுக்கு வந்தான்.

திருமால் அசுரப் படைகளுடன் போர் செய்தார். தாரகன் மாய வடிவங்கள் பல தாங்கித் திருமாலுடன் நான்கு நாட்கள் போர் புரிந்தான். திருமால் சக்கராயுதத்தைத் தாரகன் மீது செலுத்தினார். அது பதக்கமாக மாறி தாரகனின் கழுத்தில் நின்றது. அது கண்டு வியந்த திருமால் அவனுடன் சமாதானம் செய்து கொண்டார்.

சூரன் பல உலகங்களையும் கடந்து சத்தியலோகம் வந்தான் அங்கிருந்த பிரமன் ''நான் உன் தந்தை வழிப் பாட்டன்'' என்று ஆசி கூறி தன் படைக்கலங்களைக் கொடுத்தார்.

பின் சூரன் தன் தம்பியருடன் கயிலை சென்று சிவனை வணங்கி ஆசி பெற்றான். அண்டங்கள் அனைத்திலும் தன் ஆட்சியை நிலை நாட்டிக் கொண்டான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

13. தேவர்கள் சூரனை எதிர்கொள்ளல்

அசுரர்களின் அரசனான அசுரேந்திரன் சுக்கிராச்சாரியாருடன் வந்து தான் சூரனின் தாய் வழிப் பாட்டன் என்று உறவு கூறி மகிழ்ந்தான். சூரன் மண்ணுலகம் வந்தான். தேவர்கள் நடுங்கினர் மண்ணுலக மறையவர்களின் வேள்வியால் தேவர்கட்கு ஆகுதி கிடைத்து வந்தது. சூரன் பூவுலகு புகுந்ததும் தேவர்கள் அஞ்சி நடுங்கித் திருமாலிடம் சென்று முறையிட்டனர். திருமால் ''சிவபெருமானை நீக்கித் தக்கன் செய்த வேள்வியில் கலந்து கொண்டதால் வந்த துன்பம் இது. இதனை விலக்க எவராலும் இயலாது. சூரனை வெல்ல நம்மால் இயலாது. அவனுடன் சமாதானம் செய்து கொள்வோம்'' என்று கூறித் திருமால், பிரமன், இந்திரன் தேவர்கள் முதலியோர் புறப்பட்டுச் சென்றனர். தேவர்களுடன் பதினோரு கோடி உருத்திரர்கள் ஒருங்கு நிற்பதைக் கண்ட சூரன் ''சிவபெருமானைப் போல் வடிவம் கொண்டுள்ள இவர்கள் யார்?'' எனக் கேட்டான்.

14. திருமால் உருத்திரர்களின் வரலாறு கூறுதல்

முன்னொரு கற்பகாலத்தில் பிரமன் சிவபெருமானை மறந்து தானே முழுமுதற் கடவுள் எனக் கருதினான். எனவே சரா சரங்களின் வளர்ச்சி நின்றது. காரணம் அறிந்த பிரமன், சிவனை நோக்கித் தவம் செய்தான். சிவன் காட்சி தராததால் கதறியழ, அக் கண்ணீர்த் துளிகள் பேய்களால் எழுந்தன. அவற்றைக் கண்டு பிரமன் நடுங்கினான்.

பேரருளாளனான பரமேசுவரர் பிரமனின் கனவில் தோன்றி, ''வருந்தாதே. நீ எம்மை மறந்ததால் வந்த விளைவு இது'' என்று கூறி படைப்புத் தொழில் மீண்டும் நடைபெற பிரமனின் நெற்றியிலிருந்து பதினோரு உருத்திரர்கள் தோன்றச் செய்தார். அவர்கள் தங்களைப் போல கோடி உருத்திரர்களைப் படைத்தனர். ''உருத்திரர்களைச் சிருஷ்டி செய்தால் உலகம் தாங்காது'' என முறையிட்டான் பிரமன். ''அப்படியானால் நீயே முன் போல் உயிர்களைச் சிருஷ்டி செய்'' என்று கூறி பதினோரு கோடி உருத்திரர்களையும் தேவர்கள் கூட்டத்துடன் இருக்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

படிச் சொல்லிவிட்டு அவர்கள் தங்கள் உலகு சென்றனர் என்று திருமால் கூறினார்.

15. நகரம் அமைத்தல்

சூரபன்மன் தேவதச்சனை அழைத்து நகரம் அமைக்க ஆணையிட்டான். தேவதச்சன் தென்கடலின் நடுவில் எண்பதினாயிரம் யோசனை விரிவுடையதாக "வீரமகேந்திர புரம்" என்ற நகரைச் சூரனுக்காக அமைத்தான். சிங்கமுகாசுர னுக்காக வடகடலில் எண்பதானாயிரம் யோசனை விரிவுடைய "ஆசுரம்" என்ற நகரம் அமைத்தான். நாவலந் தீவில் ஏமகூட மலைக்கு ஒரு புறத்தில் தாரகனுக்காக "மாயமாபுரம்" என்ற நகரை அமைத்தான்.

ஆணையின் வண்ணம் அழகு நகரத்தை அமைத்து விட்டதைத் தேவதச்சன் சூரனிடம் கூறினான். சூரன் நல்ல நாளில் தன் படைகளுடன் வீரமகேந்திரபுரத்தில் குடியேறினான்.

16. பட்டாபிடேகம்

பிரமன் முதலிய தேவர்கள் சூரனுக்கு முடிசூட்ட ஏற்பாடு செய்தனர். சூரன் நீராடி, பீதாம்பரம் உடுத்தி, மலர்களைச் சூடி ஆபரணங்களை அணிந்து பட்டாபிடேகத்திற்குத் தயாரானான். சூரன் சிங்காதனத்தில் அமர பிரமன் சூரனுக்கு மணிமுடி சூட்டினான். அவுணர்கள் ஆரவார்த்தனர். தேவர்கள் கற்பக மலர்களைப் பொழிந்தனர்.

சூரனுக்கு இந்திரன் காளாஞ்சி ஏந்த, குபேரன் அடைப்பையைத் தாங்க, வாயு சாமரம் வீச, சூரியனும் சந்திரனும் குடை பிடிக்க, வருணனும் அவன் மகனும் ஆலவட்டம் வீச, கந்தருவர்கள் இசை பாட, அரம்பையர்கள் ஆடினர். துர்குணன், தருமகோபன், துன்முகன், சங்கபாலன், வக்கிரபாலன், மகிடன் ஆகியோர் சூரனின் அமைச்சர்கள் ஆயினர்.

17. அரசு செய்தல்

சூரனது ஆட்சியில் திருமால் கூப்பிட்ட குரலுக்கு வர வேண்டும். பிரமன் தினம் பஞ்சாங்கம் சொல்லிப் போக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேண்டும். கதிரவன் இளங்கதிராய்த் திகழ வேண்டும். சந்திரன் பூரண கலையுடன் சஞ்சரிக்கவேண்டும். அக்கினி குளிர்ந்திருக்க வேண்டும். யமன், அசுரர்கள், சேனைகள் உயிரைக் கவரக் கூடாது. வாயு நகரைச் சுத்தம் செய்ய வேண்டும். வருணன் பன்னீர், பச்சைக் கர்ப்பூரம், சந்தனம், கஸ்தூரி கலந்த நீரைத் தெளிக்க வேண்டும் என்றெல்லாம் சூரன் கட்டளையிட்டான்.

சுக்கிராச்சாரியார் சூரனுக்குத் தேவதச்சன் மகளாகிய பதும கோமனையைத் திருமணம் செய்வித்தார். சூரனுக்குப் பல சாதிப் பெண்கள் காமக் கிழத்தியர் ஆயினர். சூரன் சிங்கமுகனுக்கு யமன் மகளாகிய விபுதையையும், தாரகனுக்கு நிருதியின் மகளாகிய சவுரியையும் திருமணம் செய்வித்து அவரவர் நகரங்கட்கு அனுப்பி வைத்தான். தன் படைகளை அசுரர்களுடன் எல்லா அண்டங் கட்கும் சூரன் அனுப்பினான்.

18. தேவர்களை ஏவல் கொள்ளல்

இந்திரனும், தேவர்களும், முனிவர்களும், வீரமகேந்திர புரத்தில் சூரன், ஏவுமுன்பே குறிப்பறிந்து வேலை செய்தனர். மேலும் சிங்கமுகன், தாரகன் நகரங்கட்கும் சென்று இட்ட பணிகளைச் செய்து அங்குமிங்கும் ஊசல் போல் அலைந்தனர். ஒருநாள் சூரன் இந்திரனையும் மற்றத் தேவர் களையும் அழைத்து நாள்தோறும் கடலில் மீன் பிடித்துத் தரச் சொன்னான். இந்திரன் வருணனைக் கடலிலுள்ள மீன்களைக் கரையில் கொணர்ந்து குவிக்கக் கூறினான். மற்றத் தேவர்களை அழைத்து அவற்றைச் சுமந்து போகச் செய்தான். அசுரர்கள் அவர்களை ஏளனம் செய்து துன்புறுத்தி மகிழ்ந்தனர்.

19. புதல்வர்களைப் பெறுதல்

சூரனின் மனைவி பதுமகோமளை ஒரு புதல்வனைப் பெற்றாள். ஒருநாள் அக்குழந்தை தொட்டிலில் தூங்கும் போது திறந்திருந்த சாளரத்தின் வழியாகச் சூரிய கிரணம் வந்து தாக்கியது. குழந்தை கோபத்துடன் ஆகாயத்தில் பாய்ந்து சூரியனைப் பிடித்து இழுத்து வந்து தொட்டில் காலில் கட்டி விட்டு மீண்டும் தூங்கியது. சூரிய ஒளி இல்லாமல் உலகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தடுமாறியது. பிரமனும் இந்திரனும் மற்றத் தேவர்களும் சூரனிடம் சென்று சூரியனை விடுவிக்க வேண்டினர். சூரன் தன் மகனின் ஆற்றலைக் கேட்டு மகிழ்ந்து மகனிடம் அவர்கள் இனிய சொற்களைக் கூறிச் சூரியனை விடுவித்துப் போகுமாறு கூறினான்.

அவர்கள் குழந்தையிடம் சென்று நல்லாசிகள் பல கூற, குழந்தை பிரமனிடமிருந்து பிரம்மாத்திரத்தைப் பெற்றுக் கொண்டு சூரியனை விடுவித்தது. பிரமன் தன்னிடமுள்ள மோகப் படைக் கலத்தையும் குழந்தைக்குக் கொடுத்தான். பானுவாகிய சூரியனிடம் கோபித்த காரணத்தால் சூரன் தன் மகனுக்குப் பானுகோபன் என்ற பெயர் சூட்டினான்.

பதுமகோமளைக்கு மேலும் அக்கினிமுகன், இரணியன், வச்சிரபாகு முதலிய புதல்வர்கள் பிறந்தனர். சூரனின் மற்ற மனைவிகள் மூவாயிரம் மகன்களைப் பெற்றனர். சிங்கமுகனின் மனைவி விபுதை அதிசரன் என்ற மகனையும் மற்ற மனைவியர் நூறு புதல்வர்களையும் பெற்றனர். தாரகனின் மனைவி சவுரி அசுரேந்திரனைப் பெற்றார். அசுரேந்திரன் நல்ல குணங்களுடனும், சகல கலைகளில் வல்லவனாகவும் வளர்ந்தான்.

20. வில்வலன் வாதாவி வரலாறு

சூரபன்மனுக்கு அசமுகி என்ற ஒரே தங்கை. அவள் ஒழுக்கம் கெட்டவள். திருமணம் செய்து கொள்ளாதவள்.தேவர்களின் மனைவியைத் தமையன்களுக்கு மனைவி ஆக்குபவள். அவன் துருவாச முனிவரைக் கூடிக் குழந்தை பெற விரும்பினாள். துருவாசர் அவளை வெறுத்தார். சேர மறுத்தார். அசமுகி அவரைப் பலாத்காரம் செய்து கூடினாள். அதனால் வில்வலன், வாதாவி என்ற புதல்வர்களை பெற்றாள்.

அவ்விருவரும் துருவாசருடைய தவத்தைத் தங்கட்கு தந்தருளக் கேட்டனர். துருவாசர் தர மறுத்தார். அவர்கள் கோபத்துடன் தந்தையையே கொல்ல எழுந்தனர். உடனே துருவாசர், "நீங்கள் அகத்திய முனிவரால் கொல்லப்படுவீர்களாக" என சாபம் கொடுத்து மறைத்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வில்வலனும் வாதாவியும் பிரமனை நோக்கித் தவம் செய்தனர். பிரமன் தோன்றவில்லை. அதனால் வில்வலன், வாதாவியைக் கிழித்து அவன் இரத்தத்தால் வேள்வி செய்தான். பிரமன் காட்சி தந்தார். தம்பியை உயிர்ப்பிக்க வேண்டினான். பிரமன், ''வாதாவி எழுக'' என்றதும் வாதாவி உயிர்த்து எழுந்தான். அது கண்ட வில்வலன் தன் தம்பி எத்தனை முறை இறந்தாலும், தான் அழைத்ததும் பிழைத்து எழ வேண்டும் என்ற வரத்தைப் பிரமனிடம் பெற்றான்.

சூரனிடம் சென்று இருவரும் ஆசி பெற்றனர். பின் குடகு நாட்டுக் காட்டில் வசித்தனர். காட்டில் செல்லும் முனிவர்களை விருந்துக்கு அழைப்பர். ஆட்டு வடிவிலுள்ள வாதாவியைக் கொன்று கறி சமைத்து வில்வலன் அவர்கட்கு விருந்தளிப்பான். முனிவர்கள் விருந்துண்ட பிறகு, தம்பியைப் பெயர் சொல்லி அழைப்பான். அவன் முனிவருடைய வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியே வருவான். இவ்வாறு இறக்கின்ற முனிவர்களின் உடல்களை இருவரும் உண்டு மகிழ்வர்.

21. இந்திரன் மறைந்து வாழ்தல்

சூரனுக்கு அதிகார வெறியோடு காமவெறியும் மிகுந்தது. கற்புக்கரசியான இந்திராணியைக் கவர எண்ணினான். இந்திரனைப் பிடித்த வர தன் படைகளையும் இந்திராணியைப் பிடித்து வர அசுரப் பெண்களையும் அமராவதிக்கு அனுப்பினான். இச்செய்தியை ஒற்றர்கள் மூலம் இந்திரன் அறிந்தான். தன் மனைவியுடன் மண்ணுலகம் சென்று மறைந்து வாழ்ந்தான். அசுரப் படைகள் அமராவதியில் இந்திரனையும் இந்திராணியையும் காணாது தேவர்களை அடித்துத் துன்புறுத்தினர்.

வைகுண்டத்தில் அவ்வமயம் இருந்த இந்திரன் மகன் சயந்தன் செய்தி அறிந்து வருந்தினான். நாரதர் சயந்தன் முன் தோன்றி, ''எல்லாம் உணர்ந்த பெரியோர்கள் இன்பம் அடைந்தபோது தளர்ச்சி அடையார். இன்பமும் துன்பமும் பழைய வினையால் மாறி மாறி வரும். வருந்தாதே. விரைவில் சூரபன்மன் அழிவான். உன் துன்பம் நீங்கும்'' என்று ஆறுதல் கூறினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்திரனும் இந்திராணியும் மண்ணுலகில் சீர்காழியில் தங்கி திருநந்தவனம் அமைத்து மலர்களைப் பறித்துச் சிவ பெருமானை வழிபட்டு வாழ்ந்து வரலாயினர். இந்திரனைத் தேடி அசுர ஒற்றர்கள் அங்கு வந்தனர். இருவரும் மூங்கில் வடிவாகி மறைந்தனர். ஒற்றர்கள் இருவரையும் காணாது திரும்பினர். அசுரர்களின் கொடுமையால் மழை பெய்யவில்லை. இந்திரன் வளர்த்த நந்தவனம் வாடியது. அவன்சிவனை நினைந்து பிரார்த்தித்தான்.

அப்போது ''தேவேந்திரனே! விரைவில் ஒரு திவ்விய தீர்த்தம் ஒன்று இங்குப் பாய்ந்து வாடியுள்ள உன் நந்தவனத்தை வளப்படுத்தும்'' என்று அசரீரி வாக்குக் கேட்டது.

22. விந்தியமலை உயருதல்

ஒருமுறை நாரதர் விந்திய மலையிடம் சென்று மேருமலை '' நான் சிவபெருமானுக்கு வில்லாக வளைந்தேன். உமாதேவியார் என்னிடமே வளர்ந்தார். என்னுடைய ஒரு பாகத்தில் கயிலை மலை உள்ளது. நான் பொன்னிறம். எனக்கு ஒப்பு வேறு மலை இல்லை என்று தருக்குற்றுள்ளது'' என்று கூறினார். அதனைக் கேட்ட கருநிற விந்தியமலை பொறாமை கொண்டு ''நானும் மேரு மலைக்குச் சமம்தான்'' என்று கூறி ஆணவத்தால் சத்தியலோகம் வரை உயர்ந்தது. அதனால் சந்திர, சூரியன் கதி தடைப்பட்டது. அவர்கள் அகத்தியரிடம் விந்திய மலையின் ஆணவத்தை அடக்க வேண்டினர்.

23. அகத்தியர் தென்திசை சென்றார்

அகத்தியர் மேரு மலையில் சிவனை நினைத்துத் தவம் செய்து கொண்டிருந்தார். சிவன் காட்சி தந்தார். குறுமுனிவர் சிவனை வணங்கி, ''விந்திய மலையின் செருக்கை அடக்கி உயிர்கட்கு நலம் செய்யும் ஆற்றல் வேண்டும். தங்களைப் பூசிக்க ஒரு தீர்த்தத்தைத் தந்தருள வேண்டும்'' என வேண்டினார். சிவபெருமானும் அகத்தியருக்கு ஆற்றலைத் தந்து, பொதிய மலைக்குப் போகும்படிக் கூறி, கயிலையில் உள்ள காவிரி நதியையும் அகத்தியருடன் போகுமாறு பணித்தார்.அகத்தியர் காவிரியைத் தம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கமண்டலத்தில் எடுத்துக் கொண்டு பொதிய மலைக்குப் புறப்பட்டார்.

24. கிரௌஞ்சன் என்ற அரக்கனைச் சபித்தல்

அகத்தியர் செல்லும் வழியில் தாரகனின் மாயாபுரி இருந்தது. அங்குள்ள கிரௌஞ்சன் என்ற அசுரன் அகத்தியரின் வருகையைக் கண்டான். ஒரு பெரிய மலையாக மாயத்தால் மாறி நின்றான். அம்மலையினுள் செல்ல வழியும் இருந்தது. அகத்தியர் உள்ளே நுழைந்தார். கிரௌஞ்சன் பற்பல மாயங்களைச் செய்தான். இது அசுரனின் வஞ்சனை என்பதை மாயத்தால் அறிந்த அகத்தியர். தன் பிரம்ம தண்டத்தினால் மலையை அடித்தார். மலை நொறுங்கிப் பல துவாரங்கள் ஏற்பட்டன. பின், ''அசுரனே! நீ மலை வடிவாகவே இருப்பாய். உன்மீது ஏற்படுத்திய துவாரங்கள் யாவும் மாயங்கட்கு உறைவிடமாகும். நீ பிற்காலத்தில் முருகனின் வேற்படையால் சாவாய்'' என்று சாபமிட்டார். பின் தன் கமண்டல நீரை மந்திரம் சொல்லித் தெளித்து, கிரௌஞ்சனின் மாயத்தைக் கெடுத்து, தென் திசை வழியில் அகத்தியர் சென்றார்.

25. விந்தியமலை பாதாளத்தில் புதைதல்

அகத்தியர் விந்திய மலைச் சாரலுக்கு வந்து மலையை வழிவிட வேண்டினர். விந்தியமலை தன் ஆணவத்தால் வழிவிட மறுத்தது. உடனே அகத்தியர் சிவனை நினைத்தார். தமது கைகளை நீட்டினார். அவை சத்தியலோகம் வரை நீண்டு வளரத் தம் உள்ளங்கையை விந்திய மலையின் தலையில் வைத்து அழுத்தினார். விந்தியமலை பாதாளத்தில் புதைந்தது. அது தன் பிழை பொறுக்க அகத்தியரை வேண்டியது. அகத்தியர் தாம் திரும்பி வரும்போது அது மேலெழும்பும் என்று கூறித் தம் தென்திசைப் பயணத்தைத் தொடர்ந்தார்.

26. வில்வலன் வாதாவி மறைதல்

பொதிகை மலைக்குச்செல்லும் அகத்திய முனிவரை வில்வலனும் வாதாவியும் கண்டனர். அவரை விருந்துண்ணத் தம்மிடத்திற்கு வருமாறு அழைத்தனர். வழக்கம்போல் வில்வலன்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாதாவியைக் கொன்று, கறி சமைத்து, அகத்தியருக்கு விருந்து அளித்தான். அகத்தியர் விருந்துண்டார்.

வில்வலன் வாதாவியைப் பெயர் சொல்லி அழைத்தான். அகத்தியரின் வயிற்றிலிருந்து வாதாவி வெளிவர முயன்றான் அசுரர்களின் மாயத்தை அறிந்த முனிவர் தம் வயிற்றைத் தடவி ''வாதாவி! சீரணமாவாய்'' என்றார். உடனே வாதாவி முனிவரின் வயிற்றுக்குள் வெந்து குழைந்து சீரணமாகிவிட்டான். அது கண்டு வெகுண்டு வில்வலன் அகத்தியரைக் கொல்ல முனைந்தான். ஆனாலும் அகத்தியர் ஒரு தருப்பைப் புல்லைச் சிவப்படைக்கல மாக்கி வில்வலன் மேல் எறிந்தார். வில்வலன் இறந்தான்.

27. காவிரி கமண்டலத்திலிருந்து நீங்குதல்

பின் முனிவர் கொங்கு நாடு சென்றார். துருவாசரின் புதல்வர்களான வாதாவி, வில்வலன் இருவரையும் கொன்ற பாலம் நீங்கச் சிவலிங்கம் அமைத்து வழிபட்டார்.

அப்போது சீர்காழியில் இருந்த இந்திரனை நாரதர் கண்டார். இந்திரன் தான் அமைத்த நந்தவனச் சோலை மழையில்லாமல் வாடியுள்ளதைக் கூறினான். நாரதர், கொங்கு நாட்டில் அகத்தியரின் கமண்டலத்தில் காவிரி உள்ளது. அது இங்கு வந்தால் இந்திரனின் கவலை தீரும் என்றும், விநாயகரை வழிபட்டால் அவர் போய்க் கமண்டலத்தைக் கவிழ்த்துக் காவிரியைச் சீர்காழிக்கு வரச் செய்வார் என்றும் கூறினார்.

இந்திரன் விநாயகரை வழிபட்டான். வேண்டுவதைக் கூறினான் விநாயகர் கொங்கு நாடு சென்று காக்கை வடிவம் எடுத்துஅகத்தியரின் கமண்டலத்தின் மீது அமர்ந்தார். அகத்தியர் அக்காக்கையை விரட்டினார்.

காக்கை வடிவிலிருந்த விநாயகர் கமண்டலத்தைக் கவிழ்த்து விட்டார். கமண்டல நீர் காவிரியாகப் பெருக்கெடுத்தது. காக்கை வடிவிலிருந்து விநாயகர் அந்தணச் சிறுவன் கோலம் கொண்டு சென்றார். அவனைப் பிடித்துக் குட்டிவிட எண்ணி அகத்தியர் ஓடினார். பிடிக்க இயலவில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விநாயகர் தன் உண்மை உருவத்தைக் காட்டினார். உடனே அகத்தியர் தம் தலையில் தாமே சூட்டிக் கொண்டார். விநாயகரைக் குட்ட நினைத்தோமே என வருந்திக் குற்றம் பொறுக்க வேண்டினார். தம்மைப் போலவே விநாயகர் முன் நின்று யார் குட்டிக் கொண்டாலும் அவர்களுக்கு விநாயகர் அறிவுபெருக அருள் பாலிக்க வேண்டினார். விநாயகரும் அவ்வண்ணமே அருள் புரிந்தார்.

28. திருக்குற்றாலம் செல்லல்

அகத்தியர் தம் பயணத்தைத் தொடர்ந்து திருக்குற்றாலத்தைச் சென்றடைந்தார். அங்குத் திருமால் கோயில் ஒன்று உள்ளது. அதற்குத் திருமுற்றம் என்று பெயர். அங்கு வைணவ அந்தணர்கள் அதிகம் வாழ்ந்தனர். அவர்கள் தம் சமய ஒழுக்கத்தை மேற் கொண்டு ஒழுகாதவராயினும் சிவனடியார்களைக் கண்டால், சீறினர்.

அகத்தியர் திருமாலின் கோயில் முன் வந்தார். அகத்தியரின் சிவக்கோலத்தைக் கண்ட அந்தணர்கள் திருமாலின் கோயிலை அவர் அணுகாவண்ணம் விரட்டினர். அகத்தியர், ''வேதநெறி தவறி ஒழுகுகின்ற நீங்கள் கூடி இங்கு வாழ்வதை நான் அறியேன். அறிந்திருந்தால் இவ்வூருக்கே வர எண்ணியிருக்க மாட்டேன்'' என்று திரும்பிச் செல்லும் பாவனையில் சென்றார்.

அகத்தியர் வைணவ வேடம் பூண்டு அங்கு மீண்டும் சென்றார். அக்கோலம் கண்டு வைணவர்கள் அவரை வரவேற்றனர். திருமாலைப் பூசிக்கத் திருமஞ்சனம் முதலிய வற்றைக் கொண்டுவரப்பணித்தார். அவர்களும் கொண்டு வந்தனர். அகத்தியர் சிவபெருமானை உள்ளத்தில் எண்ணி, திருமால் விக்கிரகத்தின் முடி மீது கையை வைத்து, ''குறுகிய வடிவமாக ஆவாய்'' என்று சொல்ல, அது நெகிழச் சிவலிங்கமாகச் செய்து, பிரதிட்டை செய்து பூசித்தார்.

அது கண்ட அந்தணர்கள் அவரைத் தாக்க முற்பட்டனர். அகத்தியர் தீத்தோன்ற விழித்தார். அத்தீ அந்தணர்களைத் துரத்த, அவர்கள் அஞ்சி ஓடினர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகத்தியர் ''இன்று முதல் இவ்வூர் சிவத்தலமாக ஆகுக'' என்று கூறி, பொதிகை மலை சென்று தவம் செய்யத் தொடங்கினார்.

29. இந்திரன் சிவனை அருச்சனை செய்தல்

அகத்தியர் கமண்டலத்திலிருந்து புறப்பட்ட காவிரி சீர்காழியை அடைந்தது. இந்திரனின் சோலை செழித்தது. பலவகை மலர்கள் மலர்ந்தன. அவற்றைப் பறித்து இந்திரன் சிவ வழிபாடு செய்தான்.

30. தேவர்கள் புலம்புதல்

தேவர்கள் சீர்காழிப் பதிக்கு வந்தனர். இந்திரனைக் கண்டனர். சூரபன்மனால் தாங்கள் அடையும் துன்பங்களைக் கூறிப் புலம்பினர். இந்திரன் தான் சூரனை எதிர்க்க இயலாததாலும் தன் மனைவியான இந்திராணியைச் சூரனிடமிருந்து காக்கவுமே தான் சீர்காழி வந்ததாகக் கூறினான். நாம் கயிலை சென்று சிவபெருமானிடம் நம் குறைகளைக் கூறுவோம் என்றான். பின் இந்திரன் தேவர்களைச் சிறிது நேரம் அங்கே இருக்கச்சொல்லி, விடைபெறும் பொருட்டு இந்திராணி இருக்கும் இடம் சென்றான்.

31. இந்திராணியின் சோகம்

இந்திரன் இந்திராணியிடம், ''பெண்ணரசியே! நம் துன்ப நீக்கத்தின் பொருட்டுத் தேவர்களுடன் கயிலை செல்கிறேன். விடை தருக'' என்றான். இந்திராணி கலங்கினாள். ''ஐயனே! தாங்கள் பிரிந்து சென்றால் என்னால்உயிர் வாழ முடியுமா? சக்கரவாகப் பட்சிக்கு சந்திரனும், வானம்பாடிக்கு மேகமும் துணையாயிருப்பது போல எனக்குத் தாங்கள் தானே துணை. மேலும் தாங்கள் இல்லாத போது கொடிய அசுரர்கள் வந்து துன்புறுத்தினால் என் செய்வேன் நானும் உங்களுடன் வருகிறேன்'' என்றாள்.

அதற்கு இந்திரன், ''இந்திராணி! உனக்குத் துணை இல்லை என்று நீ கலங்க வேண்டாம். சிவபெருமானுக்கும், திருமாலுக்கும் ஐயனார் என்றொரு மகன் பிறந்தார். நீ துன்பம் வரும் காலத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவரை நினைத்தால் அவர் உன்னைக் காப்பார்'' என்று கூறி ஐயனாரின் வரலாற்றை இந்திரன் கூறத் தொடங்கினான்.

32. மகா சாத்தன் வரலாறு

முன்பு தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த போது முதலில் தோன்றிய ஆலகால விடத்தைத் தேவர்களைக் காக்க சிவபெருமான் உண்டார். தொடர்ந்து கடைய அமுதப் பொற்குடம் எழும்பியது.அமிர்தம் உண்பதில் தேவர்கட்கும் அசுரர்கட்கும் சண்டை ஏற்பட்டது. திருமால் மோகினி வடிவம் எடுத்தார். தேவர்களும் அசுரர்களும் மோகினிமேல் மையல் கொண்டனர். மோகினி வடிவம் கொண்ட திருமால் ''அமிர்தம், மோகினியாகிய யான் இரண்டில் ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றார். தேவர்கள் அமிர்தத்தையும் அசுரர்கள் மோகினியையும் வேண்டினர். மோகினி அசுரர்களைப் பார்த்து ''உங்களில் வீரன் யார்?'' என வினவ அசுரர்கள் ''நானே வீரன்'' என ஒவ்வொருவரும் கூறித் தங்கட்குள் சண்டையிட்டு மாண்டனர். திருமாலின் மோகினி வடிவ மாயத்தை அறிந்த அசுரர்களில் இருவர் மட்டும் தேவ வடிவம் கொண்டு தேவ கணங்களுடன் சேர்ந்து நின்றனர். திருமால் மோகினி வடிவத்தை நீக்கி தேவர்கட்கு அமிர்தத்தைப் பகிர்ந்து கொடுத்தார். தேவ வடிவிலிருந்த அசுரர்கள் இருவரும் அவசரமாக அமிர்தத்தை உட்கொண்டனர். அது கண்ட சூரிய சந்திரர் இவர்கள் அமரர்கள் அல்லர் என்பதைத் திருமாலுக்கு உணர்த்தினர். திருமால் தன் கையிலிருந்த அகப்பையினால் அவர்கள் தலையில் அடித்தார். தலைகள் துண்டாயின. அமிர்தம் கண்டத்தை அடையுமுன் தலை முண்டத்திலிருந்து துண்டானதால் இரு அசுரர்களின் உடல்கள் அழிந்த போதிலும் தலைகள் அழியாமலிருந்தன. திருமால் அவர்கள் இருவரையும் இராகு, கேது என்னும் கிரகங்களாக விண்ணுலகில் இருக்கப் பணித்தார். இக்கதை உனக்குத் தெரியும் என்று இந்திராணியிடம் கூறிய இந்திரன் தொடர்ந்து கூறினான். திருமாலும் தனக்கு ஒரு சக்தி என்பதைத் தெரிவித்தருள சிவபெருமான் பேரழகு வடிவெடுத்துத் திருப்பாற்கடலருகே வந்தார். கண்ட திருமால் மையல் கொண்டார். பெண் வடிவாக மாறி அரி, அரனின் அன்பில் லயித்த போது பிறந்த புதல்வன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஹரிஹர புத்திரர். இவரே சாஸ்தா என்றும் ஐயனார் என்றும் ஐயப்பன் என்றும் அழைக்கப்படுகிறார். அவர் உன்னைக் காத்தருள்வார் என்று இந்திரன் கூற, இந்திராணி சீர்காழியிலேயே தங்கியிருக்க உடன்பட்டாள்.

இந்திரன் ஐயப்பனைத் தியானித்தான். ஐயப்பன் காட்சி கொடுத்தார். தான் கயிலை செல்வதாகவும் திரும்பும் வரை மனைவி இந்திராணியைக் காத்தருளுமாறும் வேண்டினான். ஐயப்பன் இசைவு தெரிவித்து, தனது வீரர்களுள் வாட் போரில் நிகரற்ற மகா காளரை நோக்கி இந்திரன் திரும்பி வரும்வரை இந்திராணியைக் காத்து நிற்கக் கட்டளையிட்டார்.

33. இந்திரன் கயிலை செல்தல்

இந்திரன் தேவர்களுடன் கயிலைக்குச் சென்றான். நந்தி தேவர் சிவபெருமான் சனகாதி முனிவர்கட்கு, "ஞானத்திற்குக் காரணமான யோக நிலையில் உண்மைப் பொருளை உணர்த்தி நிட்டையிலுள்ளார் அவரைத் தரிசிக்க ஏற்ற தருணம் இதுவன்று" என்றார். சிவன் சூரனுக்குத் தந்த வரமும் அமரர்கட்குப் புரிய வேண்டிய அருளும் ஒன்றுக்கொன்று முரணாகுமே என பலவாறு எண்ணித் திகைத்தான். பூவுலகிற்குச் சென்றால் அசுரர்கள் சிறையிடுவார்கள் எனக் கருதி சிவபெருமானைத் தரிசிக்கும் பொருட்டுத் தேவர்களுடன் வெளியே காத்திருந்தான்.

34. அசமுகி இந்திராணியைக் காணல்

இந்திராணி சீர்காழியில் தவம் செய்து கொண்டிருந்தாள். சூரனின் தங்கை அசமுகி தன் தோழி துன்முகியுடன் சூலப் படையை ஏந்திச் சுற்றிவரும் போது இந்திராணி இருக்கும் நந்தவனத்திற்கு வந்தாள். இந்திராணியைக் கண்டாள்.அருகே சென்றாள். இந்திராணி அஞ்சி நடுங்கி ஓட முயன்றாள். அசமுகி, "நில்!" என்று கூறி ,"இலட்சுமியும் பொறாமைப்படத்தக்க அழகுடைய நீ, உன் இளமை வீணாகுமாறு ஏன் தவம் செய்கிறாய்? நாட்டை இழந்து ஓடிவிட்ட இந்திரன் உனக்கேற்ற கணவன் அல்லன். ஆயிரத்தெட்டு அண்டங்கட்குத் தலைவனாகிய சூரபன்மனே உனக்கேற்ற கணவன், என்னோடு என் அண்ணன் நகருக்கு வந்து அரியணை ஏறுவாய்" என்றாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

35. இந்திராணி மறுத்தல்

இந்திராணி அசமுகியின் சொற்களைக் கேட்டுச் செவிகளை மூடிக் கொண்டாள். ''காசிப முனிவருக்குப் பிறந்த நீ நீதிநெறிக்குப் பொருந்தாத சொற்களைப் பேசினாய். அறநெறி யையும் கற்பு நெறியையும் எண்ணிப் பார்க்கவில்லை. நான் இந்திரனைத் தவிர பிற ஆடவரைக் கனவிலும் கருதேன். நீ இப்போது அகலாவிட்டால் அழிந்து போவாய்'' என்றாள். அசமுகி வெகுண்டு, ''நீயாக என்னுடன் வராவிடில் நான் உன்னைப் பிடித்து இழுத்துச் செல்கிறேன்'' என்று கூறி வலிந்து இழுக்க முற்பட்டாள். இந்திராணி ஐயப்பனை நினைத்துத் துதித்தாள். ஓலமிட்டாள்.

36. மகா காளர் வருதல்

இந்திராணியின் ஓலத்தை கேட்ட மகாகாளர் காற்றினும் கடுகி அங்கு வந்தார். இந்திராணியை நோக்கி, ''தாயே! அசமுகியைக் கண்டு அஞ்சாதே'' என அபயம் அளித்தார். நில் என அசமுகியை அதட்டினார். அசமுகி, ''இந்திராணியைக் காக்கும் பணியை உனக்கு யார் தந்தது'' என மிடுக்குடன் கேட்டாள். ''மூவுலகையும் காக்கும் ஐயன் எனக்கு இப்பணியைத் தந்தார்'' என்று மகா காளர் கூறினார். ஐயன் என்று இந்திரனைக் குறித்ததாகக் கருதி அசமுகி, ''இந்திரனின் ஏவலாளான நீயா என்னைத் தடுக்க வல்லவன்'' என்று கூறி தன் கையிலுள்ள சூலத்தை அவர் மீது எறிந்தாள். மகாகாளர் தன் வாளால் அதனைத் துண்டாக்கினார். பின் அசமுகி துன்முகியின் கையிலிருந்த சூலத்தை வாங்கி வீரமகாகாளர் மீது வீசினாள். அவர் அதனை வாளால் வெட்டி வீழ்த்தினார். அசமுகி, துன்முகி இருவர் கரங்களையும் வெட்டினார் பெண் என்பதால் கொல்லாமல் விட்டார்.

37. அசமுகியின் சோகமும் சூளும்

அசமுகி துன்புற்றுப் புலம்பினாள். ஆறாச் சினம் கொண்ட அசமுகி அனைத்துலகங்களையும் அழித்துவிட எண்ணினாள். தோழி துன்முகி அவளை நோக்கி, ''தலைவியே! உலகங்களையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உயிர்க் கூட்டங்களையும் அழித்தால் அவற்றுக்குத் தலைவரான சூரபன்மன் சினம் கொள்வான். தங்கள் துயர் துடைக்கத் தமையனார் உள்ள போது தாங்கள் ஏன் பழி வாங்க முற்பட வேண்டும். இறைவனையும் ஞானிகளையும் தவிர மற்ற உயிர்கட்கு ஊழ் வினையால் வரும் துன்பம் நீங்காது'' என்றாள். அது கேட்ட அசமுகி, இந்திராணியைப் பார்த்து, ''உன்னையும் உன் கணவனையும் தேவர்கள் அனைவரையும் என் அண்ணனைக் கொண்டு சிறைப்படுத்துவேன். அப்படிச் செய்யாவிடில் நான் சூரபன்மனின் தங்கையல்ல. நான் பேடியே'' என்று சபதம் செய்து அங்கிருந்து அகன்றாள்.

38. இந்திரன் மீட்சி

இந்திராணி தன் கணவன் சென்ற காரியம் கைகூட மீண்டும் தவம் செய்யலானாள். சீர்காழியில் நிகழ்ந்ததை நாரதர் ஞான நோக்கால் அறிந்து கயிலையிலிருந்த இந்திரனிடம் கூறினார். இந்திரன் நந்தி தேவரை வணங்கி, ''எங்கள் தீவினை காரணமாக சிவனைத் தரிசிக்க முடியவில்லை. பூவுலகம் சென்று மீண்டும் தவம் செய்து,பிறகு வருகிறேன்'' என்று கூறி சீர்காழி வந்தான். வீரமாகாளருக்கு நன்றி கூறி ஐயனாரிடம் அனுப்பினான். அசமுகி உரைத்த சபதத்தை இந்திராணி கூறக் கேட்ட இந்திரன், அவளுடனும் தேவர்களுடனும் மேரு மலைக்குப் போய் மறைந்திருந்தான்.

39. சூரன் அரசிருக்கை

சூரன் அரசு வீற்றிருக்கும் மகேந்திரபுரியை அசமுகி அடைந்தாள். அங்குச் சூரன் சிங்கமுகனும், தாரகாசுரனும் சூழ்ந்திருக்க அத்தாணி மண்டபத்தில் வெண்கொற்றக் குடை நிழலில் அரியாசனத்தில் வீற்றிருந்தான். அரம்பையர்கள் சபா மண்டபத்தில் நடனமாடிக் கொண்டிருந்தனர். மங்கையர் மலர் தீபத் தட்டுக்களை ஏந்தி வந்து வாழ்த்துச் சொல்லிச் சுற்றினர். கின்னரர், சித்தர், இயக்கர், கந்தர்வர்கள் மங்கலம் இசைத்தனர். அவுணர்களும் திக்குப் பாலகர்களும் சூரனின் வீரக்கழல் அணிந்த கால்களில் மலர் தூவி கை கூப்பி வணங்கினர். சுக்கிராச்சாரியார்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மந்திரம் கூறி, மலர்களையும் அட்சதைகளையும் தூவிச் சூரனை ஆசீர்வதித்துக் கொண்டிருந்தார்.

40. அசமுகி நகர் காணுதல்

சூரனின் தங்கை அசமுகி வெட்டுண்ட கரங்களிலிருந்து இரத்தம் கொட்ட, தன் தோழியுடன் வீர மகேந்திரபுரியின் கிழக்கு வாயிலை அடைந்தாள்.

அவளைக் கண்ட அசுரர்கள், ''இவளை இவ்வாறு கொடுமைப்படுத்தியவர் யார்?'' என அதிசயமும், ஆறாத சினமும் கொண்டனர். பலரும் பலவாறு எண்ணிப் பேசினர். எனினும் அவளுக்கு இவ்வாறு கொடுமை இழைத்தது யார் என அசமுகியைக் கேட்க யாருக்கும் துணிவில்லை.

41. அசமுகி புலம்புதல்

அசமுகி அத்தாணி மண்டபத்தை அடைந்தாள். அவளின் கோபமும், துன்பமும் எல்லை மீறியது. தன்னைக் காக்க ஒருவரும் வரவில்லை என அழுது புலம்பினாள். ஒவ்வொரு சகோதரனையும் நோக்கி அவர்களின் வீரம் எங்கு சென்றது எனக் கதறினாள். இறுதியில் கையிழந்த தான் உயிருடன் இருப்பதை விட இறப்பதே மேல் என சூரபன்மன் காலில் விழுந்து கதறிஅழுதாள்.

42. சூரன் தண்டம் செய்தல்

அசமுகியின் கண்ணீர் சூரனின் கால்களில் விழுந்தது சூரன் ''அசமுகியே! உன் கைகளையும் துன்முகி கைகளையும் வெட்டியவன் யார்?'' என கோபத்துடன் கேட்டான். தன் தங்கை, இந்திராணியைத் தனக்கென்று கவர முற்பட்ட போது கைகள் வெட்டப்பட்டன என்பதை அறிந்த சூரனின் கண்கள் நெருப்பைக் கக்கின. பற்கள் கோபத்தால் நற நற என ஒலியுண்டாக கடிபட்டன. அண்டங்களெல்லாம் அதிரும்படி சிரித்தான். பார்த்தவர்கள் பதைபதைத்து ஓடினர். மலைகளும் கடல்களும் விண்ணுலகும், மண்ணுலகும் நடுங்கின.

''இந்திரனையும் இந்திராணியையும் முன்பே சிறை செய்யாமல் போனோம். கோடானுகோடி சேனைகளும் தெய்வப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

படைக்கலங்களும் இந்திரஞாலத் தேரும் நம்மிடமிருக்க நம் தங்கைக்கு நம்மிடம் குற்றேவல்செய்யும் தேவர்களுள் ஒருவனால் இத்தீங்கு நேர்ந்ததே என் புகழ் அழிந்தது. இப்பழி என்றும் என்னை விட்டு நீங்காதே நன்று, நன்று என்அரசியல்'' என்று கூறி சூரன் நகைத்தான்.

சூரன் கூறியதைக் கேட்ட அவனுடைய புதல்வன் பானுகோபன் கோபத்துடன் எழுந்தான். ''தேவலோகத்தைக் கொளுத்துவேன். இந்திராணியையும் இந்திரனையும் மற்ற தேவர்களையும் சிறைப் பிடித்து வருவேன். உத்தரவு கொடுங்கள்'' என்று வேண்டினான்.

சூரனும் பானுகோபன் படையுடன் செல்ல அனுமதி கொடுத்தான். பிரமனை அழைத்து அசமுகியின் வெட்டுண்ட கைகளை மீண்டும் படைக்க ஆணையிட்டான். பிரமனின் கட்டளையால் அசமுகியின் கைகள் ஒரு மாத்திரைப் பொழுதில் முன்போல் வளர்ந்தன.

சூரன் கிரகங்களையும் நட்சத்திரங்களையும் அழைத்து, ''என் தங்கையின் கைகளை வெட்டியவன் யார் என ஆகாயத்தில் திரியும் உங்கட்குத் தெரியாதா? தெரிந்தும் வாளாவிருந்தது ஏன்? உங்கள் அரச விசுவாசம் இதுதானா? என்று கடுகடுத்துப் பேசி அவர்களைச் சிறையில் அடைத்தான். காலவரையறைக்குரிய தெய்வங்களையும் சிறையில் அடைத்தான்.

மண்ணுலக மன்னர்களையும் வரவழைத்து அவர்களின் நாவையும், நாசியையும், செவியையும் அறுத்தான். சிலரைச் சிரச்சேதம் செய்தான். சூரபன்மன் விதித்த தண்டனைகளைக் கண்ட பிரமன் தயங்கி, பின் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, ''சூரியனும் நட்சத்திரங்களும் மற்ற காலக் கடவுள்களும் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யாவிட்டால் பிரபஞ்சம் இயங்காது. ஆகவே அவர்களைச் சிறையிலிருந்து விடுவி'' என்று வேண்டினார். சூரனும் அவர்கலை விடுவித்து, இனி இந்திரனுடன் சேராமல் தன் கட்டளைப்படி நடக்க ஆணை இட்டான். அவர்களும் தங்கள் உத்தரவுப்படியே செய்கின்றோம் என்று கூறிச் சென்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

43. அமரர் சிறை புகுதல்

பானுகோபன் படைகளுடன் சீர்காழியிலுள்ள நந்தவனம் வந்தான். அங்கு இந்திராணியையும், வீரமகாகாளரையும் காணாது விண்ணுலகம் சென்றான். தேவர்கள் இந்திரனின் மகனான சயந்தனிடம் சென்று பானுகோபனின் படை எடுப்பைக் கூறினர். அவ்வமயம் தேவேந்திரனும் தேவகுருவாகிய வியாழ பகவானும் தேவர்கள் பலரும் தேவலோகத்தில் இல்லை. ஆயினும் சயந்தன் அசுரர்களிடம் அடிமைப்பட்டு உயிர் வாழ்வதை விட, போரிட்டு இறப்பதே மேல் என்று தேவர்களைத் தூண்டிப் பானுகோபனுடன் போர் செய்ய எழுந்தான்.

சயந்தன் வெள்ளானை மீதேறிப் பானுகோபன் முன் வந்தான். இரு படைகட்குமிடையே கடுமையான போர் நிகழ்ந்தது. அதிகார பலம் மிகுந்த அசுரர்கட்கு ஈடு கொடுக்க முடியாமல் தேவர்கள் ஓடினர். ஓடிய தேவர்களை அசுரர்கள் துரத்திச் சென்று கயிற்றினால் கட்டிப் பானுகோபன் முன் இழுத்து வந்தனர். இக்கோரக் காட்சியைக் கண்ட சயந்தன், தன் சக்தியெல்லாம் திரட்டிப் பாணங்களை மழைபோல் பானுகோபன் மேல் பொழிந்தான். கடும்போர் புரிந்து நூறு வெள்ளம் அசுரர்களை அழித்தான். வெள்ளானையும் அசுரப் படை வீரர்கள் பலரைக் கொன்றது.

அசுர வீரர்களின் தலைவன் நீலகேசன் சயந்தன் மீது பிறைமுடி படைக்கலத்தை விடுத்து வில்லின் நாணை அறுத்தான். நிராயுத பாணியான சயந்தன் மந்திர தந்திரங்களை நாடினான். மாயங்கள் பல செய்து போரிட்டான். பார்த்த பானுகோபன் சுக்கிராச்சாரியார் சொல்லிக் கொடுத்த ஞான மந்திரத்தை நினைத்தான். சயந்தனுடைய மாயங்கள் அழிந்தன. அவன் தனிமையானான்.

பானுகோபனுக்கும் சயந்தனுக்கும் நேருக்கு நேர் போர் மூண்டது. பானுகோபன் நூறாயிரம் அம்புகளால் சயந்தனை அடித்தான். சயந்தன் மயங்கி வீழ்ந்தான். ஆயினும் அமுதம் உண்டிருந்த காரணத்தால் சயந்தனின் உயிர் போகவில்லை. எதிர்த்த வெள்ளானையின் தந்தங்களை பானுகோபன் ஓடித்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அசுரர்கள் சயந்தனைப் பிடித்தனர். பானுகோபன் விண்ணிலுள்ள தேவர்களையும் சயந்தனையும் சிறைப்பிடித்துச் சூரன்முன் கொண்டு நிறுத்தினான்.

சூரபன்மன் சிறைப்பட்டவர்களின் அங்கங்களை வெட்டினான். தேவர்களின் அங்கங்கள் வெட்டுப்பட, வெட்டுப்பட அவர்களின் தவவலிமையால் அங்கங்கள் மீண்டும் வளர்ந்தன. எனவே அசுரர்கள் தேவர்களை விலங்கிட்டு மீண்டும் சிறையில் அடைத்தனர்.

தந்தங்களை இழந்த வெள்ளானை திருவெண்காடு வந்து சிவனை வழிபட்டது. அதனுடைய கொம்புகள் வளர்ந்தன.

சயந்தன் உள்ளிட்ட தேவர்கள் சிறைப்பட்டதை அறிந்த இந்திரனும், இந்திராணியும் வருந்தினர். மீண்டும் தவத்தில் ஈடுபட்டனர். தேவர்களின் சிவஅபசாரக் குற்றம் நீங்கும் தருணம் வந்தது. சிவபெருமான் காட்சி தந்தார். சிவபெருமான் இந்திரனிடம், ''நாம் பார்வதியை மணந்து ஒரு குமாரனைத் தருவோம். அவன் அசுரர்களை அழித்து உங்கட்கு வாழ்வு தருவான்'' என்றருளி மறைந்தார்.

இவற்றைத் தேவகுருவாகிய வியாழபகவான் திருச்செந்திலில் எழுந்தருளியிருந்த முருகப் பெருமானிடம் கூறி, தாம் அறிந்த முருகப் பெருமானின் அவதார வரலாற்றையும் கூறி, தங்களைத் தவிர சூரனை யாராலும் வெல்ல இயலாது. தாங்கள் சூரனாதியர்களைக் கொன்று, தேவர்களைச் சிறை மீட்டுக் காத்தருள்க என வேண்டினார்.

வியாழ பகவானின் முதுகைத் தம் திருக்கை விரல்களால் தடவி அருள் புரிந்தார் குமரக் கடவுள். பின் தன் பக்கத்திலுள்ள இந்திரனைப்பார்த்து, ''தேவேந்திரனே! வருந்தாதே. தேவர்களைச் சிறை மீட்டு விண்ணுலக ஆட்சியைப் பழையபடி உனக்குத் தருவோம்'' என்று வாக்களித்தார். தேவர்கள் மகிழ்ந்து முருகப் பெருமானைப் போற்றினர்.

அசுர காண்டம் முற்றிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. மகேந்திர காண்டம்

இக்காண்டம் வீரவாகு கந்தமாதனஞ் செல் படலம் முதல் சூரன் அமைச்சியல் படலம்முடிய இருபத்தொரு படலங்களைக் கொண்டது.

1. வீரவாகுத் தேவர் கந்தமாதனம் செல்லல்

திருசெந்தூரில் வீற்றிருந்த முருகப் பெருமான் உடனே போருக்குப் புறப்பட்டுவிடவில்லை. தூதன் ஒருவனைத் தூது அனுப்பிச் சூரன் தன் தவறுகளைத் திருத்திக் கொள்ள வாய்ப்புக் கொடுக்கக் கருதினார். ''தூதன் சொற்கோட்டுச் சூரன் தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்தால் வாழ்வான். மறுத்தால் நாமே சென்று அவனை அழிப்போம். இதுவே அறநெறி'' என்று முருகப்பெருமான் கூறினார். விண்ணவர்களும் ஆமோதித்தனர்.

''நமது வீரர்களில் சூரனிடம் தூது செல்லத் தக்கவர் யார்?'' என முருகப் பெருமான் கேட்டார். பிரமன், வீரவாகுத் தேவரே தக்கவர் என்றான். முருகப் பெருமான் வீரவாகுதேவரைத் தூது செல்லக் கட்டளையிட்டார். வீரவாகுத் தேவர் புறப்பட்டார். இந்திரன் அவர் பின் சென்று, ''முதலில் சிறைப்பட்டிருக்கும் என் மகன் சயந்தனையும் மற்ற தேவர்களையும் கண்டு ஆறுதல் கூறி, பின் தூது வேலையை முடிப்பீராக'' என வேண்டினான். வீரவாகுத் தேவரும் அவ்வாறே செய்வதாகக் கூறிப் புறப்பட்டார்.

வீரவாகுத் தேவர் கடற்கரையிலுள்ள கந்தமாதன மலை மீது ஏறி நின்றார். அக்காட்சித் தாருகாவனத்து முனிவர்கள் ஏவிய கொலைத் தொழில் புரியும் முயலகன் மீது சிவபெருமான் திருவடி ஊன்றியது போலவும், காசியில் மணிகர்ணிகா தலத்தில் கயமுகாசுரனான யானையைக் கீழே தள்ளி அதன் தலைமீது சிவபெருமான் தன் திருவடி ஊன்றியது போலவும் விளங்கியது. பாரம் தாங்காது மலை பிளந்து நிலத்தில் அழுந்தியது. முன்னம் மாயாபுரியில் இருந்த படைகளில் பலர் புறமுதுகிட்டு ஓடி அந்தக் கந்தமாதன மலையில் மறைந்திருந்தனர். அவர்கள் வீரவாகுத் தேவரைக் கண்டு அஞ்சி உயிரை விட்டனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எல்லா உலகங்களையும் காணும்படி வீரவாகுத் தேவர் பேருருவம் எடுத்தார். தேவர்கள் ஆரவாரித்தனர். அசுரர்கள், முன்பு அழிந்ததாகக் கூறப்பட்ட கிரௌஞ்ச மலை தான் இந்த மாயத்தைச் செய்கிறதோ என ஐயுற்றனர். வீரவாகுத் தேவர் தாம் இந்தப் பேருருவில் சென்றால் உலக உயிர்கள் அழியும் எனக் கருதி, பெருவடிவை நீக்கிச் சிறிய வடிவம் கொண்டார்.

2. கடலில் பாய்ந்து செல்லல்

வீரவாகுத் தேவர் கந்தமாதன மலையை முன்போல எழும்புமாறு அருள் செய்தார். அம்மலையிலிருந்து விரைந்து வானில் சென்றார். அவர் சென்ற வேகத்தில் பூமியிலுள்ள மலைகள் பல இழுக்கப்பட்டு அவருடன் செல்லத் தொடங்கின. அண்டங்கள் பின் தொடர்ந்தன. அவர் பாய்ந்து சென்ற காட்சி முப்புரம் எரிக்கச் சிவபெருமான் எய்த வேலாயுதத்தை விடுத்தாரோ என்று எண்ணும்படி வீரவாகுத் தேவர் வானில் விரைந்து சென்றார்.

3. வீரசிங்கன் வதை

வீரமகேந்திரபுரத்தின் வடக்கேயுள்ள இலங்கையை வீரவாகுத் தேவர் அடைந்தார். யாளிமுகன் என்னும் அகரவீரன் அந்நகரைக் காவல் புரியும் பொறுப்பேற்றவன். அவ்வமயம் சூரனைக் காண மகேந்திரபுரம் சென்றிருந்தான். எனவே அவன் மகன் அதிவீரன் அந்நகரைக் காவல் புரிந்து வந்தான். அவனுடைய படைத்தலைவன் வீரசிங்கன் வடக்கு வாயிலைக் காத்து நின்றான். அவன் ஐநூறு வெள்ளம் சேனைகளுடன் வீரவாகுவை எதிர்த்துப் போரிட்டான். வீரவாகுத் தேவர் அவனையும், அவனுடைய சேனைகளையும் வெட்டிக் கொன்றார்.

4. இலங்கை வீழ்ந்தது

வீரவாகுத் தேவர் இலங்கைக் கரையிலுள்ள மலையின் மூன்று சிகரங்களில் நடுச்சிகரத்தின் மீது பாய்ந்தார். இலங்கையைக் காத்து வந்த அதிவீரனும், பிற அசுரர்களும் நிலைகுலைந்து மயங்கி வீழ்ந்தனர். அவுண வீரர்களுடன் இலங்கை கடலில் முழுகத் தொடங்கியது. திருக்கை மீன்களும் சுறா மீன்களும், திமிங்கல

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மீன்களும் கடலில் விழுந்த அசுரர்களைத் துன்புறுத்தத் தொடங்கின. கரையேறிய அசுரர்கள் சிலர் அஞ்சிஓடி ஒளிந்தனர்.

5. அதிவீரன் வதை

இலங்கை கடலில் மூழ்குவதைக் கண்டு, அதைக் காவல் செய்து கொண்டிருந்த அதிவீரன் கோபமும் துன்பமும் வெட்கமும் கொண்டான். சூரபன்மனோ அவனைச் சேர்ந்தவர்களோ இத்தீர செயலைச் செய்யார். இந்திரனோ மறைந்து வாழ்கின்றான். திக்குப்பாலகர்கள், வித்தியாதரர்கள், சித்தர்கள் முதலியோர் சூரனின் ஆணைப்படி நடப்பவர்கள். எனவே அவர்களும் செய்யார். என் காவல் நன்று. இது தெரிந்தால் என் தந்தையும் சூரனும் கோபித்து என்னைக் கொல்வர். பிறர் இகழ்ந்து நகைப்பர். இச்செயலைச் செய்தவர்களைக் கண்டால் கொல்வேன் எனக் கடலுக்கு மேலே வந்தான். வீரவாகுத் தேவரைக் கண்டான். தன் சேனைகளோடு எதிர்த்துப் போர் செய்தான். தக்கசமயம் பார்த்து வீரவாகுத் தேவர் தன் வாளினால் அதிவீரனை வெட்டிக் கொன்றார்.

6. மகேந்திரபுரி செல்லல்

வீரவாகு பின்னர் இலங்கையை விட்டு மகேந்திரபுரிக்குச் சென்றார். அவர் சென்றதும் இலங்கை மீண்டும் பழைய நிலைக்கு உயர்ந்தது. மகேந்திரபுரியின் வடக்கு வாசலைக் கோரன், அதிகோரன் என்ற இரு அசுர வீரர்கள் காவல் காத்துக் கொண்டிருந்தனர்.

தூதுவனாக வந்த நான் இவர்களுடன் போர் செய்து பொழுதை வீணாக்காமல் சூரனைக் காணச் செல்வதே முறை எனக் கருதிய வீரவாகு கிழக்கு வாயிலுக்குச் சென்றரர். அங்கு மகிடாட்சன், வீரபானு என்ற இரண்டு அசுரத் தலைவர்கள் காவல் காத்துக் கொண்டிருந்தனர். துணையாக நால்வகைச் சேனைகளும் நின்று கொண்டிருந்தன. எனவே இவ்வாயில் வழியாக உள்ளே புக வாய்ப்பு இல்லை என்று கருதிய வீரவாகுத் தேவர் தெற்கு வாயிலுக்குச் சென்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7. கயமுகன் வதை

தெற்கு வாயிலைக் கயமுகன் என்னும் அசுரன் காவல் காத்துக் கொண்டிருந்தான். அவன் வீரவாகுவைப் பார்த்து மிகுந்த காவலை எல்லாம் கடந்து இங்கு வந்த உன்னை அனுப்பியவர் யார்? வந்த காரணம் என்ன? என அதட்டிக் கேட்டு அருகில் வந்தான். ஒரு மலையைப் பிடுங்கித் தூதரான வீரவாகு மீது கயமுகன் எறிந்தான். அம்மலை வீரவாகு தோள்மீது பட்டதும், திருநீற்றுக் கட்டி உடைவது போல் உடைந்தது. வீரவாகு போர் புரிய விரும்பா விடினும் வந்த போரை மறுப்பது வீரமாகாது என்று எண்ணிக் கயமுகனுடன் போர் புரியத் தொடங்கினார். கயமுகன் பறித்தெறிந்த மலைகளை எல்லாம் மாலை போல் மார்பில் வீரவாகு ஏற்றுக் கொண்டார். கயமுகனின் ஒரு பக்க ஆயிரம் கைகளை வெட்டினான். அவன் மறுபக்க ஆயிரம் கைகளால் வீரவாகு மார்பின் மேல் ஓங்கி அடித்தான். எனவே வீரவாகு அந்த ஆயிரம் கைகளையும் வெட்டினார். கைகளை இழந்த இவனுடன் போர் செய்ய மாட்டேன் என்று வீரவாகு தனது காலால் கயமுகனின் மார்பில் உதைத்தார். அவன் அலறி விழுந்து இறந்தான்.

இந்த வடிவத்துடன் காவல்காரர்களின் கண்களில் படாமல் நகருக்குள் நுழைய முடியாது என்று கருதிய வீரவாகு, முருகப் பெருமானைத் தியானித்து அணுவுருவம் கொண்டார். மகேந்திர புரியின் கிழக்கு வாயிலுள்ள கோபுரத்தின் மேல் அமர்ந்தார்.

8. நகரினுள் புகுதல்

கோபுரத்தின் மீது அணுவுருவில் அமர்ந்திருந்த வீரவாகுத் தேவர் தேவலோகத்தையும் வெல்லும் சிறப்புக்கள் பல மகேந்திரபுரியில் இருந்ததைக் கண்டார். அங்கு நோயுள்ள வர்களோ, வறியவர்களோ, முதியோர்களோ இல்லை. தவ வலிமையே காரணம் என நினைத்தார். காமதேனுவும், சிந்தாமணியும் வேண்டியவற்றைக் கொடுத்தன. ஆயிரம் கோடி நாக்குகளைப் பெற்றிருந்தால்தான் இந்த நகரத்தின் சிறப்பினைச் சொல்லமுடியும். வந்த காரியத்தை விட்டு நகரத்தின் வளங்களைப் பார்த்துக் கொண்டு காலத்தை வீணாக்குவது சரியல்ல என

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வீரவாகுத் தேவர் கருதினார். சூக்கும உருவத்துடன் வான் வழியே சூரனின் இருப்பிடம் அடைய எண்ணினார். ''சூரனைக் காணுமுன் என் புதல்வனைக் கண்டு ஆறுதல் கூறுக'' என்று இந்திரன் கூறியதை நினைத்தார். முதலமைச்சரான தரும கோபனின் மாளிகைச் சிகரத்தில் தங்கிச் சயந்தனும் தேவர்களும் சிறையிருந்த இடத்தைக் கண்டுபிடித்தார்.

9. சயந்தன் புலம்புதல்

சிறையில் சயந்தன் அளவற்ற துன்பங்களை அனுபவித்தான். ''என் தாயும் தந்தையும் பூவுலகுக்குச் சென்றார்கள் எனச் சிலர் சொல்லக் கேட்டேன். அங்கு அவர்கட்கு ஏற்படும் நன்மை தீமைகளை அறியேனே. ஊழின் வன்மையால் துன்பம் விளையும். அசுரர்கள் என்னைப் பலவாறு துன்புறுத்த நான் செய்த தீவினை யாதோ? சூரன் இறப்பானா? சிறையிலிருந்து விடுதலை கிடைக்குமா? பதவிகளை விரும்பிப் பெருந்துயர் அடைந்தேன். தேவ பதவிகள் சாறு போன சக்கை என உணர்ந்தேன். சிவபெருமானே அடியேன் உன் திருவடி ஒன்றையே இனி வேண்டுவேன்'' எனப் பலவாறு சயந்தன் புலம்பினான். ''எம்பெருமானே! தாங்கள் யானைக்கும் கரிக்குருவிக்கும் நாரைக்கும் பாம்பிற்கும் சிலந்திக்கும் மற்றஉயிர்கட்கும் முன்னொரு காலத்தில் அருள் புரிந்தீர். எமக்கு அருள் செய்யாத காரணம் யாதோ எனப் புலம்பினான். தில்லையில் திருநடனம் செய்யும் பெருமானே! விரைவில் அடியேனது துன்பத்தைப் போக்கித் திருவடிப் பேற்றைத் தந்தருள் எனச்சயந்தன் பிரார்த்தித்தான்.

10. சயந்தன் கனவு காணுதல்

சோகத்தால் மயங்கி உறக்க நிலையை அடைந்த சயந்தனுக்கு அருள் புரிய நினைத்தார் ஆறுமுகப் பெருமான். பன்னிரு திருக்கரங்களுடனும் ஆறு திருமுகங்களுடனும் தெய்வீகக் கோலத்தில் சயந்தன் முன் காட்சி தந்தார். கண்டான் சயந்தன். கை தொழுது வணங்கினான். ''பெருமானே! அடியேன் படும் துயர் களைய கருணையுடன் காட்சி தந்த நீர்யார்?'' என வினவினான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முருகப் பெருமான், ''சயந்தா! நான் சிவகுமாரன், கிரௌஞ்ச மலையையும் தாரகனையும் அழித்து விட்டுத் திருச்செந்தூரில் வீற்றிருக்கின்றோம். பிரமனும், திருமாலும் உன் தந்தையும் மற்றத் தேவர்களும் எம்முடன் இருக்கின்றனர். உன் தாய் மேருமலையில் உள்ளாள். நாம் சூரனிடம் ஒரு தூதரை அனுப்பியுள்ளோம். அவன் கூறும் நீதி நெறிகளைக் கேட்டுச் சூரன் உங்களை விடுவித்தால் சரி. சூரன் அவற்றைக் கேட்க மாட்டான் என எமக்குத் தெரியும். நாம் நாளையே மகேந்திரபுரி வருவோம். போர் மூளும். உங்களனைவரையும் சிறையிலிருந்து விடுவிப்போம். உங்கள் துன்பம் தொலையும்'' என்று கூறி மறைந்தருளினார். விழித்தெழுந்த சயந்தன் மற்றத் தேவர்களும் தான் கண்ட கனவையே கண்டிருப்பதை அறிந்து மகிழ்ந்தான்.

11. வீரவாகு சயந்தனைத் தேற்றுதல்

வீரவாகுத் தேவர் சிறைச்சாலையை அடைந்தார். காவலர்களை மயங்கச் செய்து, முருக நாமத்தைக் கூறிக் கொண்டே சயந்தன் முன்சென்றார். சயந்தனும் மற்றத் தேவர்களும் அவர் முருகப் பெருமானின் தூதர் என்பதை ஊகித்து அறிந்தனர். வீரவாகுவும் தான் முருகப் பெருமானுக்குத் தம்பியும் தூதனுமாவதாகக் கூறித் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார். சயந்தனின் வேண்டுகோளுக்கு இணங்க, அவன் தந்தை இந்திரன் முன்னாளில் தாய் இந்திராணியுடன் சீர்காழி சென்றது முதல், திருச்செந்தூர் வந்தது வரை நிகழ்ந்த செயல்களையெல்லாம் அவனிடம் விரிவாகக் கூறினார்.

மேலும் வீரவாகுத் தேவர் பின்வருமாறு கூறினார். ''ஒப்பற்றதாய், மேலானதாய், ஞான ஒளியாய், யாவரும் நினைத்தற்கரிய பரம்பொருளான சிவபெருமானே முருகக் கடவுளாக அவதரித்துள்ளார். நீங்கள் தக்கன் வேள்வியில் கலந்து அவன் அளித்த அவியை உண்ட பாவம் வீரபத்திரரால் தண்டிக்கப்பட்டும் முழுவதும் நீங்காமையால், மிச்சமிருந்த பாவத்தால் உங்கட்கு இத்துன்பம் உண்டானது. முருகப் பெருமான் பத்து நாட்களில் பெரும்போர் செய்து, அசுரர்களைக் கொன்று உங்களைச் சிறை மீட்பார். நீங்கள் இழந்த சிறப்புக்களை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உங்கட்கு மீண்டும் தந்தருள்வார்'' என்று கூறித் தேற்றினார். தேவர்கள் அவர் வெற்றி பெறத் தொழுது வாழ்த்தினார்கள்.

12. சூரனின் அவை புகுதல்

வீரவாகுத் தேவர் சிறைக்கூடத்திலிருந்து புறப்பட்டு, சூரன் அரசு வீற்றிருக்கும் அவைக்களத்தை அடைந்தார். சூரபன்மன் தலையிலே இரத்தின முடியும் நெற்றியிலே திருநீறும் காதிலே குண்டலங்களும் மார்பிலே முத்து மாலையும் உடலிலே கலவைச் சாந்தும் இடுப்பிலே பீதாம்பரமும் கைகளில் காப்பும் கால்களில் வீரக்கழலும் அணிந்து பெருமிதத்துடன் சிம்மாசனத்தில் வீற்றிருந்தான்.

சூரபன்மனின் அவையின் சிறப்பையும் பெருமிதத்தையும் கண்ட வீரவாகுத் தேவர், ''இவன் இந்தப் போக வாழ்வைத் தவமிருந்து சிவனருளால் பெற்றுள்ளான். தேவர்களைச் சிறை வைத்த குற்றத்திற்காக இந்தச்சிறப்புக்களையெல்லாம் இழக்கப் போகிறானே'' என வருந்தினார்.

''தன்னுடைய கூட்டில்மின்மினி என்று எண்ணிக் கொள்ளிக் கட்டையைக் கொண்டு வைத்த தூக்கணாங்குருவி போல, தேவர்களை இவன் சிறை வைத்துள்ளான். இதனால் அழிவே என்பதை இவன் அறியவில்லையே'' எனக் கவலைப்பட்டார்.

முருகப் பெருமானின் தூதனான தான் சூரனுக்குத் தாழ்வாக உட்கார்ந்தால் முருகப்பெருமானுக்கு அல்லவா அவமானம் என நினைத்து முருகப்பெருமானைத் தியானித்தார். சிவனருளால் திருஞான சம்பந்தருக்கு முத்துப் பந்தரும், முத்துச் சிவிகையும் வந்தன போல, முருகப் பெருமானருளால் ஆயிரம் கோடி சூரியன் ஒளி வீசுவதுபோன்ற பொன்மணிச் சிங்காதனம் தோன்றியது. முருகப்பெருமானின் திருவடிகளைத் துதித்து வீரவாகுத் தேவர் அதில் அமர்ந்தருளினார்.

வெகுண்ட சூரன், ''எங்கள் ஊரில் கருவிலிருக்கும் குழந்தை கூட இந்த வித்தையைச் செய்யும். என் முன் அஞ்சாது இவ்வித்தையைச் செய்கின்ற நீ உன் உயிர் போவதற்கு முன் யார் என்பதைச் சொல்லி விடு'' என்றான். ''தேவேந்திரன் குறை தீரும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருட்டும், தேவர்களைச் சிறை நீக்கும் பொருட்டும் திருச்செந்தூர் வந்து தங்கியிருக்கும் முருகப் பெருமானின் அடியவன் நான்'' என்று வீரவாகுத் தேவர்கூறினார்.

''முருகனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். பால்மணம் மாறாத சின்னஞ்சிறு பாலகனின் தூதனா நீ. சரி வந்த காரணம் என்ன? சொல்'' என்றான் சூரன். வீரவாகு, ''சூரபன்மன்! உன் தந்தை காசிபர். தேவர்களும் அவருடைய புதல்வர்கள் தான். எனவே தேவர்கள் உனக்கு மூத்த சகோதரர்கள். அவர்களைச் சிறை வைத்திருப்பது நியாயமா? அவர்களை விடுவி. முன்னொரு காலத்தில் தேவர்கள் அசுரர்கட்குத் துன்பம் செய்தார்கள் என்று நீ பதிலுக்கு அவர்களைச் சிறை வைத்திருந்தாலும் அதற்கும் ஓர் எல்லை இருக்க வேண்டாமா? நீ தேவர்களை விடுவிக்காவிடில் முருகனின் வேல்படை உன்னை அழிப்பது உறுதி'' என்றார்.

சூரன், ''தேவர்களை விடுவிக்க மாட்டேன். குழந்தைப் பேச்சுக்குச் சூரன் செவி சாய்க்க முடியாது. தூதனான உனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தேன். ஓடிப்போ'' என்றான். வீரவாகு, ''உயிர்க்கு உயிராயும் அருவுருவாயும் எல்லோர்க்கும் அம்மையப்பராய் விளங்கும் சிவபெருமானே முருகன். இரு வினைகளை ஈட்டுகின்ற உயிர்கட்கெல்லாம் அவ்வினைப் பயன்களைக் கூட்டுவிக்கின்றவர் அவர். முக்தி கொடுப்பவர் அவர். அவருடைய ஆணையின்றி ஓரணுவும் அசையாது. அவருடைய திருமேனியிலுள்ள ஒரு உரோமத்தில் புல் நுனியில் மழைத்துளி போல, அளவிறந்த அண்டங்கள் தோன்றும். நீ திருந்தாவிடில் முருகனின் வேல்படை உன்னை அழிப்பது உறுதி'' என்றார்.

கோபம் கொண்ட சூரன் ஆணவத்தால் முருகப் பெருமானின் பெருமையை உணரவில்லை. தூதனைக் கொல்லக் கூடாது என்பதை உணர்ந்திருந்ததால் வீரவாகுவைச் சிறைப்படுத்தும்படி வீரர்களை ஏவினான். வீரவாகு தனியொருவராய் அவர்களின் சிகைகளை ஒரு கையால் பிடித்துச் சூரனின் அவையிலேயே அவர்களை அடித்துக் கொன்றார். சூரனின் எதிரிலேயே இறந்தவர்களின் உடல்களை வீசி விட்டு அங்கிருந்து வீரவாகு புறப்பட்டார். அவரமர்ந்த அரியணையும் மாயையென மறைந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

13. சதமுகன் வதை

வானில் புறப்பட்ட வீரவாகுவைப் பிடித்து அடக்கிக் கட்டிக் கொண்டு வருமாறு சதமுகனையும் ஓர் இலட்ச வீரர்களையும் சூரன் ஏவினான். போர் நடந்தது. அசுரர்கள் ஏவிய ஆயுதங்கள் வீரவாகுத் தேவரின் திருமேனியில் பட்டதும் துகள்களாயின. வீரவாகுத்தேவர் இருபதினாயிரம் சிகரங்களைக் கொண்ட ஒரு சூளிகையைப் பறித்து அசுரர்கள் மீது எறிந்தார். அது அசுரர்களைக் கொன்றது. வீரவாகு சதமுகனைக் கொன்றார். சூரனின் அத்தாணி மண்டபத்தையும் நகரத்தையும் அழிக்க வீரவாகு எண்ணினார்.

14. காவலாளர்கள் வதை

வீரவாகுத் தேவர் முருகப்பெருமானின் திருவருளால் பேருருவம் கொண்டார். அதன் சுமை தாங்காது மகேந்திரபுரி நடுங்கியது. அரண்மனையைக் காவல் புரிந்த ஐம்பது வெள்ளம் அசுரர்கள் வீரவாகுவை எதிர்த்தனர். வீரவாகு அனைவரையும் அழித்தார்.

15. நகரத்தை அழித்தல்

ஐந்நூறு யோசனை அகலமும், ஆயிரம் யோசனை உயரமும் இலட்சம் சிகரங்களும் கொண்ட ஒரு செய்குன்றைக் கையால் பெயர்த்தெடுத்து அத்தாணி மண்டபத்தின் மீது வீரபாகு வீசினார். மண்டபம் அழிந்தது. நகரத்திலுள்ள சோலைகளையும் செங்குன்றுகளையும் மண்டபங்களையும் கோபுரங்களையும் மண்ணோடு மண்ணாக்கினார். நகரம் நீர்மூலமானது. மக்கள் தம் நிலைகெட்டு அழியும்போது எழுந்த அவலஒலி எழுகடல் ஓசைகளையும் அடக்கியது. மாண்ட அசுரர்களின் இரத்தம் ஆறெனப் பெருகி நகரத்தைச் சேறாக்கியது. நகரம் வளங்களை இழந்து அழிந்தது.

16. சகத்திர வாகுகன் வதை

ஐந்நூறு தலைகளும் ஆயிரம் கைகளும் கொண்ட சகத்திரவாகுகன் வந்து வீரவாகுத் தேவரை எதிர்த்தனர். வீரவாகு மராமரத்தினால் அவர்களை அடித்துக் கொன்றான். அதனைத் தூதுவர்கள் போய் சூரனிடம் தெரிவித்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

17. வச்சிரவாகு வதை

செய்தி கேட்ட சூரன் கடும் கோபம் கொண்டான். தந்தையின் கோபத்தைக் கண்ட சூரனின் இளைய மகன் வச்சிரவாகு தானே வீரவாகுவைச் சிறைப்பிடிக்கப் புறப்பட்டான். பதினாயிரம் குதிரைகள் பூட்டப்பட்ட தேர்மீது போர்க்கோலம் பூண்டு ஏறினான். அவ்வமயம் துர்ச்சகுனங்கள் பல தோன்றின. அவன் கையிலுள்ள வில் தானாக நழுவிக் கீழே விழுந்தது. அம்பறாத் துணி அறுந்தது. தேர்க்கொடிகள் கிழிந்தன. அவனது இடத்தோளும் இடக்கண்ணும் துடித்தன.

வீரவாகுத் தேவருக்கும் வச்சிரவாகுவின் படைகட்கு மிடையே பயங்கரப் போர் மூண்டது. வீரவாகு வச்சிரவாகுவின் தேரைக் கையால் எடுத்து வானத்தில் எறிந்தார். விண்ணில் தேருடன் தூக்கி எறியப்பட்ட வச்சிரவாகு, வீரவாகு முன் திரும்பி வந்து விழுந்து மீண்டும் போர் செய்ய முனைந்தான். வீரவாகு வச்சிரவாகுவைக் கொன்றார்.

18. யாளி முகன் வதை

வீரவாகு இலங்கையை அடைந்தார். அதை யாளிமுகன் காவல் காத்துக் கொண்டிருந்தான். தன் மகன் அதிவீரனைக் கொன்ற வீரவாகு வந்திருப்பதை அறிந்து அவரைப் பிடிக்க முயன்றான். வீரவாகு யாளி முகனைக் கொன்றார்.

19. வீரவாகு திருச்செந்தூர் மீண்டார்

வீரவாகு திருச்செந்தூரை அடைந்தார். தேவர்கள் ஆரவாரித்தனர். வீரவாகு முருகப் பெருமானின் திருவடிகளை வணங்கி, ''பெருமானே! கல்லைப் பஞ்சாக்க முடியாது. மூடர்களை யாராலும் திருத்த முடியாது. தேவரீரின் திருவாக்குகளைக் கூறியும் சூரன் திருந்தவில்லை. தங்களுடைய வேல் ஒன்றுதான் அவனைத் திருத்தும்'' என்றார். ஆறுமுகப் பெருமான் வீரவாகு செய்த வீரச்செயல்களைக் கூறும்படி ஆர்வத்துடன் கேட்டார். வீரவாகு ''தங்களின் திருவருளால் தானே, இடையூறு செய்தவர்களை வென்று வந்தேன். தங்கட்குச் சொல்லவும் வேண்டுமோ?'' என்றான். முருகப் பெருமான் தான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மறுநாள் போருக்கு புறப்படுவதாகக் கூறினார். தேவர்கள் மகிழ்ந்தனர். வீரவாகு தான் சயந்தனைச் சிறையில் சந்தித்து ஆறுதல் கூறியதை இந்திரனிடம் சொன்னான். இந்திரன் மகிழ்ந்தான்.

20. சூரன் நகரைச் சீரமைத்தல்

தன் மகன் வச்சிவாகு இறந்த செய்தியை அறிந்த சூரன் வருந்தி அழுதான். அவனது சுற்றத்தாரும் பதுமகோமளையும் கதறி அழுதனர். மந்திரி தருமகோபன் சூரனை வணங்கி, ''அரசே! தாங்கள் கண்ணீர் விட்டால் தேவர்கள் நகைக்க மாட்டார்களா? எவ்வளவு இன்னல்கள் நேர்ந்தாலும் மனவலிமை குன்றாது எண்ணியதை முடிப்பவர்களே வீரர்கள். விதிய வெல்ல யாராலும் முடியாது. உங்கள் புதல்வனின் விதி முடிந்தது. வரம்பிலா வரங்களைப் பெற்ற தாங்கள் இதற்காக வருந்தக் கூடாது. மேலே நடக்க வேண்டியதைப் பார்ப்போம்'' என்றான்.

சூரன் மனம் தெளிந்தான். சிதைந்த நகரைப் புதுப்பிக்க எண்ணிப் பிரமனை அழைத்து வரப் பணித்தான். ஏவலர்கள், ''பிரமன் இந்திராதி தேவர்களுடன் முருகப் பெருமானுடன் போய்த் தங்கியுள்ளான்'' எனப் பயத்துடன் கூறினர். சூரன் நெருப்புப் பொறி புறக்கச் சிரித்து, ''இந்த அண்டத்துப் பிரமன் தானே நமக்குத் துரோகம் செய்து விட்டு எதிரியுடன் போய்ச் சேர்ந்து கொண்டான். மற்ற அண்டங்களிலுள்ள பிரமன்களில் ஒருவனை அழைத்து வாருங்கள்'' எனப் பணித்தான்.

அதன்படி ஒரு பிரமன் வந்தான்.சூரனின் ஆணைப்படி நகரைப் புணர் நிர்மாணம் செய்தான். சூரன் மகிழ்ந்து அவனுக்கு அவனிருப்பிடம் செல்ல விடை கொடுத்தான்.

21. சூரன் அமைச்சியல்

சூரன் திருச்செந்தூருக்கு அனுப்பியிருந்த பகன், மயூரன் முதலிய ஒற்றர்கள் முருகப் பெருமான் போர் செய்ய வரப் போவதைச் சூரனிடம் தெரிவித்தனர்.

சூரன் தன் தம்பி, புதல்வர்கள், மந்திரிகள், சேனாதிபதிகள் முதலியோரை அழைத்து சபையைக் கூட்டினான். நடந்தவை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களைத் தெரிவித்தான். முருகப் பெருமான் போர் புரியப் படை எடுத்து வருவதைக் கூறி இனிச் செய்ய வேண்டியவை யாவை என ஆலோசனை கேட்டான். ஒவ்வொருவரும் தத்தம் கருத்தைக் கூறத் தொடங்கினர்.

மகிடன் என்னும் அமைச்சன் முருகப் பெருமான் கிரௌஞ்ச மலையையும், தாரகனையும் அழித்தவுடனேயே அவனுடன் போருக்குப் போயிருந்தால் அவனுடைய தூதன் வந்து இங்கு அட்டூழியம் செய்திருக்க முடியுமா? இனியாவது காலந் தாழ்த்தாது போருக்குப் போவோம் என்றான்.

மற்றொரு அமைச்சனான துர்க்குணன் எழுந்து, ''அரசே! அழிவில்லாத ஆயுளையும் விளங்கும் ஆணைச் சக்கரத்தையும் நிறைந்த செல்வத்தையும் வலிமையையும் வீரத்தையும் பிற திறன்களையும் தவத்தால் நீ பெற்றது ஒரு சிறுவனுடன் போர் செய்வதற்கோ? படைத் தலைவர்களை அனுப்பி வைத்தால் அவர்களே குன்றெறி பகைவனைப் பூத கணங்களோடு வென்று மீள்வர்'' என்றான்.

தலைமை அமைச்சனான தருமகோபன் எழுந்து, ''அரசர்க்கரசே! அச்சிறுவனுடன் தாங்கள் போர் செய்யச் செல்வது, நல்ல நவமணிகள் பதித்துப் பொன்னால் செய்யப்பட்ட கலப்பையைக் கொண்டு அற்ப கொள்ளை விதைக்கப் புன்செய் நிலத்தில் உழுவதைப் போன்றதாகும். நகத்தால் கிள்ள வேண்டியதை வாளால் வெட்டுவார்களா? பூத கணத்தவர்களும் ஆறுமுகனும், எரிமுகன், இரணியன் என்ற உன் இரு மைந்தர்களுள் ஒருவனுக்குக் கூட நிகராக மாட்டார்கள். அச் சிறுவனையும் அவனுடன் உள்ள மற்ற வீரர்களையும் இங்கிருந்தே பாணம் போட்டு நான் கொன்று விடுகிறேன் அல்லது ஒரு சேனாபதியை அனுப்பி வைத்தால் அவனே முருகனை வென்று விடுவான். திருமாலையும் இந்திரனையும் சயந்தனையும் மற்றவர்களையும் போரில் வென்ற நாளில் எம்முடன் சேர்ந்து ஆலோசிக்கவில்லை. அப்படியிருக்க இன்று ஒரு பாலனுக்காக மிகப்பெரிய மந்திரலோசனை செய்ய வேண்டுமா?'' என்றான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காலசித்து என்பான் படைகளுடன் தான் சென்று முருகனைக் காலபாசத்தால் கட்டிக் கொண்டு வருவதாகச் சொன்னான்.

சண்டன், அனலி, சிங்கன் முதலியோர் தாமே போருக்குச் சென்று வருவதாகக் கூறினர்.

சூரனின் மூத்த மகன் பானுகோபன் எழுந்தான். ''தந்தையே! முருகன் கிரௌஞ்ச மலையையும் உன் தம்பி தாரகனையும் கொன்ற அன்றே என்னைப் போருக்கு அனுப்பியிருக்கலாம். தூதன் வந்த போதும் முள் போன்ற சிறிய பற்கள் இன்னமும் முழுதும் முளைக்கப்பெறாத இளைய மகன் வச்சிரவாகுவை அறிவில்லாமல் அனுப்பித் துன்பப்பட்டாய் என்ற பழியை அடைந்தாய். ஆயிரத்தெட்டு அண்டங்கட்குத் தலைவனான நீ சிவகுமாரனுடன் போர் செய்யப் புறப்படுதல் அழகன்று. என்னை அனுப்பி வெற்றி அடைந்து இங்கு வீறுடன் இருப்பாயாக'' என்றான்.

சூரனின் மற்ற புதல்வர்களாகிய இரணியனும் அக்கினி முகனும் தாங்களே போருக்குச் செல்வதாகக் கூறினர். முருகனுடன் போருக்குச் செல்ல வேண்டும் என்பதை அனைவரும் ஒத்துக் கொண்டனர். போருக்குத் தாமே முதலில் செல்ல ஒவ்வொரு வரும் முந்தினர்.

இந்நிலையில் தம்பி சிங்கமுகன் எழுந்தான். ''மன்னரின் செவியில் தீயை நுழைத்தாற்போல நல்வழி தரும் ஒப்பில்லாத நடுவு நிலையான நீதியைச் சொல்பவரே அமைச்சர் எனப்படுவர். அவையோர் கூறியவை உனக்கு அழிவையேத் தரும். சிவன் நமக்குத் தந்த பெருவாழ்வு நூற்றெட்டு ஊழிக்காலமே ஆகும். அக்காலம் முடியும் தருணம் வந்து விட்டது. நீ தேவர்களை விடுவிக்கவிடில் நம் குலத்தை முருகன் அழித்து விடுவான்'' என்று அறிவுரை கூறினான்.

சூரன், ''தம்பி! நீ இந்திரனுக்கும் தேவர்கட்கும் சிறு பாலனுக்கும் கயிலையில் காவல் புரியும் பூத கணங்கட்கும் அஞ்சினை. சிறு பாலன் என்னை வெல்லமுடியும் என நீ நினைப்பது, கண்ணில்லாதவன் சூரியனைப் பழம் என்று காட்ட, கையில்லாதவன் அதனைப் பிடித்துக் கொண்டான் என்பதைப் போன்றதாகும்'' என்றான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிங்கமுகன், "அண்ணா! தேவர்களைச் சிறை வைத்த உன்னை வரம் தந்த தாமே அழிப்பது முறையன்று என்றே சிவகுமாரனைச் சிவன் தோற்றுவித்தார். சீலம் இல்லாதவர்களால் உணர முடியாத ஞானமூர்த்தியைப் பாலன் என்று நீ இகழ்ந்தனை. ஒரு சிறிய ஆலம் விதையில் மிகப் பெரிய ஆலமரம் முழுவதும் அடங்கி யிருந்து பின் தோன்றுவது போல, அப் பெருமானிடத்திருந்தே முன்னாளில் பல பொருள்களும் தோன்றின.

தூய பிருதிவி தத்துவம் முதல் குடிலை வரை பொருந்தியுள்ள பல அண்டங்களும் அவற்றிலுள்ள பல உயிர்களும் அவ்வுயிர்கட் குரிய போகப் பொருள்கள் பலவுமாக விளங்குபவர் அப்பெருமான். அனந்தகோடி அண்டங்களையும் தமது வல்லமையால் ஓர் இமைப்பொழுதில் உண்டாக்கவும், அழிக்கவும் வல்ல ஒப்பில்லாத முதற் கடவுள் முருகப் பெருமான். வச்சிரதேகம் பெற்று விட்டோம். ஆதலால் அழிவில்லை என எண்ணாதீர்கள். தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்து அழியாமலிருக்க வழிதேடுங்கள்" என்று அறிவுரைகள் கூறினான்.

சூரன், "நம் குலத்தை அழித்த தேவர்களைச் சிறை வைத்தது குற்றமன்று. நான் விடுவிக்க மாட்டேன்" என்று பிடிவாதமாகக் கூறித் தம்பியையும் இகழ்ந்து பேசினான். சிங்கமுகன் விதியை வெல்ல யாரால் முடியும் என வருந்தி, அண்ணன் தன்னைக் கடிந்து பேசினாலும் தான் அவனைக் கைவிடலாகாது. அண்ணனுக்கு முன்பே தான் இறப்பது நன்று" என முடிவு செய்தான். போருக்குச் செல்ல உடன்பட்டு விடை தரும்படிக் கேட்டான்.

சூரன் மகிழ்ந்து, "நீ படைகளைத் திரட்டிக் கொண்டு உன் ஊரில் தயாராக இரு. நான் அழைக்கும் பொழுது வரலாம்" என்றான். சிங்கமுகனும் தன் நகரான ஆசுரபுரிக்குச் சென்றான்.

மகேந்திர காண்டம் முற்றிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. யுத்த காண்டம்

இக்காண்டம் ஏமகூடப் படலம் முதல் மீட்சிப்படலம் முடிய 16 படலங்களைக் கொண்டது.

1. முருகப் பெருமான் ஏமகூடம் வருதல்

முருகப்பெருமானின் கட்டளைப்படி வீரவாகுத் தேவர் முருகனின் மனோவேகத் தேரைக் கொண்டு வந்து நிறுத்தினார். முருகப்பெருமான் போருக்குப் புறப்பட்டார். தேவர்களை அவரவர் ஊர்திகளில் புறப்படுமாறு கட்டளையிட்டார். முருகப் பெருமானுடன் இரண்டாயிரம் வெள்ளம் பூதப்படைகள் புறப்பட்டன. தேவர்கள் பூமழை பொழிந்தனர். பலவகைப் போர்க்கருவிகள் ஒலித்தன. கடல் வழியாகப் படைகள் சென்றன. ஏமகூடம் என்ற இடத்தில் தேவர்கள் பாசறை அமைத்தனர். அங்குள்ள அரியணையில் முருகப் பெருமான் எழுந்தருளினார்.

ஏமக்கூடம்தான் கதிர்காமம் என அழைக்கப்படுகிறது. கதிர்காமம் என்றால் ஒளி மயமான விருப்பத்தையெல்லாம் நிறைவேற்றித் தருவது என்று பொருள். அங்கே சுவாமி ஒளிமயமாக விளங்குகின்றார். எனவே அவரைத் தரிசிக்கக் கூடாது என்று திரை போடப்பட்டுள்ளது. அத்திரை முன் காட்டப்படும் கர்ப்பூர ஒளியைத் தான் பக்தர்கள் தரிசனம் செய்ய வேண்டும்.

2. வரவு கேள்விப்படல்

முருகப்பெருமான் ஏமகூடம் வந்துள்ள செய்தியை நாரதர் அறிந்தார். சூரனிடம் சென்றார். அவன் சிறப்போடு வீற்றிருத்தலைக் கண்டார். "இத்தீயோன் வாழ்வு விரைவில் முடிய வேண்டும்" என்று மனத்தில் கருதிக் கொண்டு வாயினால் சூரனுக்கு ஆசி கூறினார். சூரன் நாரதரை, "நீ யார்? என்ன காரியமாக வந்தாய்" எனக் கேட்டான்.

நாரதர், "நான் வட கயிலையில் வாழ்பவன். என் பெயர் நாரதர். உங்கள் குலகுருவாகிய சுக்கிராச்சாரியாரின் நண்பன். ஆசைகளை வெறுத்துத் தவம் செய்பவன். உன்னிடம் ஒன்று தெரிவிக்க வந்தேன்" என்று கூறி மேலும் பின்வருமாறு கூறினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முருகப் பெருமானின் அவதாரத்தையும், அவர் சூரனை அழிக்கப் படையுடன் வந்து ஏமகூடத்தில் தங்கியிருப்பதைத் தெரிவிக்கவும் வந்ததாகக் கூறினார்.

அதுகேட்ட சூரன் கோபத்துடன் சிரித்தான். ஆயிரத்துஎட்டு அண்டங்களை ஆட்சி செய்யும் என்னை அச்சிறுவன் எளிமையாக நினைத்து விட்டான். அவனை வெல்ல நானே போக வேண்டிய அவசியமில்லை. என் மகன் பானுகோபனே சென்று வென்று வருவான் என்றான்.

சூரபன்மனைப் போருக்குத் தூண்டிவிட்டு நாரதர் தான் தவம் செய்ய போவதாகச் சொல்லிப்போய்விட்டார். சூரன் வருணனை அழைத்து முருகப்பெருமான் அங்கு வர வழிவிட்டதற்காகக் கோபித்தான். வருணன், ''கடப்ப மாலை அணிந்த முருகப் பெருமான் வான் வழியே செல்ல, ஆற்றல் நிறைந்த பூத கணங்கள் என் வழியாக நடந்து சென்றனர். அவர்களின் கணுக்காலுக்கும் நான் எட்டவில்லை வலியவர்களாகிய அவர்களை நான் எதிர்த் திருந்தால் முன்பு அகத்திய முனிவர் கடலைக் கையால் எடுத்து உண்டதைப் போல என்னை உண்டிருப்பர்'' என்றான்.

அப்போது ஒற்றர்கள் ஓடிவந்து, முருகப் பெருமான் மகேந்திரபுரியின் வடக்குத் திக்கில் வந்து, தேவ தச்சனைக் கொண்டு பாடி வீடு அமைத்துத் தங்கியிருப்பதைத் தெரிவித்தனர்.

3. முதல்நாள் பானுகோபன் யுத்தம்

சூரபன்மன் ஒற்றர்களிடம் பானுகோபனை அழைத்து வரக் கட்டளையிட்டான். பானுகோபன் வந்தான். சூரன் அவனிடம் முருகப் பெருமான் படையெடுத்து வந்துள்ளதைக் கூறிப் போருக்குப் புறப்படச் சொன்னான்.

பானுகோபன் போர்க்கோலம் பூண்டான். அசுரர் படைத் தலைவர்கள் பலர் அவனுடன் புறப்பட்டனர். படைக்கலங்கள் பல ஏந்தி, நால்வகைப் படைகள் சூழப் பானுகோபன் முருகப் பெருமான் இருக்கும் பாசறையை நோக்கிப் புறப்பட்டான்.

நாரதர் முருகப்பெருமானிடம் பானுகோபன் போருக்குப் புறப்பட்டு விட்டதைத் தெரிவித்தார். ''அவன் திருமால், பிரமன்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்திரன் முதலியோரை வென்றவன். மாயங்கள் பல கற்றவன். பிரமன் தன் படைக் கலங்களை அவனுக்குக் கொடுத்துள்ளார். தாங்கள் அவனைக் கொல்ல வேண்டும்'' என அறிவித்தார்.

முருகப் பெருமான் பானுகோபனை எதிர்த்துப் போரிட வீரவாகுத் தேவருக்குக் கட்டளையிட்டான். வீரவாகுவும் முருகப் பெருமானை வணங்கிப் போருக்குப் புறப்பட்டார். அவருடன் இலக்கத்தெட்டு துணைவர்களும் ஆயிரம் வெள்ளம் பூதர்களும் போர்க்கோலம் புனைந்து புறப்பட்டனர்.

அசுரப் படைக்கும் பூதப் படைக்கும் போர் தொடங்கிற்று. அசுரப் படைகள் அளவற்ற ஆயுதங்களைப் பூதப்படைகள் மேல் எறிந்தனர். பூதப் படைகள் மரங்களையும் மலைகளையும் பெயர்த்து வீசி அசுரர்களை மாய்த்தனர். இரு பக்கங்களிலும் பலர் இறந்தனர். அசுரப் படைகள் சிதறி ஓடின.

இதைக்கண்ட அனலி என்ற அசுரப் படைத் தலைவன், சிங்கன் என்ற பூதப் படைத் தலைவனை எதிர்த்துப் போரிட்டு மாண்டான். அசுரப் படைகளின் மற்றொரு தலைவனான சண்டன் சிங்கனுடன் போருக்கு வந்தான். சிங்கன் இறந்த அனலியின் கையிலிருந்த தண்டைப் பறித்துச் சண்டனின் தோளைத் தாக்கினான். சண்டன் தன் கைத் தண்டினால் சிங்கனின் மார்பில் அடித்தான். இருவரும் மயங்கி விழுந்தனர்.

அசுரப்படைகளின் மற்றொரு தலைவனான மாயன் தேரில் ஏறி விரைந்து அங்கு வந்தான். பூதப் படைகளின் தலைவனான நீலனுடன் போரிட்டு மாயன் மாண்டான். இதற்குள் சண்டனும் சிங்கனும் மூர்ச்சை தெளிந்து எழுந்து மீண்டும் போரிட்டனர். இறுதியில் சிங்கன் சண்டனைக் கொன்றான்.

சண்டன் இறந்ததைக் கண்ட அசுரப் படைகளின் மற்றொரு தலைவனான அசமுகன் தேரில் ஏறிச் சிங்கனை நெருங்கினான். இருவருக்குமிடையே மது என்ற பூதப்படைத் தலைவன் பாய்ந்தனன். அசமுகனும் மதுவும் போரிட்டனர். ஒரு சமயம் ஆயுதமின்றி நின்றிருந்த மதுவின் மீது அசமுகன் திருமாலின் சக்கரப் படையை ஏவினான். அச்சக்கரப் படை ஆயுதம் இல்லாதவன் மீது எறியப்பட்டால், எறிந்தவனிடமே திரும்பி வந்து அவனை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அழித்துவிடும். அதன்படி அது திரும்பி வந்து அசமுகனின் தலையை அறுத்தது.

இலக்கம் வீரர்களில் ஒருவனான தண்டகன் அசுரப் படைகளின் மீது மழைபோல் பாணங்களை விடுத்தான். அசுரர்கள் பலர் மாண்டனர். எஞ்சியவர்கள் உயிருக்குப் பயந்து ஓடினர்.

பார்த்த பானுகோபன் தானே முன் வந்து நேரிடையாகப் போர் புரிந்தான். பூதப் படை தலைவர்களான உக்கிரரும், தண்டியும், பினாகியும் பானுகோபனை எதிர்த்துத் தோற்றனர். பானுகோபன் அளவற்றபாணங்களை இலக்கம் வீரர்களின் உடலில் விடுத்து அவர்களை வென்று விட்டான்.

பின் வீரகேசரி, வீர மார்த்தாண்டர், வீரராக்கதர், வீர மகேச்சுரர், வீர தீரர், வீர மகேந்திரர், வீர புரந்தரர் ஆகியோர் பானுகோபனுடன் போரிட்டுப் புறமுதுகிட்டு ஓடினர்.

பூதப் படைகள் தோல்வியுறுவதைக் கண்ட வீரவாகுத் தேவர் பானுகோபனை எதிர்த்து நாண் ஒலி செய்தார். பானுகோபனும் தன் வில்லை வளைத்து ஒலி எழுப்பினான். வீரவாகுத் தேவருக்கும் பானு கோபனுக்கும் கடுமையாகப் போர் நடந்தது. இருவரும் ஆயிரக் கணக்கில் பாணங்களை மழைபோல் பொழிந்தனர். வீரவாகுத் தேவர் பானுகோபனின் வில்லையும், வச்சிர கவசத்தையும் உடைத்து விட்டார். அம்பறாத் தூணியையும் அறுத்தெறிந்தார்.

வில்வித்தையினால் வீரவாகுவை வெல்ல முடியாது என அறிந்த பானுகோபன் பிரமனிடமிருந்து பெற்ற மோகப் படையைப் பூதப் படைகள் மீது செலுத்தினான். பூதப் படைகளும் வீரவாகுவும் மயங்கி விழுந்தனர். இதனை உணர்ந்த முருகப் பெருமான் அமோகப் படையை விடுத்தார். அது பூதப்படைகள் வீரவாகுத் தேவர் முதலியோர்களின் மயக்கத்தைத் தீர்த்தது. பூதப் படைகள் எழுந்தன.

வீரவாகுத் தேவர் சிவப்படையைப் பானுகோபன் மீது விட எடுத்தார்.இனி அங்கு நின்றால் தனது உயிர் போய் விடும் என உணர்ந்து பானுகோபன் மாயமாக விண்ணில் மறைந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மறைந்து செல்கின்றவனைக் கொல்வது யுத்த தருமம் ஆகாது என்று வீரவாகுத் தேவர் வாளா இருந்து விட்டார்.

பானுகோபன் பகைவர்களை வெல்லவில்லை என்ற செய்தியைத் தூதுவர்கள் மூலம் கேட்டறிந்த சூரபன்மன் மிகுந்த கோபம் கொண்டான். ''நாளைப் போருக்கு நானே சென்று முருகனை எம் ஆற்றலால் வென்று இங்குத் திரும்புவேன்'' என்று கூறித் தூதுவர்களுக்கு விடை கொடுத்தான் சூரன்.

4. இரண்டாம் நாள் சூரபன்மன் யுத்தம்

மறுநாள் சூரியன் உதிப்பதற்கு முன் சூரபன்மன் எழுந்தான். நித்திய கருமங்களை முடித்தான். கடல்களில் இருக்கும் தன் படைகளை அழைத்து வரும்படி ஒற்றர்களுக்குக் கட்டளை இட்டான். படைகள் வந்தன. சூரன் பார்த்து மகிழ்ந்தான். போர்க்கோலம் பூண்டு தேரில் ஏறிப் படைகள் சூழப் புறப்பட்டான். அதிசூரனும் அசுரேந்திரனும் சூரனைத் தொடர்ந்தனர்.

தேரின் மேலும், யானைகளின் மேலும் பொருந்தியுள்ள கொடிகள் வானத்தில் சென்று கங்கையில் நனைந்து நீர்த்துளிகளை மண்ணில் சிதறின. அக்காட்சி ''மகேந்திர நகர மன்னன் சூரபன்மன் இன்று இறந்து படுவான்'' என்று அழுவதுபோல் விளங்கியது.

சூரன் நால்வகைச் சேனைகளுடன் போருக்கு வருவதை இந்திரன் முருகப் பெருமானிடம் அறிவித்தான். முருகப் பெருமான் தேவர்கள் போற்றத் தேரின் மீது ஏறினார். வீரவாகுத் தேவரும், இலக்க வீரர்களும் போர்க்கோலம் பூண்டு முருகப் பெருமானைப் பின் தொடர்ந்தனர்.

அசுரப் படைக்கும், பூதப் படைக்கும் போர் மூண்டது. அசுரர்கள் பலர் அழிந்தனர். பிணங்கள் மலை போல் குவிந்தன. இரத்தம் வெள்ளமாகப் பெருகி ஓடியது. அசுரப் படைகள் அழிவதைக் கண்ட சிங்கமுகன் மகன் அதிசூரன் கோபத்துடன் பாணங்களை மழைபோல் பொழிந்தான். உக்கிரர் என்னும் பூதப்படைத் தலைவன் தண்டாயுதத்தைச் சுழற்றி அதிசூரனின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மார்பில் அடித்தார். அது அதிசூரனின் மார்புக் கவசத்தை அழித்தது. ஆத்திமடைந்த அதிசூரன் உக்கிரர் உடல்மீது ஆயிரம் பாணங் களை விடுத்தான். உக்கிரர் உடலெல்லாம் புண்ணாகியது.

அதிசூரனும், உக்கிரரும் கடும் போர் புரிந்தனர். அதிசூரன் அக்கினிப் படை, வருணப்படை, யமப்படை, வாயுப்படை, நாராயணப்படை முதலியவற்றை உக்கிரர் மீது செலுத்தினான். அரிய தவம் செய்து சிவபெருமானிடம் வரங்கள் பல பெற்றிருந்த உக்கிரர்அவற்றையெல்லாம் விழுங்கி நின்றார். இறுதியில் அதிசூரன் சிவப்படையைச் செலுத்தினான். அதைக் கண்ட உக்கிரர் சிவநாமத்தைச் சொல்லித் தொழுதார். அப்படை வெறுங்கையுடன் நின்றவர் மீது செலுத்தப்பட்டால், மீண்டும் சிவபெருமானையே சென்றடையும் இயல்புடையது. அதன்படி உக்கிரர் வெறுங்கையுடன் நின்றதால் அவர் மீது செலுத்தப்பட்ட சிவப்படை சிவபெருமானிடமே திரும்பிச் சென்று விட்டது. அதிசூரன் திகைத்துப் பின் தேரை விரைந்து உக்கிரர் அருகில் செலுத்தித் தன் தண்டாயுதத்தைச் சுழற்றி உக்கிரர் அருகில் எறிந்தான். அந்தத் தண்டாயுதத்தைப் பிடுங்கிய உக்கிரர் அதனா லேயே அதுசூரன் மார்பில் ஓங்கி அடித்தார். அதிசூரன் இறந்தான்.

சிங்கமுகனின் மகன் அதிசூரன் இறந்ததும் தாரகனின் மகன் அசுரேந்திரன் சீற்றத்துடன் போர்புரியத் தொடங்கினான். பூதப்படைத் தலைவர்கள் கனகர், உன்மத்தர், மந்தர், சிங்கர், தண்டகர், கோமுகர், விசயர் முதலியோர் அசுரேந்திரனுடன் போர் புரிந்து தோற்றனர். இறுதியில் வீரவாகுத் தேவர் கோபத்துடன் அசுரேந்திரனுடன் போரிட்டார். தன் வாளால் அசுரேந்திரனின் தலையை அறுத்தார். விண்ணவர்கள் மலர் மழை பொழிந்து மகிழ்ந்தனர்.

அதிசூரனும் அசுரேந்திரனும் இறந்ததையும் அசுரப் படைகள் சிதறி ஓடுவதையும் சூரபன்மன் கண்டான். மிகுந்த கோபத்துடன் போருக்கு வந்தான். பூதப்படைகள் சூரன் மீது மலைகளையும் மரங்களையும் எறிந்தன. சூரன் அவற்றைத் துகளாக்கினான். பின் சூரன் வீரமார்த்தாண்டர், வீரராக்கதர், வீரமகேந்திரர், வீரதீரர், வீரமகேசுரர், வீரகேசரி, வீரமாபுரந்தரர், வீரராந்தகர் ஆகியோர் களுடன் போர் செய்து தோல்வியுறச் செய்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவற்றையெல்லாம் பார்த்த வீரவாகுத் தேவர் சூரனை எதிர்த்துப் போரிட்டார். வீரவாகு விடுத்த பலவித தெய்வப் படைக்கலங்கள் சூரனின் உடலில் பட்டு வலிமையிழந்து அழிந்தன. இறுதியாக வீரவாகுத் தேவர் சிவப் படைக்கலத்தை வழிபாடு செய்து சூரன் மீது ஏவினார். சூரனும் வழிபாடு செய்து தன்னுடைய சிவப்படைக்கலத்தை வீரவாகுத் தேவர் மீது ஏவினான். இரு சிவப்படைக்கலங்களும் பிரபஞ்சங்களெல்லாம் நடுங்கும்படிப் போரிட்டுத் தம்மை விடுத்தவர்களிடமே திரும்பிச் சென்று விட்டன.

பிறகு இருவரும் முத்தலைப் பாணம், வேல், தண்டாயுதம் முதலியவற்றால் போரிட்டனர். சூரனின் தண்டாயுதம் வீரவாகுத் தேவரின் மார்பைத் தாக்கியது. அவர் மயங்கி வீழ்ந்தார். முருகப் பெருமானின் கட்டளைப்படி அவரது சாரதி வாயுதேவன் முருகப் பெருமானின் தேரை விரைவில் செலுத்திச் சூரன்முன் வந்தார். சூரன் முருகப் பெருமானின் கருணை பொழியும் முகத்துடன் கூடிய தெய்வீகக் கோலத்தைக் கண்டான். ஆயினும் ஆணவத்துடன் ''சின்னஞ் சிறு குழந்தையான நீ என்னிடம் போர் புரிய வந்துள்ளாய். உன் வலிமையை அழிப்போம்'' என்றான்.

முருகப் பெருமான் புன்னகைத்து, ''வெற்றியையும் மிகுந்த ஆற்றலையும் மேன்மையையும் எண்ணில்லாத படைகளையும் அழியாத இயல்பையும் உடையோம் என்று ஆணவம் கொள்ளாதே. அறியாமையால் எம்மைச் சிறுவன் என்று எண்ணினாய். நூற்றெட்டு யுகம் எல்லாப் பேறுகளுடனும் இனிதே வாழ்ந்திருக்கின்ற உன் வலிமையை இப்பொழுதே அழிப்போம்'' என்று கூறியருளினார். சூரனுக்கும் முருகப் பெருமானுக்கு மிடையே போர் தொடங்கியது.

சூரன் அம்பு மழை பொழிந்தான். முருகப் பெருமான் அவற்றை ஆற்றலில்லாது செய்தார். முருகப் பெருமான் சூரனின் தேரின் குடையையும் மகுடத்தையும் வீழ்த்தினார். அவனது நெற்றியிலுள்ள வீரப்பட்டயத்தை அழித்தார். தன் திருக்கரத்தி லுள்ள சக்கராயுதத்தை ஏவி சூரனின் நூறாயிரம் வெள்ளம் அசுரப் படைகளையும் அழித்தார். இறந்த படைகளின் உடல்கள் மலை போல் குவிந்தன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெகுண்ட சூரபன்மன் பிரமன் படைக்கலத்தையும் திருமால் படைக்கலத்தையும் முருகன் மீது ஏவினான். முருகப் பெருமானது வேற்படை அவற்றை விழுங்கிற்று. பின் சிவப்படைக்கலத்தை வழிபட்டு விடுத்தான். முருகப்பெருமான் தமது திருக்கரத்தை நீட்டி, தந்தவன் வாங்கிய தன்மைபோல் அதைப் பற்றிக் கொண்டார்.

முருகப்பெருமான் சூரனை நோக்கி , ''தனித்து நிற்கும் உன்னை அழிப்பது யுத்த தருமம் ஆகாது. நீ தேவர்களை விடுவித்தால் நான் உன்னை விட்டு விடுவேன். இல்லாவிடில் உன்னை இப்பொழுதே கொள்வோம்'' என்றார். சூரன் இச்சிறுவன் தன் படைகளை அழிக்க முடியுமே தவிரத் தன்னை அழிக்க முடியாது என எண்ணினான். இப்பொழுது இவ்விடத்தை விட்டு நீங்கிப் பின் பெரும் படையுடன் வந்து முருகனை வெல்லலாம் என்று கருதி மறைந்து போனான்.

பூதப்படைகள் மகேந்திரபுரியை முற்றுகையிட்டன. மதில் சுவர்களைத் தகர்த்தனர். பூதப்படைத் தலைவர்களில் ஒருவனான மேகன், மகேந்திரன் காவலாளியான அசுரப் படைத் தளபதி அதிகோரனுடன் கடும்போர் புரிந்து அவனைக் கொன்றான். சூரபன்மன் போரில் தோற்று வந்த செய்தியைத் தூதர்கள் மூலம் கேட்ட பானுகோபன் தந்தையைக் காணப் பதைப்புடன் அரண்மனைக்குச் சென்றான். ''நீங்கள் ஏனப்பா யுத்தத்துக்குச் சென்றீர்கள்? அழியா வரம் பெற்ற தாங்கள் ஒரு பாலனுடன் போர் புரியச் செல்லலாமா? நாளை நானே சென்றுவென்று வருவேன்'' என்றான். சூரன், ''மகனே! நானும் முன்பு முருகனைச் சிறுவன் என்றே நினைத்தேன். மும்மூர்த்திகள் சேர்ந்தாலும் அவனை வெல்ல முடியாது என இப்போது நான் உணர்கின்றேன். அவனை வெல்ல என் ஒருவனால்தான் முடியும். நான் முருகனை அழிப்பேன். நீ வீரவாகுவை வெற்றி கொள்'' என்று விடை கொடுத்தான்.

வெளியே வந்த பானுகோபனிடம் வீரமகேந்திரபுரி வீரர்கள் ஓடி வந்து அதிகோரன் இறந்ததையும், மதில்கள் இடிந்ததையும் கடல் நீர் நகருக்குள் புகுந்து வருவதையும் அறிவித்தனர். பானுகோபனின் ஆணைப்படி அசுரத் தச்சர்கள் மதில்களை முன்னைக் காட்டிலும் வலிமையுடன் புதுப்பித்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. மூன்றாம் நாள் பானுகோபன் யுத்தம்

மறுநாள் பானுகோபன் போருக்குப் புறப்பட்டான். தன் பாட்டியாகிய மாயாதேவியை நினைத்தான். அவளும் தோன்றினாள். அவளை வேண்டி ஒரு மாயப் படைக் கலத்தை அவளிடமிருந்து பெற்றான். தூதுவனை அனுப்பி வீரவாகுவைப் போருக்கு அழைத்தான். அசுரப் படைகளும் பூதப் படைகளும் மோதின. வீரவாகுத் தேவருக்கும் பானுகோபனுக்குமிடையே போர் நடந்தது.

பானுகோபன் விடுத்த வருணப் படையை, வீரவாகுத் தேவர் விடுத்த அக்கினிப் படை விழுங்கியது. பானுகோபன் வாயுப் படையை விடுத்தான். அது அக்கினிப் படையை அணைத்துப் பூதப் படைகளைக் கொல்ல வந்தது. வீரவாகுத் தேவர் நாகப்படையை விடுத்தார். அஃது அளவற்ற பாம்புக் கூட்டமாய்ச் சென்று வாயுப்படையை உண்டது. பானுகோபன் கருடப் படையை விடுத்தான். அது நாகப்படையை அழித்தது. கோபம் கொண்ட வீரவாகுத் தேவர் நந்திப்படையை விடுத்தார். அது கருடப் படையை அழித்தது. பானுகோபன் யமப்படையை ஏவ, நந்திப்படை அதனையும் அழித்தது. பின் பானுகோபன் பிரமன் படையை ஏவ, அது நந்திப் படையை வணங்கிச் சென்றது. பானுகோபன் விஷ்ணுப் படையை ஏவ, அது நந்திப் படையுடன் போர் புரிந்து கொண்டிருந்த போது வீரவாகுத் தேவர் வீரபத்திரப் படையைச் செலுத்தினார். அது விஷ்ணுப் படையை அழித்தது. இறுதியாகப்பானுகோபன் சிவப்படையை வழிபட்டு விடுத்தான். உடனே வீரவாகுத் தேவரும் சிவப்படையைப் பூசித்து ஏவினார். அவ்விரு படைக்கலங்களும் ஒன்றோடொன்று மோதி, மீண்டும் தம்மை விட்டவர்களிடமே சென்றன. பானுகோபன் தான் தனியொருவனாக வீரவாகுத் தேவரிடம் போரிட்டால் இறப்பது உறுதி என்றஞ்சி வானில் மறைந்தான்.

மறைந்து நின்ற பானுகோபன் இன்றும் நாம் வெற்றி பெறாவிடில் அவமானம் என்று கருதி மாயப்படையை ஏவினான். மாயப்படை பூதப் படைகளையும் வீரவாகுத் தேவரையும் மயக்கியது. அனைவரையும் எடுத்துச் சென்று நன்னீர்க் கடலில் போட்டது. நிகழ்ந்தவைகளை பானுகோபன் சொல்ல சூரன் மகிழ்ந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவர்கள் வருந்தி அழுதனர். நாரதர் முருகப் பெருமானிடம் விபரம் தெரிவித்தார். அவர் தன் வேற்படையைச் செலுத்தினார். அது நன்னீர்க் கடலில் மாயப் படையால் கட்டுண்டு மயங்கிக் கிடந்தவர்களை உணர்வு பெறச் செய்தது. அனைவரும் வேலை வணங்கினர். அதுமீண்டும் சென்று முருகப் பெருமான் திருக்கரத்தில் வீற்றிருந்தது.

6. நகர் புகுதல்

வீரவாகுத் தேவர், "பானுகோபனைக் கொல்லாமல் முருகப் பெருமானைத் தரிசிக்க மாட்டேன். அவனைக் கொல்ல இயலாவிடின் நெருப்பில் புகுந்து இறப்பேன்" என சபதம் செய்தார். மகேந்திரபுரியின் மேற்குவாயிலை அடைந்தார். பூதப் படைகளும் அவருடன் வந்தன. மேற்கு வாயிலைக் காக்கும் புலிமுகன் பூதப் படைகளை எதிர்த்தான். சிங்கர் என்னும் பூதப்படைத் தலைவர் புலிமுகனைக் கொன்றார். பின்னர்ப் பூதப்படைகள் நகரத்திற்குள் புகுந்து மதில்களையும் மாளிகை களையும் அழித்தனர். வீரவாகுத் தேவர் அக்கினிப் படையையும் வாயுப் படையையும் ஏவி நகரத்தை எரிக்கப் பயணித்தார். இரு படைகளும் நகரை எரிக்கத் தொடங்கின.

தூதர்கள் சிலர் சூரபன்மனிடம் சென்று நகரம் எரிந்து கொண்டிருப்பதைத் தெரிவித்தனர். சூரபன்மன் மிக்க சினம் கொண்டான், ஊழிக் காலத்தில் உலகனைத்தையும் அழிக்கும் ஏழு மேகங்களை அழைத்து வரக் கட்டளையிட்டான். அவை வந்ததும் நகரத்திலுள்ள தீயை அணைக்க ஆணையிட்டான். மேகங்கள் மழை பொழியத் தீ தணிந்தது. நாரத முனிவர் வீரவாகுத் தேவர் முன் தோன்றி, "இதற்கு மாறாக வடவாமுகாக்கினிப் படையைச் செலுத்துங்கள்" என்று கூறி மறைந்தார். அப்படை விரைந்து சென்று மேகக் கூட்டங்களிலுள்ள நீரை உண்டு வீரவாகுத் தேவரிடம் திரும்பி வந்தது. முருகப் பெருமான் மேகங்கட்கு அருள் பாலித்தார். வலிமையற்ற மேகங்கள் நகரினின்றும் வெளியேறி கடலை நோக்கி ஓடின. நடந்தவற்றை அறிந்த சூரன் ஆறாச் சினம் கொண்டான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7. இரணியன் யுத்தம்

சூரபன்மன் போர்க்களம் புறப்பட ஆயத்தம் ஆனான். சூரனின் மகன் இரணியன் எழுந்தான். ''அண்ணலே! நீர் எல்லோரையும் வெல்லும் ஆற்றல் பெற்றது சிவபெருமான் அருளிய வரத்தின் வலிமையினாலல்லவா? இப்பொழுது தேவர்களைச் சிறையிலிட்ட தீமை காரணமாக வரங்களை மாற்ற அவர் திருவுளங் கொண்டால் அவரை வணங்கித் துதிப்பதே முறை. போர் செய்வது தகுமா? நன்றி கொன்றோர்க்கு உய்வு கிடையாது'' என்று கூறி, சிவபெருமானின் வீரச் செயல்களை எல்லாம் விரிவாக எடுத்துக் கூறி ''ஆதலால் ஈசனை அடைந்தவர் உய்வர். அல்லாப் பேதையர் அழிவர்'' என அறிவுரை கூறினான்.

மேலும், ''அரசே! சிவகுமாரனைப் பாலன் என்று இகழாதீர். அவர் தன்னந் தனியனாக எதையும் செய்வார். எனவே அசகாயசூரர் என்ற பெயர் அவருக்கு வந்தது'' என்று கூறி, பிள்ளைப் பருவத்தில் குமரக் கடவுள் செய்த அற்புதங்கள் பலவற்றை எடுத்துரைத்தான். ''அவர் நம்மீது கொண்ட கருணையால் இன்னும் நம்மை அழிக்காமல் உள்ளார். தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்து முருகப் பெருமானின் திருவடிகளைச் சரணடைந்தால் அவர் நம் பிழைகளைப் பொறுத்தருள்வார். மேலும் வரங்கள் பல தந்தருள்வார்'' என்றான்.

சூரபன்மன் கோபம் கொண்டு இரணியனைக் கொன்று விடுவதாகக் கூறினான். இரணியன் தந்தை அழிவது உறுதி என்றும், அவருக்கு முன் தான் இறப்பதே நலம் என்றும் எண்ணினான். தன்னை மன்னிக்குமாறு வேண்டினான். தான் போருக்குப் புறப்பட விடைதரும்படி வேண்டினான். சூரன் சினம் தணிந்து இரணியன் போருக்குச் செல்ல விடை கொடுத்தான். இரணியன் படைகள் சூழப் போர்க்களம் சென்றான்.

நாரதர் வீரவாகுத் தேவரிடம் இரணியனின் வருகையைக் கூறினார். முதலில் இரணியனுக்கும், நீலன் என்ற பூதப்படைத் தலைவனுக்குமிடையே போர் நடந்தது. நீலன் இரணியனை உதைத்து உருட்டி மிதித்தான். அதனால் இரணியனின் தலையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மார்பும் பிளந்தன. இரணியன் மாயப் போர் புரியத் தொடங்கினான். நீலனால் இரணியனின் மாயப்போரை எதிர்க்க இயலவில்லை.

அதுகண்ட வீரவாகுத் தேவர் முருகப் பெருமானைத் தியானித்து இரணியன் மேல் ஞானப் படையை விடுத்தார். அதனால் இரணியனின் மாயை அழிந்தது. இருவருக்கும் கடும்போர் நிகழ்ந்தது. தான் போரில் இறந்தால் தனக்குப் புகழ்உண்டாகும் என்று எண்ணினான். இருந்தாலும் தந்தை இறக்கும் பொழுது ஈமச் சடங்கு செய்ய ஆள் வேண்டுமே என நினைத்துத் தப்பித்து ஓடினான். மீன் வடிவம் எடுத்துக் கடலுக்குள் மறைந்தான். வீரவாகுத் தேவர் வெற்றிச் சங்கை ஊதினார். செய்தியறிந்த சூரன் வெட்கப்பட்டான். அப்போது சூரனின் மற்றொரு புதல்வனான அக்கினிமுகாசுரன் அங்கு வந்தான்.

8. அக்கினிமுகாசுரன் வதை

அக்கினிமுகன் தாய் வயிற்றில் இருக்கும்போதே நெருப்பைக் கக்கியவன். சந்திரனைச் சிறை செய்தவன். திருமால், பிரமன் இவர்களின் ஊர்திகளான கருடனையும், அன்னத்தையும் பிடித்து விளையாடியவன். அவன் பாட்டியாகிய மாயை கொடுத்த வில்லையும் தெய்வப் படைக் கலங்களையும் எடுத்துக் கொண்டு தந்தையின் அனுமதி பெற்றுப் போர்க்களம் சென்றான்.

வீரபுரந்தரர் போருக்கு வந்தார். அசுர சேனாதிபதியான சோம கண்டனையும், அக்கினிமுகனின் உயிர்த் துணைவனான மேகனையும் கொன்றார். அக்கினிமுகன் தானே நேரில் வந்து வீரபுரந்தாருடைய வில்லையும் உடைத்து பாணங்களால் அவர் மார்பைத் துளைத்தான். வீர புரந்தரரின் வலிமை இழந்ததும், வீரவாகு தவிர நவ வீரர்களுள் ஏனை எழுவரும் அக்கினிமுகனை வளைத்துப் பாணமழை பொழிந்தனர். அக்கினிமுகன் சிவப்படைக் கலத்தால் அவ்வெழுவரையும் கொன்றான்.

வீரவாகுத் தேவர் அக்கனிமுகனுடன் போர் புரிய வந்தார். வீரபாகுத் தேவர் நஞ்சு தோய்ந்த நூறு பாணங்களை அக்கினிமுகன் மார்பில் விடுத்தார். அக்கினிமுகன் இரத்தம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெருகத் தேரில் சாய்ந்தான். தன்னை ஆபத்தில் காக்கும் காளியை வழிபட்டான்.

காளி சூலமும், வாளும் ஏந்திச் சிம்ம வாகனத்தில் போருக்கு வந்தாள். முத்தலைச் சூலத்தை எய்தாள். வீரவாகுத் தேவர் அதைத் தூளாக்கினார். காளி வீரவாகுத் தேவரை வாளால் வெட்ட வந்தாள். வீரவாகுத் தேவர் தன் இடக்கரத்தால் அவளுடைய எட்டுக் கைகளையும் பிடித்துக் கொண்டு, வலக்கரத்தால் மார்பில் ஓங்கி அறைந்தார். காளியின் மார்பு கிழிந்தது. அவள் நாணத்துடன் வீரவாகுவை 'வெற்றி உமக்கே' என வாழ்த்தித் தன் இருப்பிடம் சென்றாள்.

அக்கினிமுகனும் வீரவாகுவும் தனித்துப் போரிட்டனர். வீரவாகு விடுத்த வீரபத்திரப் படைக்கலம் அக்கினிமுகன் விடுத்த பிரமப்படைக்கலத்தை விழுங்கி அவனைக் கொன்றது. வென்ற வீரவாகுவைப் பூதப்படைகளும், இலக்கம் வீரர்களும் மூர்ச்சித்து எழுந்த வீரபுரந்தரரும் சூழ்ந்தனர். வீரவாகுத் தேவர் தம்பியர் எழுவரையும் காணாது வருந்தினார். அப்போது உக்கிரர் என்ற படைத் தலைவர் வீரவாகுத் தேவரின் தம்பியர் ஏழுபேரும் ஆலமர நிழலில் மாண்டு கிடப்பதைக் கூறினார். உடனே வீரவாகுத் தேவர் அங்குச் சென்றார். தம்பியர் எழுவர் உயிர்களையும் தருமாறு யமனுக்கு யமபுரத்திற்கு ஓலை விடுத்தார்.

யமன் ஓலையைக் கண்டான். கயிலையில் சூக்கும சரீரத்துடன் விளையாடிக் கொண்டிருந்த எழுவர் உயிர்களையும் போர்க்களத்திற்குக் கொண்டு வந்து உடலில் சேர்ப்பித்தான். தூங்கி எழுந்தாற்போல் எழுவரும் உயிர்த்தெழுந்தனர். வீரவாகுத் தேவர், வீரபுரந்தரர், பூதப் படைகள் மகிழ்ந்தனர்.

அக்கினிமுகன் இறந்தது கேட்ட சூரபன்மன் அழுது புலம்பினான். பதுமகோமளை ஆற்றொணாத் துயருற்றாள்.

9. மூவாயிரவர் இறத்தல்

அக்கினிமுகன் இறந்ததும் சூரனின் மைந்தர்கள் மூவாயிரவர் அவனுடைய அனுமதி பெற்றுப் போருக்குப் புறப்பட்டனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆயிரம் பூதப்படையினர் வீரவாகுத் தேவரிடம் விடைபெற்று மூவாயிரவரை எதிர்த்துப் போருக்குச் சென்றனர். ஆயிரம் பூதப் படையினர்களில் விசயன் தவிர ஏனையோர் தோற்றனர். விசயன் மூவாயிரவர் மீதும் பாணங்களைப் பொழிந்தார். அப்பாணங் களால் தாக்குண்டவர்களின் அங்கங்கள் வெட்டுப்பட்ட போதிலும், பிரமனிடம் பெற்றிருந்த வரத்தின் பலத்தால் அங்கங்கள் மீண்டும் வந்து கூடின.

அதுகண்ட விசயன் திகைத்தான். முருகப் பெருமானைக் கண்களில் நீர் பெருக உள்ளம் உருக உன்னையன்றி வேறு துணையில்லை எனப் பிரார்த்தித்தான். முருகப் பெருமான் விண்ணில் தோன்றி கால வயிரவப் படையைக் கொடுத்து மறைந்தார். விசயன் அப்படைக் கலத்தைப் பூசித்து விடுத்தான். அது கண்ட மூவாயிரவருள் ஒருவரான உன்மத்தன் மாயப் படையை விடுத்தான். வைரவப் படை, மாயப்படையை அழித்து மூவாயிரவரையும் கொன்றது. மூவாயிரம் புதல்வர்களும் ஒருசேர மாண்ட செய்தியைக் கேட்ட சூரபன்மன் அழுது புலம்பினான்.

10. தருமகோபன் வதை

தலைமை அமைச்சர் தருமகோபன் சூரபன்மன் முன்வந்து வணங்கி, ''அரசே! போர் முனையில் இறந்தவர்கள் தந்தை யானாலும் உறவினர்களானாலும் புதல்வர்களே யானாலும் அதற்காக வருந்தித் தளர்ந்துவிடுதல் ஆற்றல் மிக்க வீரர்கட்கு அழகல்ல. கவர்ந்து சென்ற உயிர்களைத் தர யமன் இருக்கின்றான். முன்பு போல் படைத்துக் கூட்ட பிரமன் இருக்கின்றான். ஏன் நாம் தளர்ச்சி கொள்ள வேண்டும். வருந்துவது ஏன்?'' என்று ஆறுதல் கூறினான். மனம் தெளிந்தான் சூரன். போருக்கு எழுந்தான். தருமகோபன் தடுத்துத் தானே போர்க்கோலம் பூண்டு, புண்டரீகம் என்னும் திக்கு யானையில் அமர்ந்து போர்க்களம் வந்தான்.

பூதப்படையினர் எழு என்ற ஆயுதம், தண்டு, வில், அம்பு, சூலம், எறியீட்டி, கதை போன்ற பலஆயுதங்களை ஏந்தி அவுணர் படைகளைத் தாக்கினர். வீரமார்த்தாண்டரும் வீரபுரந்தரரும் தருமகோபனுடன் போரிட்டுத் தளர்ச்சி அடைந்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வீரவாகுத் தேவர் தருமகோபன் முன் வந்து வேல் படையை அவன் மார்பில் வீசினார். அவன் இரத்தம் வடிய நின்றான். அவனுடைய யானை வீரவாகுவைத் தாக்கியது. அவர் அதனை விண்ணுலகு வரை செல்லும்படி தூக்கி எறிந்தார். தருமகோபன் தெளிந்து எழுந்து வீரவாகுத்தேவர் மீது தடியையும் குலிசத்தையும் எறிந்தான். அவை வலி இழந்தன. வீரவாகுத் தேவர் தருமகோபனைக் காலால் உதைத்துக் கொன்றார். மேலே எறியப்பட்ட திக்கு யானை கீழே வந்து தலைவன் இறந்ததால் வீரவாகுத் தேவரிடம் விடை பெற்றுத் தன் இருப்பிடம் சென்றது. ஒற்றர்கள் மூலம் செய்தி அறிந்த சூரன் உணர்விழந்தான்.

11. மானுகோபன் வதை

தூதர்கள் வந்து பானுகோபனிடம் விவரம் கூறினர். அவன் சூரனை நோக்கி, ''அப்பா! நாம் முருகப்பெருமானையோ அவருடைய தூதரான வீரவாகுவையோ வெல்ல முடியாது. நான் போருக்கு அஞ்சிக் கூறுவதாக எண்ணி விடாதீர்கள். நீங்கள் பல்லாண்டுகள் வாழ வேண்டும் என்ற ஆசையால் கூறுகிறேன். தேவர்களைச் சிறை விடுத்து உய்வு பெறுவோம்'' என்றான். அது கேட்ட சூரன் சினம் கொண்டு ''இந்த உலகில் நிலைத்து நிற்கக் கூடியது புகழ் ஒன்றுதான். தேவர்களை விடுவித்தால் என்னை யார் மதிப்பர்? நான் பகைவர்களின் போரில் உயிரை விட்டாலும் தேவர்களைச் சிறையிலிருந்து விடுவேனோ? நீ போய் உன் அரண்மனையில் தூங்கு. நானே போருக்குச் செல்வேன்'' என்றான்.

தந்தையைத் தடுக்க இயலாது என்று அறிந்த பானுகோபன் தன் புன்மொழிகளைப் பொறுக்க வேண்டித் தானே போருக்குச் சென்றான். போர் கடுமையாகத் தொடங்கியது. அசுரப் படைகள் அழிவதைக் கண்ட பானுகோபன் சினமுற்றுத் தீக்கணைகள் பலவற்றைச் செலுத்திப் பூதப் படைகளைச் சிதறி ஓடச்செய்தான்.

வீரவாகுத் தேவர் முருகப் பெருமானைத் தியானித்து முன்னணிக்கு வந்தார். வீரவாகுத் தேவரும் பானுகோபனும் பல்வேறு படைக்கலங்களை ஒருவர் மீது ஒருவர் வீசிக் கடும்போர் புரிந்தனர். பானுகோபன் மாயப்போர் புரியத் தொடங்கினான். வீரபாகுத் தேவர் ஞானப்படையை விடுத்து மாயையை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அழித்தார். மாயை ஒழிந்து வெளிப்பட்ட பானுகோபன், பிரமன் தந்த வேற்படையை வீரவாகுத்தேவர்மீது விடுத்தான். வீரவாகுத் தேவர் தன் வாட்படையை வீசி அதை வீழ்த்தினார். இருவரும் வாட் போர் செய்தனர். வீரவாகுத் தேவர் பானுகோபனின் தலையை அறுத்து வீழ்த்தினார். வானவர்கள் மகிழ்ந்து பூமழை பொழிந்தனர்.

வீரவாகுத் தேவர் தன் வஞ்சினம் முடிந்ததால் முருகப் பெருமான் முன்சென்று வணங்கி நின்றார். அவர் தம்பியைத் தழுவி, வேண்டும் வரம் யாது?'' என வினவினார். வீரவாகுத் தேவர் முருகப்பெருமானின் திருவடிகளில் என்றும் மாறாத அன்பையே வேண்டினார். முருகப்பெருமானும் ''உனக்கது தந்தனம்'' என்றருளினார்.

பானுகோபன் இறந்த செய்தியை அறிந்த சூரபன்மனும் பதும கோமனையும் அழுது புலம்பினர். தம்பியை அழைத்து வரத் தூதர்களை அனுப்பினான்.

12. சிங்கமுகன் வதை

அசுரபுரியில் அரசு வீற்றிருந்த சிங்கமுகனிடம் போய்த் தூதர்கள் செய்தி சொன்னதும் அவன் வீரமகேந்திரபுரம் வந்தான். ''அண்ணா! தானாகவும் தெரியாமல் நான் அறிவுரை கூறியும் கேட்காமல் போனீர்களே! வெள்ளம் வந்தபின் அணை போடுவதில் பயனில்லை. விதியை யாரால் வெல்ல முடியும்'' என்று கூறித் தன் மாளிகைக்குச் சென்று, படைகளுடன் போர்க்களம் சென்றான்.

தேவர்கள் அஞ்சி முருகப் பெருமானிடம் ஓடி சிங்கமுகனின் வலிமையையும் ஆற்றலையும் எடுத்துக் கூறினர். அவனைக் கொன்றருள வேண்டினர். வீரவாகுத் தேவர் சிங்கமுகனை எதிர்த்துப் போரிடப் புறப்பட்டார். அசுரப் படைகளின் ஆவேசத் தாக்குதலால் பூதப் படையினர் நிலை குலைந்தனர். சிங்கர் என்னும் பூதப் படைத் தலைவர் தசமுகன் என்றஅசுரனுடன் கடும்போர் செய்து அவனைக் கொன்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூதப்படையைச் சேர்ந்த அநகர் அற்புதமாகப் போர் செய்து அசுரப் படைகளை ஓடச் செய்தார். அவர்களைத் தடுத்து நிறுத்தி, துன்முகன் என்னும் அசுரன் அநகருடன் போர் செய்தான். வெல்ல முடியாமையால் நூறு நூறு மாய வடிவங்கள் கொண்டு பூதப் படைகளைத் தாக்கினான். வீரவாகுத் தேவர் ஞானப்படையால் அவனுடைய மாய வடிவங்களை அழித்தார். துன்முகன் ஓடி ஒளிந்தான்.

சிங்கமுகன் முன்னணிக்கு வந்தான். பூதப்படைகளை வெவ்வேறு இடங்களில் வீசியெறிந்து கலங்கச் செய்தான். பூதப் படைத் தலைவர்களுள் ஒருவரான அழல்கண்ணர் சிங்கமுகன் மீது சூலப்படையை வீசினார். அது மலையில் பட்ட முள்ளைப் போல ஒடிந்து விழுந்தது. அழற்கண்ணர் ஒரு தண்டத்தை எடுத்து வீசினார். அது தேர்ப்பாகனின் தலையைத் துண்டித்தது. சிங்கமுகன் தண்டாயுதத்தை அழற்கண்ணர் மார்பில்எறிந்தான். அவர் மூர்ச்சித்தார். பின் சுமாலி, தண்டி என்ற பூத வீரர்களுடன் போர் புரிந்து அவர்களைச் சிங்கமுகன் வலியிழக்கச் செய்தான். வீரவாகுத் தேவர் சிங்கமுகனின் புதல்வர்கள் நூறுபேருடன் போரிட்டு அவர்களைக் கொன்றார்.

வீரவாகுத் தேவரும் சிங்கமுகனும் பல படைக்கலங்களை வீசி உக்கிரமாகப் போரிட்டனர். சிவப்படைக் கலத்தை ஒருவர் மீது ஒருவன் செலுத்தினர். அவை செலுத்தியவர்களிடமே மீண்டும் சென்று விட்டன. சிங்கமுகன் தன் தாயிடம் பெற்ற மாயா பாசத்தைச் செலுத்தினான். அது வீரவாகுத் தேவரையும் பூதப் படைகளையும் மயக்கிக் கட்டி உதயகிரியில் வைத்தது. சிங்கமுகன் முருகப் பெருமானைத் தேடி ஓடினான்.

முருகப் பெருமான் திருச்சின்னங்கள் ஒலிக்கப் போர்க்களம் வந்தார். சிங்கமுகன் மிகப் பெரிய மாய உருவம் எடுத்தான். இரண்டாயிரம் கைகளை நீட்டி ஆயிரம் வெள்ளம் பூத வீரர்கள் விழுங்கினான்.

முருகவேள் முன்னணிக்கு வந்தார். சிங்கமுகன் அவரை நோக்கி, "சிவகுமாரா! பகைவர்களை அடக்கி ஒடுக்குவது அரச தருமம். அதன்படி பகைவர்களை அடக்கத் தேவர்களைச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிறையில் வைத்தோம். உமக்கும் எமக்கும் பகை இல்லை. நீ எம்மோடு போருக்கு வந்த காரணம் யாது?'' என்று கேட்டான். முருகப் பெருமான், 'எளியவரை வலியர் ஒறுத்ததால், வலியவரைநீதிமுறைப்படித் தண்டித்து அறத்தை நிலைநிறுத்த வந்துள்ளோம்' என்றார்.

சிங்கமுகன், ''தேவர்களைச் சிறை நீக்கச் சிவபெருமானாலும் முடியாது. அவனுடைய மகனும், சிறுவனுமான நீயா இச்செயலைச் செய்ய வல்லாய். ஓடி உயிர் பிழைப்பாய்'' என்றான். முருகப் பெருமான் ஒரு வயிர அம்பினை விடுத்தார். அது சிங்கமுகனின் மார்பில் புகுந்து முதுகில் வெளிப்பட்டது. மார்பும் முதுகும் வாயில்களைப்போல் பிளக்க, வயிற்றிலுள்ள பூத வீரர்கள் வெளிவர முயன்றனர். சிங்கமுகன் அவ்வாயில்களை கைகளால் மூடிக் கொண்டுக் கந்தவேள் மீது ஒரு தண்டினை வீசினான். முருகப் பெருமான் இமைப் பொழுதில் நான்கு அம்புகளை எய்தார். அவை சிங்கமுகனின் தண்டினை அழித்து அவன் நெற்றியில் புகுந்தன. சிங்கமுகன் மூர்ச்சிதான். வாயில்களை அடைத்துக் கொண்டிருந்த அவனது கைகள் நழுவின. பூதர்கள் வெளி வந்தனர்.

பின் முருகப் பெருமான் ஒரு அம்பை விட அஃது உதயகிரிக்குச்சென்று, மாயா பாசத்தை அறுத்து, வீரவாகு முதலியோர்க்கு உணர்வைத் தந்து, புட்பக விமானம் போலாகி, அவர்களை ஏற்றிக் கொண்டு முன் விடுத்தது.

மறைந்தவர்கள் திரும்ப வந்தது கண்டு சிங்கமுகன் ஆத்திரம் கொண்டான். போருக்கு வந்தான். முருகப் பெருமான் அம்புகளை எய்து அசுரப் படைகளை அழித்தார். சிங்கமுகன் தனியனானான். முருகப் பெருமான் சிங்க முகனின் தலைகளையும் கைகளையும் ஆயிரத்தெட்டு முறை அறுத்தார். ஆனால் அவை மீண்டும் மீண்டும் முளைத்தன. இறுதியாக ஒரு குலிசப் படையை ஏவினார். அது சிங்கமுகனின் உயிரை உண்டு கங்கையில் மூழ்கி மீண்டும் திருமுருகன் திருக்கரங்களை வந்தடைந்தது. தேவர்கள் பூமழை பொழிந்தனர். சூரபன்மன் அழுது ஓலமிட்டான். முருகப் பெருமான் சிங்கமுகனைச் சிம்ம வாகனமாகப் பராசக்திக்குத் தொண்டு செய்ய அனுப்பி வைத்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

13. சூரபன்மன் வதை

சூரபன்மன் படைக்கலங்கள் பல தாங்கிப் போர்க்களம் வந்தான். முருகப் பெருமானும் படைக்கலங்கள் தாங்கி வாயு தேரோட்ட மனோ வேகத் தேரில் வந்தார். முருகப் பெருமான் ஆணைப்படி வாயு நாலா பக்கமும் தேரை விரைந்து செலுத்த முருகப்பெருமான் அசுரர்களைக் கொன்று குவித்தார். இவ்வண்டத்தில் உள்ள அசுரப் படைகள் மட்டுமன்றி மற்றைய அண்டங்களிலுள்ள அசுரப் படைகளும் வருவது கண்டு குமாரக் கடவுள் அண்ட கோளகையின் வாயிலை அடைத்தார். மலை போல் குவிந்துள்ள பிணக் குவியல்களைப் பன்னிரு கண்களால் உற்று நோக்கினார். அவை வெந்து நீறாயின.

சூரனின் ஆயுதங்கள் பூதப் படைகளை அழித்தன. வீரவாகுத் தேவர் செலுத்திய அம்புகள் சூரன் மீது பட்டு அழிந்தன. அவர் தன் வாளால் சூரனின் வில்லைஅறுத்தார். சூரன் வேறொரு பெரு வில்லை எடுத்து நாணொலி செய்தான். முருகப் பெருமான் எய்த அம்புகளை எல்லாம் சூரபன்மன் அறுத்தெறிந்தான். முருகப் பெருமானின் தேரில் கட்டிய கொடியை அறுத்து வீழ்த்தினான். வெற்றிச் சங்கை ஊதினான். முருகப் பெருமான் சூரனின் தேர்க் கொடியை அறுத்தார். பானுகம்பன் என்ற பூதப்படைத்தலைவன் வெற்றிச் சங்கு ஊதினான். தேவர்கள் வேண்டுகோளின்படி தீக்கடவுள் முருகப்பெருமானின் தேர் மீது கோழிக் கொடியா னான்.

இருவருடைய தேர்களும் விண்ணுலகம் சென்றன. காற்றாடி போலவும் குயவனின் கைத்திகிரி போலவும் சுழல, வெற்றி தோல்வி இல்லாமல் போர் நீடித்தது. சூரபன்மன் மண்ணிலும் விண்ணிலும் நன்னீர்க் கடலிலும் மேரு மலையிலும் எங்கும் நின்று மாயப்போர் புரிந்தான். முருகப்பெருமானும் ஆங்காங்கு தொடர்ந்து சென்று போர் புரிந்தார். சூரன் பலகோடி அம்புகளைச் செலுத்தி அண்ட கடாகத்தின் வாயிலை மூடியிருந்த தடைகளைத் துணித்தான். அசுரப் படைகள் ஆர்ப்பரித்து வந்தன. முருகப் பெருமான் தம் கண்களால் அவர்களை எரித்தார். சூரபன்மன் சிவபெருமான் தந்த சக்கரப் படையை ஏவினான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முருகப்பெருமான் தன் திருக்கரத்தைநீட்டி அதைப் பற்றிக் கொண்டார்.

சூரபன்மன் மகேந்திரபுரியை அடைந்து தாய் மாயையை நினைத்தான். அவள் தோன்ற இறந்து போன அசுரப் படைகளை உயிர்ப்பித்துத் தர வேண்டினான். மாயை தேவர்களைச் சிறைவிடுவிக்க அறிவுரை கூறினாள். சூரன் கேட்கவில்லை. மாயை, அமுத சீத மந்திர கூடம் என்ற மலையைக் கொண்டு வந்தால் இறந்தவர் உயிர் பெறுவர் என்றாள். சூரன் இந்திரஞாலத் தேருக்குக் கட்டளையிட அது அமுதசீத மந்திர கூட மலையைப் பெயர்த்து எடுத்து வந்தது. இறந்தவர்கள் அனைவரும் உயிர் பெற்றெழுந்தனர். முருகப் பெருமான் சருவ சங்காரப் படைக்கலத்தை ஏவினார். அது விரிசடைக் கடவுள் திரிபுரம் எரித்தது போல யாவரையும் ஒருங்கே அழித்தது. மந்திரகூட மலையையும் பொடிப் பொடி ஆக்கியது.

சூரபன்மன் பூதப்படைகளைக் கவர்ந்து சென்று அண்ட கோளகையின் உச்சியில் அடைத்து வைத்துக் கொண்டிருக்க ஆணையிட்டான். அதுவும் அவ்வாறே செய்தது. ஆனால் முருகப் பெருமான் ஒரு அம்பை ஏவி படைகளோடு இந்திர ஞாலத் தேரையும் தம்மிடம் கொண்டு வரும்படி செய்தார். இனி இந்திர ஞாலத்தேர் சூரனிடம் செல்லக் கூடாது என்று ஆணையிட்டார். சூரபன்மன் சிவபெருமான் அளித்திருந்த சூலப்படையை முருகப் பெருமான் மீது விடுத்தான். முருகப்பெருமான் ஏவிய குலிசப் படை, சூலத்தைக் கைதியாக்கி இழுத்து வந்தது. முருகப் பெருமான் சூரனின் வாகனமாகிய சிங்கத்தைச் சம்காரம் செய்தார்.

சூரபன்மன் மாயத்தால் சக்கரவாளப் பறவையாகிப் பறந்தான். இந்திரன் மயிலாக வந்து முருகப் பெருமானைத் தாங்கினான். அதன் மீது ஏறிய முருகப் பெருமான் வாட் படையால் சக்கரவாளப் பறவையை வெட்டினார். சூரபன்மன் பல்வேறு மாய உருவங்களை எடுத்து முருகப் பெருமானுடன் போரிட்டான். முருகப் பெருமான் அத்தனை மாய உருவங் களையும் அழித்தார். பேருருவம் எடுத்தார். அதனைப் பார்ப்பதற்குரிய ஞானக் கண்ணையும் சூரனுக்குத் தந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''முருகனைப் பாலன் என்று இகழ்ந்தேனே'' என்று சூரன் தன்னை நொந்து கொண்டான். முருகப் பெருமான் தேவர்க்கும், மூவர்க்கும் முதலாய் நின்ற முழுமுதற் பொருள் என உணர்ந்தான். ''இப்பெருமானை வலமாக என் கால்கள் சுற்றிவர வேண்டும். கைகள் தொழவேண்டும். தலை வணங்க வேண்டும். நாக்குத் துதிக்க வேண்டும். தீமையினின்று அகன்று வாழ வேண்டும். இவர்க்கு அடிமையாக வேண்டும் என்று என் உள்ளம் விரும்புகின்றது. ஆனால் மானம் தடுக்கின்றது'' எனச் சூரன் எண்ணினான். முருகப் பெருமான் பேருருவம் நீங்கி மயில் வாகனத்திலிருந்த பழைய திருவுருவம் கொண்டார். சூரபன்மனுக்குக் கொடுத்திருந்த ஞானக் கண்ணையும் நீக்கினார். சூரன் பழையபடி ஆணவமும் பகையும் சினமும் கொண்டான்.

சூரபன்மன் ஒரு மாய மந்திரம் ஜபித்து விண்ணும் மண்ணுமாகப் பெரியதோர் இருள் வடிவம் எடுத்தான். மாய வடிவில் மறைந்து பல தலைகளும் அளவற்ற கரங்களும் கூடிய உருவத்துடன் தேவர்களைக் கொல்லப் பாய்ந்தான். தேவர்கள் அலறினார்கள். முருகப் பெருமான் தன் வேற்படையைச் சூரன் மீது விடுத்தார். அது இருள் வடிவத்தை அழித்தது.

சூரன் கடலின் நடுவில் தீயைப் போன்ற தளிர்களை ஈன்று, பொன்னைப் போன்ற பூங்கொத்துக்களை உண்டாக்கி, மரகத மணி போல் காய்களைக் காய்த்து, செந்நிற மணிகளைப் போல் இனிய பழங்களைக் கொண்டு, பல கிளைகளைப் பெற்று மாமரமாக நின்றான். முருகப்பெருமானின் வேற்படை சூரனாகிய மாமரத்தைத்த துணித்தது. சூரன் பழைய வடிவம் கொண்டு போருக்கு வந்தான். முருகப் பெருமானின் வேல் சூரனின் உடலை இரண்டாகப் பிளந்தது. ஒரு பாதி சேவலாகவும் மற்றொரு பாதி மயிலாகவும் ஆயின. அந்நிலையிலும் போர் செய்ய வேண்டும் என்ற செருக்குடன் முருகப் பெருமானின் எதிரில் வந்தான்.

முருகப் பெருமான் சூரன் மீது அருள் நோக்கம் செய்தார். சிவஞானிகளின் பார்வையால் கருநிற இரும்புச் செந்நிறப் பொன் ஆகுந் தன்மை போல, பகைமை ஒழிந்து, தெளிந்த மனத்தினனாய் சூரன் நின்றான். கொடிய செயல்களைச் செய்தவராக இருந்தாலும் குமர வேளின் திருமுன்பு எய்தினான், தூய்மை உடையவராகி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேல் கதி அடைவர் என்று சொல்வதை ஆராயவும் வேண்டுமா? கொலைக்குரிய போரை இதுவரை செய்த மாயை என்பவளின் மகனும் அல்லவா அளவில்லாத அருளை அடைந்து உய்ந்தான். முருகப் பெருமான் கோழியைக் கொடியாகவும் மயிலை வாகனமாகவும் ஏற்றுக் கொண்டார். முன்பு சேவல் உருவாயும் மயில் உருவாயும் இருந்த அக்கினியையும் இந்திரனையும் முருகப் பெருமான் பழைய வடிவம் கொள்ளும்படி அருளிச் செய்தார்.

14. தேவர்கள் போற்றுதல்

மயில் வாகனத்தில் எழுந்தருளிய முருகப் பெருமானை இந்திரன்உள்ளிட்ட தேவர்கள் கண்டு மகிழ்ச்சியால் ஆரவாரித் தனர். முருகப் பெருமானை வணங்கி, ''சுவாமி! எங்களின் வினையின் வேரை அறுத்தீர்கள். இனி எங்கட்கு வேறோர் குறையுண்டோ? நாங்கள் உய்ந்தோம். இனி தங்களின் திருவடிகளுக்கே தொண்டு பூண்டோம்'' என்று கூறித் துதித்தனர். தம்மைத் துதித்த தேவர்கட்கெல்லாம் முருகப் பெருமான் அருள் புரிந்தார்.

15. இரணியன் புலம்புதல்

சூரபன்மன் இறந்த செய்தியைக் கேட்ட அளவிலேயே பட்டத்தரசி பதுமகோமளை உயிர் பிரிந்தது. ஏனைய மனைவியர் தீக்குண்டம் ஒன்றை உண்டாக்கி, இறந்த பதுமகோமளையின் உடலை அதிலிட்டுத் தாங்களும் அதில் வீழ்ந்து உயிர் நீத்தனர்.

மீனாகக் கடலில் ஒளிந்திருந்த இரணியனுக்குச் செய்தி எட்டியது. ''இந்திரன் உள்ளிட்ட தேவர்கள் வாழ்த்த அரசு செய்தநீ சிவகுமாரனுக்குக் கோழியாய் நின்று விலா ஒடியக் கூவுகின்றாயோ?'' ஆயிரத்தெட்டு அண்டங்களிலுள்ள உயிர்களும் வணங்கும் திருவடிகளை உடைய நீ வேலேந்திய பெருமானை மயிலாக நின்று சுமக்கின்றாயோ? ஒரு தந்தைக்கு மகன் செய்ய வேண்டிய ஈமக் கடன்களைச் செய்வதற்கும் நான் புண்ணியம் செய்யவில்லையே!'' என்றெல்லாம் இரணியன் புலம்பினான். பின் அரச குருவான சுக்கிராச்சாரியாரை அணுகி இறந்த மற்றவர்க் கெல்லாம் நீர்க்கடன் செய்தான். பின்னர் சிவபெருமானைத் தியானித்து முத்தி பெறும் பொருட்டுத் தவம் மேற்கொண்டான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

16. சிறை மீட்சி

முருகப் பெருமான் வீரவாகுத் தேவரை நோக்கிச் சயந்தனையும் தேவர்களையும் சிறையிலிருந்து மீட்டு வரும்படிக் கூறினார். அனைவரும் வந்து முருகப் பெருமானை வலம் வந்து வணங்கினர். சயந்தன் தன் தந்தையாகிய இந்திரனை வணங்கினான். இந்திரன் சயந்தனைத் தழுவி இன்புற்றான். சூரபன்மனுடன் செய்த போரில் இறந்த பூதப் படையினர் அனைவரும் உயிர்த்தெழ முருகப்பெருமான் திருவுள்ளம் கொண்டார். அனைவரும் உயிர் பெற்று எழுந்து வந்து பெருமானை வணங்கினர். முருகப்பெருமான் வருணனை அழைத்து, இலங்கை தவிர வீரமகேந்திரபுரியையும் அசுரர்களின் ஏழு தீவுகளையும் அழித்து விடுமாறு கூறினார். வருணனும் அவ்வாறே செய்தான்.

முருகப் பெருமான் செந்திற் பதியை அடைந்தார். தேவர்கள் மணமுடைய நீர், சந்தனம், மலர், தீபம், அவி, தூபம் முதலிய பொருட்களைக் கொணர்ந்து, குமார தந்திர நூலில் கூறியுள்ளபடி கும்பம், அக்கினி, உருவம் என்ற மூவகையான இடங்களிலும் பூசை செய்தனர். தங்கள் உடலில் உயிர் இருக்கும் வரை குமரக் கடவுளின் திருவடிகளில் சிறந்த அன்பு இருக்குமாறு வரம் தந்தருள வேண்டினர். முருகப் பெருமானும், "அவ்வாறே ஆகுக" என்றருள் செய்தார்.

முருகப் பெருமான் செந்திற் பதியில் தேவதச்சனைக் கொண்டு ஓர் அழகிய திருக்கோயில் அமைத்தார். அக்கோயிலில் சிவபெருமானை இலிங்க வடிவில் தாபித்தார். தேவர்கள் பூசைக்குரிய திரவியங்களைக் கொண்டு வந்து தர, சைவாகம முறைப்படி மலரிட்டு அர்ச்சித்து அன்புடன் சிவலிங்கத்தை வழிபட்டார். திருச்செந்தூரில் இன்றும் ஒரு கரத்தில் அர்ச்சனை மலர் கொண்டவராகச் சுவாமியின் கோலம் உள்ளது.

யுத்த காண்டம் முற்றிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. தேவ காண்டம்

இக்காண்டம் திருப்பரங்குன்று சேர் படலம் முதல் இந்திரபுரிப் படலம் முடிய ஐந்து படலங்களைக் கொண்டது.

1. திருப்பரங்குன்றம் சேர்தல்

முருகப் பெருமான் மயில் வாகனத்தின் மீது எறித் திருச்செந்தூரை விட்டுப் புறப்பட்டார். பிரமன் உள்ளிட்ட தேவர்களை அவரவர் வாகனத்தில் தன்னுடன் வருமாறு கூறியருளினார். மதுரைக்கு மேற்கிலுள்ள திருப்பரங்குன்றத்தை அனைவரும் அடைந்தனர்.

திருப்பரங்குன்றத்தில் தவம் செய்து கொண்டிருந்த பராசர புதல்வர் அறுவரும், பிரமன் முதலிய தேவர்களும் முருகப் பெருமானை அக்குன்றத்தில் வீற்றிருந்தருள வேண்டினர். தேவ தச்சன் அளவற்ற தெருக்களையும் நல்ல தேவ கோட்டங்களையும் முருகப் பெருமான் கோயிலையும் சோலைகளையும் குளங் களையும் உண்டாக்கினான். முருகப் பெருமான் தேவதச்சனின் கைத்திறனைப் பார்த்து அவனைப் பாராட்டினார். தன்னுடன் வந்தவர்களைத் தக்க இடங்களில் இருக்குமாறு செய்தருளினார்.

பராசர முனிவரின் புதல்வர்கள் அறுவரும் கோயிலில் எழுந்தருளிய முருகப் பெருமானை வணங்கித் துதித்தனர். முருகப் பெருமான் அவர்கட்கு ஞானோபதேசம் செய்தருளினார்.

2. தெய்வயானையம்மை திருமணம்

இந்திரன் தன் மகள் தெய்வயானையை முருகப் பெருமானுக்குத் திருமணம் செய்து கொடுக்க எண்ணினான். தேவர்களிடம் தன் கருத்தைத் தெரிவித்தான்.அவர்கள் திருமண ஏற்பாடுகளை விரைந்து செய்யக் கூறினர். இந்திரன் தூதர்களை அனுப்பிமேரு மலையிலிருந்து தன் மனைவி இந்திராணியையும் மகள் தெய்வயானையையும் திருப்பரங்குன்றத்திற்கு அழைத்து வரச் செய்தான்.

இந்திரன் தன் மகள் தெய்வயானையைத்திருமணம் செய்து கொள்ளும்படி முருகப் பெருமானிடம் விண்ணப்பித்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முருகப்பெருமானும் மறுநாளே திருமணம் புரிவதாக இசைந்தார். முசுகுந்த சக்கரவர்த்திகளும் ஏனைய அரசர்கட்கும் தேவர்கட்கும் முனிவர்கட்கும் தூதர்கள் மூலம் மறுநாள் திருமணம் என்று அழைப்பு விடுத்தான். தேவதச்சன் திருமண மண்டபத்தையும் வருவோர்கள் தங்குவதற்கு விடுதிகளையும் அமைத்தான். ஒரு காலத்தில் கயிலையில் முசுக்கூட்டங்களில் (குரங்கு) ஒன்று வில்வ இலைகளைப் பறித்து மரத்தடியில் அமர்ந்திருந்த இறைவன் இறைவி மீது போட்டது. அஃது அறியாமல் செய்த சிவபுண்ணியம் ஆயினும் சிவபெருமான்அதை அரசனாகப் பிறக்க அருள் புரிந்தார். அதுதான் எடுக்கும் பிறவியில் சிவ பக்தியில் சிறக்க வேண்டும் என்றும் முற்பிறப்பு நினைவிருக்கும் வண்ணம் குரங்கு முகத்துடன் பிறக்க வேண்டும் என்றும் வேண்டியது. சிவபெருமானும் "அவ்வாறே ஆகட்டும்" என அருள் புரிந்தார்.

இவ்வாறு தோன்றிய முசுகுந்தன் சோழ நாட்டுக் கருவூரில் அரசாண்டு கொண்டிருந்தான். தூதர்கள் போய் மறுநாள் முருகப் பெருமானுக்கும் தெய்வயானைக்கும் நடைபெற இருக்கும் திருமணத்திற்கு வர அழைப்பு விடுத்தனர். முசுகுந்த சக்கரவர்த்தி யும் திருமணத்திற்குப் புறப்பட்டார். அழைப்புப் பெற்றவர்கள் அனைவரும் திருமணம் காண திருப்பரங்குன்றத்தில் கூடினர்.

இந்திரன் தேவர்கள் சூழ முருகப் பெருமானிடம் சென்று வணங்கி, திருமணச் சாலைக்கு எழுந்தருள வேண்டினான். முருகப்பெருமான் மயில் வாகனத்தில் ஏறி, சூரியனும் சந்திரனும் குடைபிடிக்க, வாயு சாமரம் வீச, வருணன் ஆலவட்டம் அசைக்க, பலவகை வாத்தியங்கள் முழங்க திருமண மண்டப வாயிலை அடைந்தார். ஆலத்தி சுற்றப்பட்டது. மயிலை விட்டு இறங்கிய முருகப் பெருமானின் பாதங்களை இந்திராணி உள்ளிட்ட தேவ மங்கையர்கள் காமதேனுவின் பாலினால் கழுவினர். முருகப் பெருமான் திருமண மண்டபத்தில் எழுந்தருளினார். அந்நேரம் பரமேசுவரனும் பார்வதியும் அங்கு எழுந்தருளினர். இந்திரன் சிவபெருமானிடம் முருகன் தெய்வயானை திருமணத்தைச் செய்து வைக்க வேண்டினான்.

திருமகளும் கலைமகளும் துதிக்க வந்த தெய்வயானையை இந்திரன் திருமண மண்டபத்திற்கு அழைத்துச் சென்றான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தெய்வயானை பார்வதி, பரமேசுவரரை வணங்கி முருகப் பெருமானைக் கண்டு நாணி நின்றார். உமையம்மை முருகப் பெருமானையும் தெய்வானை அம்மையையும் பெரிய பொன்மணிப் பீடத்தில் எழுந்தருளச் செய்தார். இந்திராணி திருமஞ்சன நீரை வார்க்க இந்திரன் முருகப் பெருமானின் திருவடிகளைப் பூசித்தான். பின் தெய்வயானை அம்மையின் திருக்கரத்தை முருகப் பெருமானின் திருக்கரத்தில் வைத்து "இவளை உனக்குத் திருமணம் செய்யத் தந்தேன்" என்று வேத மந்திரம் கூறிக் கரத்தில் உள்ள நீரைத் தாரை வார்த்தான்.

பிரமன் மனத்தால் படைத்துக் கொடுத்த மங்கல நாணை, முருகப் பெருமான் வாங்கி தெய்வயானை அம்மையின் கழுத்தில் கட்டி, மலர் மாலையும் சூட்டியருளினார். பலவகை மங்கல இசைக் கருவிகள் ஒலித்தன. திருமணக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. தீ வலம் வருதல், அம்மி மிதித்தல், அருந்ததி காட்டுதல் முதலிய சடங்குகள் சிறப்பாக நடந்தன. மணமக்கள் பார்வதி பரமேசுவரரை வணங்கினர்.

முருகப் பெருமான் தெய்வயானை அம்மையுடன் சிங்கா தனத்தில் வீற்றிருந்தருளினார். திருமணத்திற்குக் குழுமியோர் அனைவரும் தம்பதிகளை வணங்கினர். பார்வதியும் பரமேசுவர ரும் அனைவருக்கும் திருவருள் புரிந்து மறைந்தனர். இந்திரன் அனைவருக்கும் காமதேனுவால் தரப்பட்ட இன்னமுதுகளை ஊட்டி, ஆடைகளும் அணிகளும் குறைவறக் கொடுத்து விடை கொடுத்தனுப்பினான்.

3. தேவலோகத்தில் குடியேற்றல்

முருகப் பெருமான் தேவர்கள் மலர்மழை பொழிய, பூதப்படைகள் சூழ, யானையுடன் அமராவதியை அடைந்தார். முருகப் பெருமானின் ஆணைப்படித் தேவதச்சன் அந்நகரை அழகுறப் புதுப்பித்தான். இந்திரன், பிரமன், திருமால், முருகப் பெருமான் முதலியோர்கட்குத் தனித்தனிக் கோயில் அமைத்தான்.

இந்திரனுக்கு முடிசூட்டும்படி முருகப் பெருமான் கூறியருளினார். ஒரு கணப்பொழுதில் அட்டமங்கலம் முதலான வற்றை வருவித்து, மங்கலமான கவரி, ஒளி பொருந்திய வாள்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மணிமுடி, வெண்கொற்றக் குடை முதலியவற்றைத் தேவர்கள் கொண்டுவரச் செய்தனர். இந்திரனைக் கங்கை நீரினால் அபிடேகம் செய்வித்தனர். ஆடை ஆபரணங்கள் மலர் மாலை களால் அலங்கரித்தனர். அரியணையில் அமரச் செய்து முடி சூட்டினர். தேவர்கள் இந்திரனை வணங்கினர். முனிவர்கள் வாழ்த்தினர். அரம்பையர்கள் ஆடினர். வித்தியாதரர்கள் யாழிசைத்தனர்.

இந்திரன் முருகப் பெருமானை வணங்கி, "அடியேன் இழந்த அரசை மீட்டுத் தந்து, இன்பமும், நலனும் வழங்கியருளினீர். அடியேன் உய்ந்தேன்" என்றான். முருகப் பெருமான் இந்திரனுக்கு ஆசி கூறி, தேவர்களைத் தத்தம் இடங்கட்குச் செல்லுமாறு பணித்து, தெய்வயானையுடன் தம் திருக்கோயிலில் எழுந்தருளி னார்.

4. கந்த வெற்பை அடைதல்

சிலநாட்கள் கழிந்தபின் வீரவாகுத் தேவர் தேரைச் செலுத்த முருகப்பெருமான் தெய்வயானையுடன் கயிலையை அடைந்தார். தாய் தந்தையரை வணங்கி ஆசி பெற்றார். தேவர்களைத் தத்தம் இருப்பிடங்கள் செல்ல விடை கொடுத்தார். தெய்வயானையுடன் கந்தகிரியை அடைந்து இரத்தின சிங்காதனத்தில் வீற்றிருந் தருளினார்.

தூய மறைகளாலும் துதிப்பதற்கரிய முருகப் பெருமானின் சிவந்த பேரடிகள் வாழ்க! சேவலும் மயிலும் வாழ்க! கொடிய சூரபன்மனின் மார்பைப் பிளந்த வேல் வாழ்க! அப்பெருமானின் உண்மை அடியவர் வாழ்க! இவ்வுலகம் எல்லாம் வாழ்க!

5. இந்திரபுரி

விண்ணுலக ஆட்சியை முருகப் பெருமான் அருளால் மீண்டும் அடைந்த இந்திரன் தான் சூரபன்மனால் அனுபவித்த துன்பங்களை எல்லாம் நினைத்தான். விண்ணுலக போக வாழ்க்கையை வெறுத்துத் தவம் செய்ய நினைத்தான். தேவகுருவாகிய வியாழ பகவான், "பொய்த் தோற்றமான கானல் நீரை உண்மையான நீர் என்று விரும்பிக் கையிலுள்ள அமிர்தத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விடத்தில் கொட்டியது போல் வீடுபேற்றை உண்மை என்றெண்ணி இம்மையில் அடையக்கூடிய இன்பத்தை இழக்கின்றாய். பெண்களிடம் அடையும் இன்பமே இன்பம்'' என்ற உலகாயதக் கொள்கையை அவனுக்கு உபதேசித்தார். இந்திரனும் மனம் மாறித் தன் புதல்வன் சயந்தனிடம் ஆட்சியை ஒப்படைத்து இந்திரணியோடு இன்பம் நுகர்ந்து கொண்டிருந் தான்.

அரசு புரிந்து கொண்டிருந்த சயந்தன் ஒருநாள் வியாழ பகவானை நோக்கி முன்னாளில் பிரமன் முதலான தேவர்கள் சூரனால் துன்புறக் காரணம் யாது?'' என வினவினான். வியாழ பகவான், ''முன்னர்த் தக்கன் சிவபெருமானை அழையாது ஒருவேள்வி செய்தான். அவ்வேள்வியில் தேவர்களும் முனிவர் களும் கலந்து கொண்டதால் அவ்வாறு துன்புற்றார்கள்'' என்று கூறி அந்த வரலாற்றைக் கூறலானார்.

தேவகாண்டம் முற்றிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. தட்ச காண்டம்

இக்காண்டம் உபதேசப் படலம் முதல் வள்ளியம்மை திருமணப் படலம்முடியய 24 படலங்களைக் கொண்டது.

1. பிரமன் தக்கனுக்குச் செய்த உபதேசம்

சத்தியலோகத்தில் வீற்றிருந்து பிரமன் படைப்புத் தொழில் செய்து கொண்டிருந்தார்.அவரின் மூத்த மகன் தக்கன். தக்கனுக்கு மரீசி முதலிய ஒன்பது தம்பியர். ஒருநாள் தக்கன் பிரமனிடம், ''தந்தையே! முழுமுதற் கடவுள் யார்?'' எனக் கேட்டான்.

பிரமன் ''சிவபெருமானே முழுமுதற் கடவுள். அவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை'' என்றார். தக்கன், ''தந்தையே படைப்புத் தொழிலைப் புரிகின்ற உம்மையும், காத்தல் தொழில் புரிகின்ற திருமாலையும் காட்டிலும் சங்காரத் தொழில் புரியும் சிவமூர்த்தி உயர்ந்தவர் என்பதற்குக் காரணம் யாது?'' எனக் கேட்டான்.

பிரமன், ''மகனே! சிவபெருமானே சர்வ சங்கார காலத்தில் அகில உலகங்களையும் எங்களையும் ஒடுங்கச் செய்கின்றார். ஒடுக்கத்தைச் செய்யும் அவரே மீண்டும் உலகைப் படைக்கின்றார். உயிர்களின் வினைகட்கு ஏற்ப உடல்களைக் கொடுக்கின்றார். என்னையும் திருமாலையும் தன் தோள்களிலிருந்து படைத்தார். எள்ளுறும் எண்ணெய் போலவும், மணியில் பொருந்திய ஒசை போலவும் மலரில் மணம் போலவும் மாணிக்கத்தில் ஒளி போலவும் உலகம் முழுவதும் உள்ளும் புறமுமாகப் பிரிவில்லாது கலந்துள்ளார்'' என்றான்.

தக்கன் சிவபெருமான் அருளிய வேதம் உயிர்களையும் ஐம்பூதங்களையும் தேவர்களையும் பிரமம் என்று கூறுகிறதே என ஐயம் எழுப்பினான். பிரமன், ''சிவமே பிரமம் என்பது உண்மை. யாதொரு பொருளை யாவர் வணங்கினாலும், அவ்வணக்கம் முக்கண்ணனான சிவபெருமானையே போய்ச் சேரும். ஐந்தொழில் புரிபவர் அவர். ஆதி நடு அந்தம் இல்லாதவர். அருவும் உருவும் அருவுருவும் ஆனவர். நித்தியமானவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உயிர்க்குள் உயிராய் விளங்குபவர். அளப்பரும் குணமுடையவர். பக்குவமான மாக்கட்கு அருளுபவர். பெண் ஆண் அலி என்ற தன்மை இல்லாதவர். வீடுபேற்றை அளிக்க வல்லவர். சிவனுக்கு ஒப்பாக எம்மைக் கருதிச் சிறப்புச் செய்பவர் நரகத்தில் விழுவர். சிவபெருமானே பரம்பொருளான பதி ஆவார். நாங்கள் மும்மலங்களாலான பாசத்தால் கட்டுண்ட பசுக்கள். எங்கள் தொழில்களை நடத்தும் பொருட்டுச் சிவமூர்த்தியை வழிபட்ட ஆலயங்கள் பல. சிவனருள் பெறாது முக்தி அடைந்தவர் இல்லை. சிவனருள் பெறாது வாழும் தேவரும் இல்லை. சிவனருள் கிடைக்கப் பெற்றால் கிடைக்காத அரிய பொருள் என ஒன்றில்லை. சிவபெருமானே அல்லாமல் பரம்பொருளான இறைவன் வேறு இல்லை. நீ தவத்தைச் செய்து சிவத்தை அடைவாயாக'' என்றார்.

2. தக்கன் தவம் செய்தல்

தக்கன் முன்வினைப் பயனால் வீடுபேற்றை விரும்பாது, வளங்கள் பல வேண்டி சிவனைத் தவம் செய்ய எண்ணினான். பிரமன் தான் முன்பு மனத்தால் படைத்த மானச சரோவரத்தை அடைந்து தவம் செய்யும்படி விடை கொடுத்தான். தக்கன் மனத்தை ஒரு முகப்படுத்தி ஆயிரம் ஆண்டுகள் அரிய தவம் செய்தான். சிவபெருமான் உமா தேவியோடு காட்சி தந்தருளினார். தக்கன் சிவபெருமானிடம், ''நான் எல்லா உலகங்களிலும் ஆணை செலுத்தி ஆட்சி புரிய வேண்டும். உம்மை வணங்கும் உயிர்களெல்லாம் எம்மை வணங்க வேண்டும். தேவர்களும் அசுரர்களும் நான் இட்ட ஏவல்களைச் செய்ய வேண்டும். நீண்ட ஆயுள் உடையவர்களாய் ஆண் மக்களும் பெண் மக்களும் வேண்டும். பராசக்தியை மகளாகத் தந்து தாங்கள் அவளை மணம் செய்தருள வேண்டும்'' என வரங்கள் பல வேண்டினான். சிவபெருமானும் ''வரங்களை உனக்குத் தந்தோம். நீ நல்ல நெறியில் நின்றாயானால் இவை நிலைத்து நிற்கும்'' என்று கூறி மறைந்தருளினார். பிரமன் தக்கன் பெற்ற வரங்களையும் அவற்றால் அவனிடம் உண்டாகப்போகும் மாற்றங்களை உள்ளுணர்வால் உணர்ந்தும் வருந்தினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தக்கன் கேட்டதற்கு இணங்க அவன் ஆட்சி புரிய தக்கமாபுரி என்ற நகரைப் பிரமன் உண்டாக்கினான். தேவகுருவான வியாழ பகவான் இந்திரன் உள்ளிட்ட தேவர்களிடம் தக்கன் தக்கமா புரியில் ஆட்சி புரிவதைக் கூறினார். தேவர்களனைவரும் சென்று தக்கனை வணங்கினர். அசுரர்கள் குருவான சுக்கிராச்சாரியார் அசுரர்கட்கு அரசனான அசுரேந்திரனிடம் அறிவிக்க அவனும் தக்கனை அடைந்தான். சூரியன், சந்திரன், மற்றக் கோள்கள், திக்குப் பாலகர்கள் அனைத்துலகத்தினர்களும் சென்று தக்கனை வணங்கி அவன் இட்ட ஏவலின் வழிநின்றார்கள்.

3. தக்கன் மகவுகளைப் பெறுதல்

தக்கன் அருந்ததியனைய கற்பிற் சிறந்த வேதவல்லியைத் திருமணம் செய்து கொண்டான். ஆயிரம் புதல்வர்களைப் பெற்றான். அவர்கட்கு முப்புரி நூல் பூணும் சடங்கை வேத விதிப்படிச் செய்தான். அவர்கள் வேதங்களை ஓதி உணர்ந்தார்கள். தக்கன் தம் புதல்வர்களை, ''நீங்கள் மானதப் பொய்கையை அடைந்து சிவபெருமானை நினைத்துத் தவம் செய்து எல்லா உயிர்களையும் படைக்கும் தொழிலாற்றும் வரம் பெற்றுத் திரும்பி வருக'' என்று கூறி அனுப்பினான். அவர்களும் மானதப் பொய்கைக் கரையை அடைந்து புலன்களை வென்று தவம் புரியலானார்கள்.

நாரத முனிவர் அங்கு வந்து தட்ச குமாரர்களின் தவம் செய்கின்ற காரணத்தைக் கேட்டறிந்தார். பின், ''நீங்கள் அவ்வரம் பெற்றால் இறைவனை மறந்து படைக்கும் தொழில் செய்யும் யாமே பரப்பிரம்மம் என எண்ணி விடுவீர். அதனால் துன்பம் அடைவீர். எனவே படைக்கும் தொழிலின் மீதுள்ள விருப்பத்தைக் கைவிடுவீர். வீடு பேறடைய முயல்வீர்'' என்றார்.

''இந்த உலகத்தில் அழிவற்ற தவத்தைச் செய்து அரிய வீடு பேற்றைப் பெற்றவர்கள் அளவற்றவர்கள். வீடுபேற்றைப் பெற முயல்பவர்களும் அளவற்றவர்கள். வீடுபேற்றை விரும்பு வோர்க்குச் சிவனடியார்களை அன்றி வேறு சுற்றம் இல்லை. அவர்கள் பற்றற்றவர்கள். சிவஞான அறிவு மிக்கவர்கள். பேசுதற்கரிய பெருமையுடையவர்கள். அவர்களைப் போல

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பற்றற்று வீடுபேறடைய முயல்வீர்களாக!'' என்று நாரதர் அவர்கட்கு அறிவுறுத்தினார். அரிய தவங்கள் பல ஆற்றி அப்புதல்வர்கள் வீடுபேற்றை அடைந்தனர்.

அதனைத் தக்கன் அறிந்து வருந்தினான். மீண்டும் ஆயிரம் புதல்வர்களைப் பெற்றான். அவர்கட்கு வேதங்களை ஓதுவித்துத் தவம் செய்து சிவபெருமானிடம் படைப்புத் தொழிலைப் பெற்று வருமாறு அனுப்பினான். அவர்களும் மானதப் பொய்கைக்குச் சென்று தவம் செய்யத் தொடங்கினர்.

முன்பு போல நாரதர் அங்கு வந்தார். ''பதவியை விரும்புவது துன்பம் தரும் பிறவிக்கு ஏதுவாகும். தவம் செய்து படைப்புத் தொழிலை வரமாகப் பெறுவது, அழுக்கை நீக்கிக் கொள்ளப் போய்ச் சேற்றைப்பூசிக் கொள்வது போலாகும். வீடு பேற்றைச் சிவபெருமானிடம் பெறுவதே சிறந்தது'' என்று அறிவுறுத்தினார். அவர்கள் நாரதரிடம் வீடு பேறடைய வழிகளை உபதேசித்தருள வேண்டினர்.

''சிவபெருமானின் திருவடிகளை அவரருளால் வழிபடும் சாதன நெறிகள் நான்காகும். அவை சரியை, கிரியை, யோகம், ஞானமாகும். அவற்றின் பலன்கள் சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் ஆகும். இருவினையொப்பு, மலபரிபாகம் பெற்ற ஞான சாதகர்கள் சொல்லுக்கு எட்டாத சிவத்துடன் இருமையின் ஒருமையடைந்து அழியா இன்பம் பெறுவர். ஆதலால் நீங்களும் அந்த ஞான நெறியில் நின்று முத்தியை அடைவீர்களாக'' என்று நாரதர் உபதேசித்தார். ஆயிரவரும் ஒருமை நினைவுடன் உயர் தவநெறி நின்று வீடுபேற்றை அடைந்தனர்.

செய்தியறிந்த தக்கன் சினம் கொண்டான். ''என்னுடைய விருப்பத்திற்கு மாறாக ஈராயிரம் புதல்வர்களையும் எனக்கு உதவாமல் செய்த நாரதர் உலகெங்கும் சுற்றித் திரியட்டும்'' என்று சாபமிட்டான். ''இனிமேல் பெண் குழந்தைகளையே பெற்றெடுப்பேன்'' என்று கூறி இருபத்துமூன்று பெண் மகவுகளைப் பெற்றான். முதல் பதின்மூன்று பெண்களைத் தருமருக்குத் திருமணம் செய்து வைத்தான். பத்துப் பெண்களைப் பிருகு முதலிய பத்துப் பேருக்குத் திருமணம் செய்வித்தான். அவர்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அனைவரும் பல ஆண்மக்களையும், பெண் மக்களையும் பெற்றனர்.

4. தக்கன் சந்திரனுக்குக் கொடுத்த சாபம்

தக்கன் மேலும் நட்சத்திரக் கூட்டத்து அசுவினி முதல் இருபத்தேழு பெண்களைப் பெற்றான். அவர்களைச் சந்திரனுக்கு திருமணம் செய்து வைத்தான். அனைவரிடமும் ஒரே மாதிரியான அன்பு செலுத்தும்படியாகச் சந்திரனிடம் கூறினான். சந்திரனும் அவ்வாறே நடந்து வந்தான். சிலகாலம் கழிந்தபின் அவர்களில் அழகு மிகுந்த கார்த்திகை, ரோகிணியிடம் மட்டும் அதிக அன்பு செலுத்தினான். மற்றவர்களைப் புறக்கணித்தான். இதனை மற்றப் பெண்கள் தக்கனிடம் வருத்தத்துடன் தெரிவித்தனர். தக்கன் கோபம் கொண்டு சந்திரனின் கலைகள் நாளுக்கு ஒன்றாகத் தேய்ந்து அவன் மாளச் சாபமிட்டான்.

சந்திரனுக்கு நாளுக்கொரு கலையாகத் தேய்ந்தது. இன்னும் ஒரு கலைதான் எஞ்சியிருந்தது. அவன் அஞ்சி இந்திரனிடம் சென்று முறையிட்டான். அதனைக் கேட்ட இந்திரன், ''சந்திரனே! நீ முன்பொரு காலத்தில் கயிலையில் விநாயகப் பெருமானின் பெரு வயிற்றையும் அவர் கையிலிருந்த மோதகத்தையும் பார்த்துச் சிரித்தாய். அப்போது விநாயகப்பெருமான் சினந்து,''நீ நீசரைப் போல் விளங்குவாயாக'' எனச் சபித்தார். அந்தச் சாபத்தால் அன்றிலிருந்து உன்னை எவரும் பாராது இகழ்ந்து நீங்க, நீ வெட்கம் அடைந்து வானத்தில் திரிவதில்லை. உடலும் மெலிந்தாய். அது கண்டு பிரமன் விநாயகரை அடைந்து சாபப் பயனை ஆண்டிற்கு ஒருநாள் பொருந்தச் செய்து உன்னைப் பாதுகாக்க வேண்டினார். விநாயகர் அருள் செய்ய நீ ஆவணி மாதச் சதுர்த்தியில் விநாயகருக்குச் சிறப்புப் பூசைகள் செய்ய, உலகினர் வானத்தை நோக்காத முறையில் நீசத் தன்மையுடன் கூடி ஒதுங்கி வாழ்ந்தாய். இப்போது புதிதாக ஒரு குறை உனக்கு வந்துள்ளது. நீ பிரமனிடம் சென்று குறை கூறு'' என்றான்.

சந்திரன் பிரமனிடம் சென்றான். பிரமன், ''சந்திரனே! நீ சிவபெருமானிடம் சென்று உன் குறையைச் சொல், ஆணவம் மிக்க தக்கனின் சாபத்தை அவர் ஒருவரால்தான் நீக்க முடியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவரை அடைக்கலமாக அடைந்தவர்களின் துன்பத்தை அவர் நீக்குவார். தஞ்சம் புகுந்த மார்க்கண்டேயருக்காகக் காலனைக் காலால் உதைத்து மாய்த்தார். அடைக்கலம் புகுந்த அமரர்கள் பொருட்டு ஆலகால விடம் உண்டார். ஆரவாரித்து வந்த கங்கையைச் சடையில் தாங்கி நம்மைக் காத்தார். அவர் அடியார்கட்குச் செய்த அருட் செயல்கள் அளவிலாதன. நீ அவரது திருவடிகளை அடைக்கலமாகப் பற்று'' என்று கூறியருளினார்.

சந்திரனும் கயிலை சென்றான். உயிர்கள் தோறும் உயிராயிருந்து அவற்றின் பழவினைகளை அறிந்து, முகர்ந்து கொண்ட ஊழ்வினையை அனுபவிக்கச் செய்யும் சிவபெருமான் சந்திரனிடம் வந்த காரணம் யாது என வினவினார். சந்திரனும் கூறினான். சிவபெருமான் எஞ்சிய ஒரு கலையை எடுத்துச் சடையில் சூட்டிக் கொண்டார். ''இந்த ஒரு கலை என்றும் அழியாது. நம் அருளால் தினம் ஒரு கலை வளரும். உன் மாமன் தந்த சாபத்தால் தினம் ஒரு கலை தேயும்'' என்று அருள் புரிந்தார். இதையறிந்த தக்கன் மிகுந்த சினம் கொண்டான். ''நான் தந்த சாபத்தை என் தந்தையும், தந்தைக்குத் தந்தையும் நீக்கவில்லை. தாயும், தந்தையுமில்லாத சிவனா என் சாபத்தைத் தடுப்பது. ஐந்தொழில்களும் தாமே செய்கின்ற அகந்தை போலும். மேலும் நாம் தானே தக்கனுக்கு வரமளித்தோம் என நினைத்துத் தானோ என் சாபத்தைப் பொருட்படுத்தாது இப்படிச் செய்தான்'' என சினந்தான்.

அப்பொழுது புலகர் என்ற முனிவர் தக்கனை நோக்கி, ''ஒப்பில்லாத சிவபெருமானை இகழாதே. இகழ்ந்தால் உன்செல்வமெல்லாம் அழியும். தன்னை அடைக்கலம் புகுந்தவர் களை ஆதரிக்கும் பேரருளாளர் ஆவர். அதனால் சந்திரனை ஆட்கொண்டார். சந்திரனோ உன் மருமகன். சிவபெருமானோ பிற்காலத்தில் உனக்கு மருமகனாகப் போகின்றவர். மேலும் கலைகள் நிரம்பியவன், நாள்தோறும் குறைந்து தேய்வதால் உன் சாபத்தை நிலைக்கச் செய்தவரு மாவார்'' என்று கூறினார். தக்கன் சினம் தணிந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. உமை கயிலை நீங்குதல்

திருக்கயிலாய மலையில் உமையம்மை இறைவனை வணங்கி, ''தங்களின் தத்துவ நிலையைக் கூறியருளும்'' என்று கேட்டார். இறைவன், ''தேவி! பேரும் உருவும், குணமும் செயலும் இல்லாத யாம் சக்தியால் அருளுருவம் கொண்டு செயல்படுகிறேன். பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி என்ற ஐம்பெருஞ் சக்திகளால் படைத்தல், காத்தல், ஒடுக்குதல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களை ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுச் செய்கின்றேன். மாயையி லிருந்து முப்பத்தாறு தத்துவங்களைத் தோற்றுவிக்கின்றேன்'' என்றார்.

இதனைக் கேட்ட உமையம்மை, ''சுவாமி! என்னை உம்முடைய சக்தியென்று கூறுவதால் என்னால்தான் இத்தனையும் நடைபெறுகின்றன'' என்று தம்மைத் தாமே வியந்துகூறினார். ஆனால், ''யாமின்றி எவையும் இயங்க மாட்டா'' என்று கூறிச் சிவம் தனித்து நின்றார். அகில உலகங்களும் அசைவற்றுச் சடங்கள் ஆயின. எங்கும் இருள் மூடியது. உமையம்மை, ''எம்பெருமானே! பிழை பொறுத்தருளும். எல்லாம் நீரே என்பதை உணர்ந்தேன்'' என்று கூறி வணங்கினார்.

சிவபெருமான் பதினொரு உருத்திரர்கட்கு முதலில் உணர்வு தந்தருளினார். அவர்கள் திருவிடைமருதூர் வந்து, அந்த இருள் சூழ்ந்த இரவில் சோடச கலாப் பிரசாதத்துடன், திருவைந்தெழுத்து ஓதி, வில்வத்தால் அர்ச்சித்துச் சிவபூசை செய்தார்கள். இந்த இரவு தான் சிவராத்திரி. சிவராத்திரி இரவில் சிவனை வழிபட்டோர் எல்லா நலன்களும் எய்தி இன்புறுமாறு இறைவனிடம் வரம் பெற்றார்கள்.

சிவபெருமான் தக்கனுக்குக் கொடுத்த வரத்தை நிறைவேற்றத் திருவுள்ளம் கொண்டு, ''தேவி! உன்னை நீயே வியந்ததால் அகில உலகங்களும் சமமாகி நின்றன. அப்பாவம் நீங்க நீ சென்று யமுனா நதியில் வலம்புரிச் சங்கு வடிவில் தவம் செய். தக்கன் என்பான் உன்னை கண்டெடுத்து வளர்ப்பான். ஐந்து வயது நிரம்பியதும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தவம் செய். பின்னர் உரிய காலத்தில் யாம் வந்து வேதமுறைப்படி உன்னைத் திருமணம் செய்து அருள் புரிவோம்'' என்று கூறினார்.

6. காளிந்தியில் உமை சங்கு வடிவில் தோன்றுதல்

யமுனா நதி காளிந்த மலையில் தோன்றி வருவதால் அதற்குக் காளிந்தி என்ற பெயரும் உண்டு. அந்நதியில் ஒரு தாமரை மலரில் வலம்புரிச் சங்கு வடிவில் உமையம்மை தவம் செய்து கொண்டிருந்தார். அந்நதியின் சிறப்புக்களை உணர்ந்த தக்கன் மாசி மகம் நாளில் மனைவி வேதவல்லியுடன் அதில் நீராடச் சென்றான். வலம்புரிச் சங்கைக் கண்டு வியந்து எடுத்தான். அது ஒரு பெண் குழந்தையாய் உரு மாறிற்று. அக்குழந்தையை மனைவி கையில் கொடுத்தான். அவள் அதை அரண்மனைக்கு எடுத்துச் சென்று ''தாட்சாயணி'' என்று பெயர் சூட்டிப் பாலூட்டித் தாலாட்டிப் பாசத்துடன் வளர்த்தாள்.

7. உமை தவம் புரிதல்

தாட்சாயணி ஆறு வயது ஆனதும் தன் பெற்றோரிடம் தான் தவம் செய்ய விரும்புவதாகக் கூறினாள். தவச்சாலை அமைக்கப் பட்டது. இக்குழந்தைக்கு இறைவனை நோக்கித் தவம் செய்யும் எண்ணம் எப்படி வந்தது என்று வேதவல்லி வியந்தாள். தக்கன் தான் முன்னாளில் சிவபெருமானிடம் பெற்ற வரம் பற்றிக் கூறினான்.

தாட்சாயணிக்குப் பன்னிரண்டு வயது நிரம்பியது. சிவபெருமான் வேதியர் கோலத்தில் அங்கு வந்தார். ''பெண்ணே! நாம் ஒன்றை விரும்பி இங்கு வந்தோம். நீ உடன்பட்டால் அதைச் சொல்வோம்'' என்றார். தாட்சாயணி, ''நீர் விரும்பியதைச் சொன்னால் அதை நான் இப்பொழுது தருவேன்'' என்றாள். வேதியர் தான் அவளைத் திருமணம் செய்ய விரும்புவதாகக் கூறினார். தான் சிவபெருமானைத் திருமணம் செய்ய விரும்பியே தவம் செய்வதாகக் கூறினாள்.

''எவராலும் இத்தன்மையன் என்று அறியவொண்ணாத சிவ பரம்பொருள் உன்னைத் திருமணம் செய்வது அரிது. தவம் செய்து வருந்தாதே'' என வேதியர் உரைத்தார். அவள், ''என் தவத்திற்குச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமான் வராது போனால், நான் உயிரை விடுவேன். இது சத்தியம். நீர் பித்தர் போலும். இங்கிருந்து போம்'' என்றாள். அவளின் உள்ள உறுதியைப் பாராட்டி வேதியர் பிறரறியா வண்ணம் தன் உண்மை வடிவை அவளுக்குக் காட்டினார்.

தாட்சாயணி உடல் நடுங்கினாள். வணங்கினாள். மன்னித் தருள வேண்டினார். தோழியர் தக்கனிடம் சென்று தகவல் தெரிவித்தனர். தக்கன் ஞானக் கண்களால் நடந்தவை அறிந்தான். மகளைச் சிவனுக்குத் திருமணம் செய்விக்க எண்ணினான்.

8. தாட்சாயணியின் திருமணம்

அன்றே திருமணத்திற்கு ஏற்ற நாளானதால் தக்கனபுரியை அலங்கரிக்கச் செய்தான். தேவர்கட்குத் திருமணத்திற்கு வர அழைப்பு விடுத்தான். சிவபெருமான் நேரில் சென்று திருமணம் புரிய வரும்படி அழைத்தான். சிவபெருமான் தக்கனின் மாளிகையை அடைந்தார். மங்கையர்கள் மங்கலப் பொருட்களை ஏந்தி எதிர்சென்று அழைத்தனர்.

வேதவல்லி மகளின் கூந்தலுக்கு நறுமணப் புகை ஊட்டி கங்கை நீரால் திருமுழுக்காடச் செய்தாள். பொன்னாடை, ஆபரணங்கள் அணிவித்து மலர் மாலை சூட்டி, திருமண மேடையில் சிவபெருமான் பக்கத்தில் அவளை அமர்த்தினர். மங்கல வாழ்த்துக்கள் பாடப்பட்டன. வேதவல்லி நீர் வார்க்க, தக்கன் சிவபெருமானின் திருவடிகளைக் கழுவி மலர்களால் அர்ச்சித்தான். சிவபெருமானின் கரத்தின் மீது தாட்சயணியின் கரத்தை வைத்து, ''தங்கட்கு இப்பெண்ணை யான் அளித்தேன். இவளை நன்கு பாதுகாக்க வேண்டும்'' என்று கூறி, நீரை வார்த்துத் தத்தம் செய்தான். பிரமன் திருமண வேள்விக்குரிய பொருட் களைக் கொண்டு வந்து முறைப்படித் திருமணச் சடங்குகளைச் செய்தான். அப்பொழுது சிவபெருமான் தன் வடிவத்தை மறைத்துக் கொண்டார். தாட்சாயணி வருந்தினாள். வேதவல்லி மகளைத் தேற்றித் தொடர்ந்து தவம் செய்யும்படிக் கூறினாள். தக்கன் மிக்க கோபம் கொண்டான்.

தாட்சாயணி தவச்சாலையைய அடைந்து தவம் செய்யத் தொடங்கினாள். சிவபெருமான் கையில் பிச்சை ஓடும், உடம்பில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருநீறும் மார்பில் உருத்திராக்க மாலையும், அடிகளில் சிலம்பும் கையில் சூலமும் தாங்கித் துறவிக் கோலத்தில் அங்கு வந்தார். தாட்சாயணி அவரை வணங்கினாள். துறவி இடப்பக்கம் சக்தி இல்லாது சிவபெருமானாகக் காட்சி தந்தார். வந்தது மணாளர் என தாட்சாயணி உணர்ந்தாள். வணங்கினாள். சிவபெருமான் கைகளை நீட்டி, அம்மையைத் தம் இடப்பக்கத்தில் இருத்தி இட வாகனத்தில் கயிலையை அடைந்தார்.

தோழிகள் தக்கனிடம் தகவல் தெரிவித்தனர். பெற்றோருக்குத் தெரியாமல் சிவன், தன் மகளைக் கயிலைக்கு அழைத்துச் சென்றது முறையா என்று தக்கன் தேவர்களிடம் முறையிட்டான். அன்று முதல் தக்கன் சிவனை நினைக்காமல் வாழ்ந்தான்.

9. தக்கன் கயிலை செல்லல்

சிவனை நினைக்காமல் ஆணவத்துடன் இருக்கும் தக்கன் விரைவில் அழிவான். ஆனால் நாம் இப்போது அவனை மதிக்காமல் போனால் நம் பதவி பறிபோய் விடும் என்று வருந்தினர். பிரமன் முதலானோர் தக்கனின் சினத்தை மாற்றி அவனைச் சிவனுடன் சேர்த்து வைக்க, எண்ணினர். ''உன் மகளான உமையையும் மருமகனான சிவனுடன் மறந்தாய் போலும். குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை. மகளையும் மருமகனையும் கண்டு வருவாயாக!'' என்றனர்.

தக்கன் மெய்க்காப்பாளருடன் கயிலையை அடைந்தான். அங்குக் காவல் செய்யும் பூத கணத்தார் தக்கனை உள்ளே செல்ல விடாமல் தடுத்தனர். தக்கன், ''என்னை நீங்கள் தடுக்கக் காரணம் யாது?'' என்று கேட்டான். பூதகணத்தார், ''முன்பு நீ சிவபெருமானை இகழ்ந்தாய். உன்னுடன் பேசுவதும் தகுதியாகாது. பக்தியுடன் அப்பெருமானை வணங்குவதானால் இங்கு நில். இல்லையானால் பூவுலகிலுள்ள உன் நகரத்திற்குச் செல்வாயாக!'' என்றனர். தக்கன் மிக்க சினம் கொண்டான்.

தக்கன், ''பூதர்களே! எக்காலத்திலும் உம் இறைவனை நான் வணங்க மாட்டேன். உங்கள் இறைவன் என் மருமகன். பிரமனும், திருமாலும், மற்றத் தேவர்களும் எனக்குத் தொண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்பவர்கள். மருமகனான அந்தப் பித்தனும், அந்தச் சிறுமியும் சொல்லிய வண்ணமே அடிமைகளாகிய நீவீர் என்னைத் தடுத்தீர். உம் இறைவனை இனி எவரும் வணங்காது இகழும்படி நான் செய்வேன்'' என்று தன் நகரத்திற்குச் சென்றான்.

தக்கன் தேவர்களை அழைத்து வரச் செய்து, தனக்கு நேர்ந்த அவமானத்தைக் கூறினான். ''மகனையும் மருமகனையும் பார்க்க வலிய நான் சென்றது பிழை. என்னை மதிக்காத சிவனையும், உமையையும் நீங்கள் இன்று முதல் என்றும் வணங்கித் துதிக்க வேண்டாம். இக்கட்டளையை நீங்கள் மீறினால் உங்கள் பதவி உரிமைகளை மாற்றி விடுவேன்'' என எச்சரித்தான். தேவர்கள் தக்கன் ஏவல் வழியிலே நிற்பதாகக் கூறித் தங்கள் இருப்பிடங் கட்குச் சென்றனர்.

10. பிரமன் யாகம் செய்தல்

பிரமன் ஒருவேள்வி செய்ய விரும்பினான். தனக்கு மரணமே நேர்ந்தாலும் சிவபெருமானுக்கு முதலில் அவிர்ப்பாகம் தந்து சிவனருளைப் பெறத் துணிந்தான். திருமால் முதலிய எல்லோ ரையும் தத்தமக்குரிய அவிர்ப்பாகத்தைப் பெற்றுக் கொள்ள வேள்விக்கு வர அழைப்பு விடுத்தான். கயிலைக்கு நேரில் சென்று சிவபெருமானை வேள்விக்கு எழுந்தருள வேண்டினான். தக்கனிடம் சென்று அழைத்தான். சிவபெருமானுக்குத் தரும் அவிர்ப்பாகத்தைத் தடுக்க எண்ணித் தக்கன் தன் பரிவாரங்களுடன் வேள்விச்சாலையை அடைந்தான். பிரமன் எழுந்து வாழ்த்துக் கூறி தம் பக்கத்தில் ஓர் இருக்கையில் அன்புடன் தக்கனைஅமரச் செய்தான்.

கயிலையில் சிவபெருமான், பிரமன் செய்யும் யாகத்திற்குச் சென்றுத் தமக்குரிய அவிப்பாகத்தைப் பெற்று வரும்படி நந்தி தேவரை அனுப்பினார். நந்திதேவர் வேள்விச் சாலைக்கு வந்தார். பிரமன் விரைந்து எழுந்து வந்து அன்புடன் வணங்கி நந்தி தேவரை ஒரு மணியாசனத்தில் அமரச் செய்தார். வேள்வியைத் தொடங்கினார்.

தக்கன் வெகுண்டு, ''விடத்தை உண்டு சுடுகாட்டில் கூத்தாடும் சிவனின் அடிமையான நந்தியை வேள்விச் சாலையின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நடுவில் வீற்றிருக்கச் செய்வது தகுமோ? நீ என் தந்தை ஆதலால் உயிர் பிழைத்தாய். சிவனுக்கு அவிப்பாகம் கொடுக்காதே. திருமாலைத் தலைவராகக் கொள்'' என்றான்.

சிவநிந்தனையைக் கேட்ட நந்திதேவர் தன் செவிகளை மூடிக் கொண்டார். சிவனைத் தியானித்தார். சினத்துடன் தக்கனை நோக்கி, ''சிவபெருமானை இகழ்ந்த உன் வாயைக் கிழித்திருப்பேன். அவ்வாறே செய்வது இறைவனின் ஆணை அன்று என்று கைவிட்டேன். இனியும் சிவனை இகழ்ந்து பேசினால் உன் சிரத்தைத் துண்டிப்பேன். சிவபெருமானை முதல் என்று கொள்ளாமல் வேள்வி செய்பவர் தலை அறுபடட்டும். உன் தலை அற்று வேறோர் அற்பத் தலை உண்டாகட்டும். சூரபன்மனால் அனைவரும் துன்பம் அடைவீர்கள்'' என்று கூறிக் கயிலை சென்றார்.

பிரமன் அஞ்சி அத்துடன் வேள்வியை நிறுத்தினான். தக்கன் தேவர்களுடன் எழுந்து தன் நகரத்திற்குச் சென்றான்.

11. தக்கன் வேள்விச் சாலை அமைத்தல்

நந்திதேவரின் சாபத்திற்கு அஞ்சி, தேவர்கள் அன்று முதல் அளவற்ற காலம் வேல்விகள் செய்யவில்லை. நந்தியின் சாபத்திற்குப் பயப்படாமல் தக்கன் தான் வேள்வி செய்யப் போவதாகக் கூறினான். விசுவகன்மனை அழைத்து ஒரு சிறந்த யாகசாலை அமைக்குமாறு கட்டளையிட்டான். அவனும் கனகலம் என்னுமிடத்தில் கங்கைக் கரையில் ஒரு சிறந்த ஆயிரம் யோசனைப் பரப்புள்ள அழகிய யாகசாலை அமைத்தான். வேள்விக்குரிய சமித்துகள், இலைகள், தருப்பை, யாகப் பசுக்கள், தீக்கடைக்கோல், தானியங்கள் முதலியவற்றைக் கொண்டு வர முனிவர்களை ஏவினான். காமதேனு, சங்கநிதி, பதுமநிதி, சிந்தாமணி, கற்பகத் தருக்களை அழைத்து வேள்விக்கு வருபவர்கட்கு உணவும், மற்ற எல்லாப் பொருட்களையும் படைத்துத் தருமாறு பணித்தான். வருபவர்கட்கு உணவு அளிக்க முப்பதாயிரம் வேதியர்களை ஏற்படுத்தினான்.

சிவனைத் தவிர திருமால், பிரமன், இந்திரன், தேவர்கள், முனிவர்கள், திக்குப் பாலகர்கள், அந்தணர்கள் முதலியோருக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அழைப்பு விடுத்தான். தக்கனுக்கு அஞ்சி எல்லோரும் வந்தனர். தக்கன் தூதர்களிடம் ''நீங்கள் அழைத்தவர்களுள் வராதவர்கள் உளரோ'' என்று கேட்டான். அவர்கள் ''அகத்தியர், சனகாதியர், அத்திரி, வசிட்டர், பிருகு, ததீசி, துர்வாசர், பராசரர் முதலியோர் இங்கு வரவில்லை போலும்'' என்றனர். ''அவர்கள் நெற்றிக் கண்ணுடைய பித்தர்க்கு அன்புடையவர்கள் போலும்'' என்று கூறி ஏளனமாக நகைத்தனர்.

12. ததீசியின் வருகை

அப்போது ததீசி முனிவர் அங்கு வந்தார். அழைக்கப் பட்டதன் காரணத்தைக் கேட்டார். தக்கன் முன்னர் நிகழ்ந்தவற்றைக் கூறிச் சிவனுக்கு அவிப்பாகம் தருவதை நிறுத்தும் பழக்கத்தை உண்டாக்கத் தான் வேள்வி செய்வதாகக் கூறினான். ததீசி முனிவர் முழுமுதற் பொருளான சிவனை மறந்து செய்யும் இவ்வேள்வி நடக்காது என்று நகைத்தார். தக்கன் திருமாலுக்கும் உருத்திரர்கட்கும் அவிப்பாகம் கொடுப்பதாகக் கூறினான். சிவனை விலக்கி இவ்வாறு செய்வது தன்னைப் பெற்ற தந்தையைத் தந்தை அல்லன் என விலக்கி மற்றொருவனைத் தந்தை என்று தேடிக் கொள்வானின் தன்மையை ஒக்கும். உருத்திரன் என்ற பேர் பெற்றதனால் இவர்களைச் சிவனுக்கு ஒப்பாக நினைத்தனை போலும். இவர்கள் பலகாலம் தவம் செய்து சிவனருளால் சிவனுடைய உருவமும், பேரும் பெற்றவர்கள். நீ உய்தி பெற நினைத்தால் சிவபெருமானுக்கு அவிப்பாகம் தந்து இந்த வேள்வியைச் செய் என்றார்.

13. ததீசியின் பதில்

தக்கன் ததீசி முனிவரைப் பார்த்து ''நீர் கூறிய சிவன் பரம்பொருள் என்றால் சுடலையின் எலும்பை அணியுமோ? வெந்த சாம்பலைப் பூசுமோ? பன்றிக் கொம்பையும் ஆமை ஓட்டையும் அணிவது சிறப்போ? ஆடையின்றி நக்கனாகுமோ? புலித்தோல் எடுத்து உழலுமோ? மழுவையும் மானையும் ஏந்துமோ? பிச்சை எடுத்து உழலுமோ? பாம்புகளைப் பூணுமோ? யானைத் தோல் போர்க்குமோ? கபாலம் ஏந்துமோ? விடம் உண்ணுமோ? என இகழ்ந்துரைத்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ததீசி முனிவர், ''அறிவில்லாதவனே கேட்பாயாக! சங்கார காலத்தில் அனைத்தையும் ஒடுக்கி ஏக பரம்பொருளாய் அவர் இருப்பார். பிரமன் முதலியவர்கள் எலும்புகளைப் பூண்டார். அவர்களின் சாம்பலைப் பூசிக் கொள்வார். இது பரம்பொருள் இவரே என்றும் வாழ்வின் நிலையாமையை உணர்ந்தும் சிவனை வழிபட்டு வீடுபேறு அடைந்து உய்யும் பொருட்டுச் செய்யும் அருட் செயலாகும்.

இரணியாக்கன் இப்பூவுலகை நீரில் அழுத்தி இடர் செய்தான். தேவர்கள் வேண்ட திருமால் வராக வடிவம் எடுத்து பூமியை நீரிலிருந்தும் எடுத்து உதவினார். ஆனால் தன் ஆற்றலை நினைத்து அந்த வராகம் ஆரவாரித்துக் கடலைக் கலக்கி உலகை நடுங்கச் செய்தது. எனவே சிவமூர்த்தி அதன் கொம்பைப் பறித்து மார்பில் அணிந்து வராகத்தை அடக்கினார். பாற்கடல் கடைந்தபோது திருமால் ஆமை வடிவம் கொண்டு மந்திர கிரியைத் தாங்கினார். பின் தன் ஆற்றலை நினைத்து அகந்தை கொண்டு கடலைக் கலக்கித் துன்பம் செய்தது அவ்வாமை. எனவே சிவமூர்த்தி ஆமையை அடக்கி அதன் ஓட்டைப் பறித்து அணிந்து கொண்டார். இதுவே சிவமூர்த்தியின் ஆற்றலையும் அருளையும் அறிவிக்கும்.

மேலும் கூறுகிறேன் கேள். முன்னொரு காலத்தில் தாருகவனத்து முனிவர்கள் 'கன்மமே பயனைத் தரும். பயன்தரக் கர்த்தா வேண்டியதில்லை' என்ற பூர்வ மீமாம்சைக் கொள்கை உடையவர்களாகிச் சிவனைப் புறக்கணித்துத் தவம் செய்தனர். அவர்கட்கு அறிவு கொளுத்தத் திருமாலை மோகினியாக வரச்செய்து சிவன் திகம்பரனாகித் தாருக வனத்தில் பலியேற்கச் சென்றார். முனி பத்தினிகள் சிவன் மீது மையல் கொண்டனர். தாருக வனத்து முனிவர்கள் வெட்கிச் சிவனை அழிக்க எண்ணி அபிசார ஓமம் செய்து கொடும் புலியை உண்டாக்கிச் சிவனின் மீது ஏவினர். சிவனார் கொடும் புலியை உரித்து ஆடையாக உடுத்திக் கொண்டார். சூலத்தை உண்டாக்கி அனுப்பினர். சிவனார் ஆயுதமாக ஏந்திக் கொண்டார். மழுவையும் மானையும் ஏவச் சிவனார் செங்கைகளில் ஏந்திக் கொண்டார். பாம்புகளை ஏவ ஆபரணமாகப் பூண்டார். பூதங்களை அனுப்ப

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரிவாரங்களாகக் கொண்டார். உருத்து வந்த உடுக்கையைப் பற்றிக் கொண்டார். கொல்ல வந்த முயலகன் என்ற பூதத்தைக் கீழே தள்ளி அவன் முதுகின் மீது நடனம் புரிந்தார். பின்னர் முனிவர்களே பிழைகளை உணர்ந்து, வருநந்தி, சிவனை வழிபட்டு உய்தி பெற்றார்கள்.

தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே, கயமுகாசுரன் என்ற யானையைக் கொன்று தோலை உரித்துப் போர்த்துக் கொண்டார். பிரமனும் திருமாலும் தாமே தலைவர் எனத் தருக்குக் கொண்டுத் தமக்குள் சண்டையிட்ட போது சிவமூர்த்தி சோதி வடிவில் தோன்றினார். திருமால் சிவன் எனத் தெளிந்து வணங்கப் பிரமன் அச்சோதியை இகழ்ந்தான். சிவபெருமான் திருவுள்ளத்தால் வைரவக் கடவுளைத் தோற்றுவித்துப் பிரமனின் உச்சித் தலையை நகத்தால் கிள்ளி எறியச் செய்தார். பிரமன் இறந்தான். வைரவர் பிரமாவைப் பின் உயிர்ப்பித்தார். பிரமனின் வேண்டுகோளுக்கிணங்கவே கிள்ளப்பட்ட தலையைச் சிவமூர்த்தி கையில் தரித்தருளினார்.

திருப்பாற் கடலைக் கடைந்தபோது உண்டான ஆலால நஞ்சு கண்டு அஞ்சித் தம்மிடம் அடைக்கலம் புகுந்த தேவர்களைக் காக்கவே சிவபெருமான் நஞ்சுண்டார் என்று ததீசி முனிவர் தக்கன் இகழ்ந்துரைத்த பலவற்றுக்கும் விடை கூறி சிவபெருமானின் பெருமையையும் முழுமுதல் தன்மையையும் உணர்த்தினார்.

சிவனுக்கு மகவும் உண்டோ என்று கேட்ட தக்கனுக்குத் ததீசி முனிவர் சக்தியும் சிவமுமாய் ஒரு மைந்தர் அருளிய வரலாற்றைக் கூறத் தொடங்கினார்.

14. கயமுகன் உற்பத்தி

முன்னொரு காலத்தில் இந்திரன் போரில் அசுரர்களைக் கொன்று அசுரேந்திரனை வென்று தேவலோகத்தை ஆட்சி புரிந்து கொண்டிருந்தான். அசுரவேந்தன் அல்லல்பட்டுச் சுக்கிராச்சாரி யாரைப் பணிந்து முறையிட்டான். அவர் ஓர் அசுர கன்னிகையைத் தவம் செய்து கொண்டிருக்கும் வசிட்ட முனிவரிடம் அனுப்பி அசுரகுலம் தழைக்க மகன் பெற ஆலோசனை கூறினார். அசுர வேந்தன் விபுதை என்ற அழகிய கன்னிகையை அனுப்பினான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவள் வசிட்டரின் தவம் கண்டு திகைத்தாள். இவரிடத்து மோகத்தை உண்டு பண்ணுவது இயலாத செயல் என அறிந்த விபுதை, முனிவர் முன் அமர்ந்து தவம் செய்யத் தொடங்கினாள்.

அசுர குலப் பெண்ணான விபுதை செய்யும் தவத்தாலும், ஊழ் வயத்தாலும் ஒரு சமயம் ஆண்யானை ஒன்று பெண் யானையைப் புணர்ந்தது முனிவர் முன்னால். இக்காட்சியைக் கண்ட முனிவருக்கு ஆசை உண்டாயிற்று. இதுதான் தக்க தருணம் என்று விபுதை முனிவர் முன் சென்று வணங்கினாள். அவளைப் பெண் யானை ஆகுமாறு செய்து, முனிவர் ஆண் யானையாகிச் சேர்ந்தார். கயமுகாசுரன் பிறந்தான். அவனுடைய உரோமங்களில் பல அரக்கர்கள் தோன்றினார்கள். முனிவர் தன் பிழைக்கு வருந்தினார். அசுரேந்திரன் மகிழ்ந்தான்.

கயமுகாசுரனும் அவனுடைய சேனைகளும் உலகை நடுங்க வைத்தனர். சுக்கிராச்சாரியார் கயமுகாசுரனைத் தேவர்களை வெல்ல மேலும் வலிமை பெறச் சிவனை நினைத்துத் தவம் செய்யக் கூறினார். அவனும் ஐம்புலன்களை அடக்கி, காமம், வெகுளி, மயக்கம் என்ற குற்றங்களை ஒழித்துச் சிவபெருமானை நினைத்துத் தவம் செய்தான். ஆயிரம் ஆண்டு புல்லையும் கீரையையும் தின்றான். ஆயிரம் ஆண்டு நீரை மட்டும் குடித்தான். ஆயிரம் ஆண்டு காற்றையே உணவாகக் கொண்டான். பின் யோக நூல்படி, மூலாக்கினியை எழச் செய்து புருவ மத்தியில் பொருந்திய அமிழ்தத்தை உண்ணலானான்.

சிவபெருமான் காட்சி தந்து "வேண்டும் வரம் யாது?" என்று கேட்டார். கயமுகன், "தேவர்கள் என்னிடம் தோல்வியுற வேண்டும். ஆயுதங்களால், தேவர்களால், மக்களால், அசுரர்களால், விலங்குகளால் இறவாதிருக்க வரம் வேண்டும். அகில உலகமும் என் ஆணை செல்ல வேண்டும். ஒருவேளை சூழ்ச்சியால் இறந்தாலும் இனி ஒரு பிறவியுள் புகாதிருக்க அருள வேண்டும்" என்றான். எம்பிரான் அவன் விரும்பிய அனைத்தையும் தந்து சென்றார். சுக்கிராச்சாரியாரும், அசுரேந்திரனும் அவனுக்கு ஆசி கூறினர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கயமுகன் தேவதச்சனைக் கொண்டு மதங்கபுரி என்ற அழகிய நகரை அமைக்கச் செய்தான். அசுரர்களும் அமரர்களும் வணங்க ஆட்சி புரிந்தான். அசுரேந்திரனின் புதல்வி விசித்திர காந்தியைத் திருமணம் செய்து கொண்டான். தேவர்களை அழைத்து ''நீங்கள் என்முன் தினம் சிரசில் மூன்றுமுறை குட்டிக் கொண்டு, இரு செவிகளைக் கரங்களால் மாறிப் பற்றி உட்கார்ந்து எழுந்து தோப்புக் கரணம் போட வேண்டும்'' என்றான். தேவர்களும் அவ்வாறே தோப்புக் கரணம் போட்டு உடலும் உள்ளமும் வருந்தினர்.

சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். சிவன், ''வருந்தாதீர்கள். ஒரு புதல்வனைத் தந்து உங்கள் துயர் களைவோம்'' என்றார். இறைவனும் இறைவியும் கயிலையில் சோலை நடுவிலுள்ள மந்திர சித்திர மண்டபத்துள் நுறழந்தனர். அங்கு மந்திர ஓவியங்கட்கிடையே இருந்த சமட்டி பிரணவம் வியட்டி பிரணவ மந்திரங்களை அருளுடன் நோக்கினர். அவை யானை வடிவுடன் கூடின. பிரணவ வடிவ விநாயகப் பெருமான் அவதரித்தார். தாய் தந்தையை வணங்கினார். சிவபெருமான் மகிழ்ந்து, ''ஒரு செயலைத் தொடங்கும் முன் ஒருவர் உன்னை வணங்கினால் அச்செயலை முடித்து வைப்பாயாக!'' என அருள் புரிந்தார்.

விநாயகப் பெருமானின் திருஅவதாரத்தை அறிந்த தேவர்கள் அவரிடம் சென்று தங்கள் துயர் தீர்க்க வேண்டினர். விநாயகர் அசலன் என்ற பூதத்தின் மீதேறி கயமுகனுடன் போர் செய்யப் புறப்பட்டார். கடும்போர் நடந்தது. இறுதியில் விநாயகர் தம் திருமுகத்திலுள்ள தந்தத்தை முறித்துச் சிவ மந்திரத்தைக் கூறிக் கயமுகன் மீது ஏவினார். அஃது அவன் மார்பைப் பிளந்தது. இரத்தம் பெருகியது. அந்த இடம் திருச்செங்காடு என்று பெயர் பெற்றது. இறவா வரம் பெற்ற கயமுகன் பெருச்சாளி வடிவில் எதிர்த்து வந்தான். விநாயகர் அதை வாகனமாக்கி அருள் புரிந்தார். திருச்செங்காட்டில் விநாயகர் சிவலிங்கம் தாபித்து வழிபட்டார். அது 'கணபதீச்சுரம்' எனப் பெயர் பெற்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

15. அனந்தன் சாபம் நீங்குதல்

விநாயகர் கணபதீச்சுரத்தை விட்டு ஆலங்காடு வந்தார். அங்கு அம்மையின் சாபத்தினால் ஓர் ஆலமரப் பொந்தில் பாம்பு வடிவத்துடன் தவம் செய்து கொண்டிருந்த திருமால் அவரை வணங்கினார். சாபம் நீங்கிச் சங்கு, சக்கரம், தண்டு, வில், வாள் என்ற ஐம்படைகள் ஏந்திய பழைய திருவுருவத்தைப் பெற்றார். விநாயகரைத் திருமஞ்சன நீராட்டி, மலரிட்டுத் தூபம் தீபம் காட்டி வழிபட்டார். அவ்வாறு வழிபட்ட நாள் மார்கழி மாத பூர்வபட்ச சஷ்டியாகும்.

தேவர்கள் விநாயகரை வணங்கி, ''இத்தனை காலம் கயமுகனுக்கு இட்டது போல் உமக்கு எதிரில் யாம் தோப்புக் கரணம் இடுவோம்'' என்றனர். விநாயகர் ''அவ்வாறே செய்யுங்கள்'' என்று அருள் புரிந்தார். தேவர்கள், ''எம்மைப் போல் இம்முறையில் உம்மை வழிபடுபவர்கட்கு நலன்கள் பல அருள்வீர்'' என்று வேண்டி விடை பெற்றனர். இதுவே சிவகுமாரரான விநாயகரின் அவதாரம் என்று ததீசி கூறினார்.

சிவனுக்கு தாமத குணம் உண்டு என்றாய், அதற்கு மறுமொழி கூறுவோம். ''சிவபெருமான் சாத்வீகம், இராசதம், தாமதம் என்ற முக்குணங்களும் இல்லாத நிர்க்குணர். அத்தகைய பரம்பொருளின் பெருமைகளை முக்குண வயத்தரான எம்போன்றவரால் சொல்ல முடியுமா? நீ அவரை வழிபட்டு உய்யும் வழியைப் பார்'' என்றார். ததீசி முனிவரின் அறிவுரைகளைக் கேட்ட தக்கன், ''உம் சிவன் பெருமை மிக்க எல்லாம் வல்ல இறைவனே ஆனாலும் ஆகட்டும். அந்தச் சிவனுக்கு நான் வேள்வியின் அவியை அளிக்க மாட்டேன்'' என்றான். அனைவருக்கும் பல சாபங்களை விட்டுத் தம் ஆசிரமத்திற்குத் ததீசி முனிவர் சென்றார்.

16. தானம் செய்தல்

ததீசி முனிவர் சென்றதும் வேள்விச் சாலையில் கட்டிய கொடிகள் அறுந்து விழுந்தன. காக்கைகளும் கழுகுகளும் வேள்வித் தூணைச் சூழ்ந்தன. வேதவல்லியின் திருமங்கல நாண் தானே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அறுந்து விழுந்தது. இத்தகைய கெட்ட சகுனங்கள் பல நிகழ்ந்தன. தக்கன் சிறிதும் அஞ்சவில்லை. தன் தந்தையான பிரமனையும் திருமாலையும் உபசார வார்த்தைகள் சொல்லித் தக்கவாறு முதலில் பூசை செய்தான். வேள்வியைத் தொடங்கினான்.

காமதேனு ஒரு பொன் மண்டபத்தில் வெள்ளிமலை போல் அன்னத்தை உண்டாக்கியது. மற்ற அன்ன வகைகள், கறியமுதுகள், பிட்டு, தோசை, அப்பம் போன்ற பட்சணங்கள், பழங்கள் குவிக்கப்பெற்றன. பால், தயிர், நெய் வழங்கிற்று. பச்சைக் கற்பூரம், கத்தூரி, சந்தனம், பனிநீர், வெற்றிலை, பாக்கு மலர்கள் முதலியவற்றை நிரம்ப உண்டாக்கி வைத்தது.

சிந்தாமணியும் சங்க நிதியும் பதும நிதியும் கற்பகமும் அங்கு வந்து பொன், நவரத்தினங்கள், பொன்னாடைகளைக் குவித்தன. அன்னசாலையிலும்,தான சாலையிலும் உள்ளவற்றை அறிந்த முப்புரி நூலினராகிய அந்தணர்கள் விரைந்து அன்ன சாலைக்குச் சென்றனர். தக்கனை வாழ்த்தினர். பொன் தட்டுகளில் உணவுகள் பரிமாறி அவர்களை முனிவர்கள் நன்கு உபசரித்தனர். உண்டவர்க்கு ஒருபுறம் சந்தனம், தாம்பூலம் வழங்கப்பட்டன. பொன்னாடைகள், ஆபரணங்கள், பொன் பாதுகைகள், குடைகள், கமண்டலங்கள், பசுக்கள் மற்றும் அந்தணர்கள் விரும்பியவற்றை விரும்பியவற்றை விரும்பிய வண்ணமே உள்ளங்கை சிவக்க முனிவர்கள் தானம் அளித்தனர்.

17. வேள்வி தொடங்குதல்

தக்கன் யாகம் புரியும் புரோகிதர்களைப் பார்த்து காருகபத்தியம், ஆகவனீயம், தக்கிணாக்கினி என்ற மூவகைத் தீகளை வளர்க்கக் கூறினான். புரோகிதர்கள் தீக்கடைக்கோலால் வேத விதிப்படி வேள்வித் தீயை வளர்த்தனர். யாகத்தில் சிவ மந்திரங்களை ஒழித்து, ஏனைய தேவதைகளுக்குரிய மந்திரங் களைக் கூறி அத்தேவதைகளை அழைத்தனர். அவி உணவை அளித்தனர். சிவபெருமான் அவி உணவு உண்ணாது தாம் உண்பதால், தேவர்கட்கு அவி உணவு நஞ்சைப் போல் விளங்கியது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

18. உமை வேள்விக்கு வருதல்

தக்கன் வேள்வி பற்றி நாரதர் சிவபெருமானுக்குக் கூறினார். உமாதேவி தந்தை செய்யும் யாகத்திற்குப் போக விரும்பிச் சிவபெருமானிடம் அனுமதிகேட்டாள். சிவபெருமான் தக்கனின் இயல்புகளைக் கூறி யாகத்திற்குப் போக வேண்டாம் என்று தடுத்தார். ஆயினும் உமாதேவியின் விருப்பத்தையுணர்ந்து விடை கொடுத்தருளினார். உமாதேவி அவரை வணங்கி ஒரு விமானத்தில் ஏறினாள். சுமாலி, மாலினி என்னும் பெண்கள் சந்திரவட்டக் குடைகளை ஏந்தி உடன் சென்றனர். மங்கலை, சுமனை சாமரங்களை வீசினர். நந்திதேவரின் மனைவி சுகேசை பாதுகையைத் தாங்கிச் சென்றாள். கமலினி அநிந்திதை என்ற பெண்கள் பூமாலைகளை ஏந்திச் சென்றனர். நறுமணப் பொருட்களையும் விலை மதிக்க முடியாத ஆடைகளும் ஆபரணங்களும் அடங்கிய பெட்டிகளைச் சுமந்து கொண்டு பெண்கள் பலர் உமாதேவியின் பின் சென்றனர். பூந்தட்டு, வெற்றிலைப்பை, கண்ணாடி, பூமாலை போன்ற வரிசைப் பொருட்களை ஏந்திப் பெண்கள் பலர் விமானத்தில் சென்றனர். உமாதேவி தக்கனின் வேள்விச் சாலையை அடைந்தார்.

தக்கன் கோபத்துடன், ''தாய் தந்தை இல்லாமல் தான் எண்ணியபடி நடக்கும் பித்தனின் மனைவியான நீ ஏன் இங்கு வந்தாய். நான் உன்னை அழைக்கவில்லைய. அழையாத இடத்துக்கு நீ வரலாமா? உன் மலைக்குத் திரும்பிப் போ'' என்றான். உமாதேவி, ''ஏன் தந்தையருக்குத் தக்க சிறப்புக்களை நீ வேள்வியில் செய்து உறவு முறை பாராட்டினாய். மருமகனும் மகளுமான எங்களை நீ சிறிதும் நினைக்கவில்லை. வலிய வந்த என்னையும் சினத்துடன் விரட்டுவது குற்றம்'' என்றாள். தக்கன் சிவனை இகழ்ந்து பேசினான்.

உமாதேவி, ''நீ என்னை இகழ்ந்து பேசியதைப் பொருட் படுத்த மாட்டேன். ஆனால் என் நாயகரை இகழ்ந்ததைப் பொறுத்துக் கொள்ள மாட்டேன். உயிர்கள் இறந்தும், பிறந்தும் ஓய்வில்லாமல் காற்றாடி போல் உழன்று வருந்தாமலிருக்க அழித்தலைச் செய்த இறைவன் இளைப்பாற்றுதலைச் செய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கின்றான். ஆதலால் அழித்தல் தொழில் அருட் செயலே ஆகும். அழித்தலைச் செய்யும் அவரே மீண்டும் படைத்துக் காக்கும் இயல்புடையவர். திருமாலும், பிரமனும் தேடியும் காணாத ஒப்பற்ற பரம்பொருளை இகழும் சிவத்துரோகியர் கட்குத் தவறாது தண்டனை கிடைக்கும் என்று வேதங்கள் அறுதியிட்டுக் கூறும். சிவனை விலக்கி யாகம் செய்யும் உனக்கும் ஏற்ற தண்டனை கிடைப்பதாக'' என்று சாபமிட்டார். கயிலைக்குத் திரும்பினார். சிவனை நோக்கி. ''என் தலைவரே! தாங்கள் விருப்பு வெறுப்பு இல்லாதவராயினும், தங்களிடம் அன்புடைய என் பொருட்டு அத்தக்கனின் வேள்வியை அழிக்க வேண்டும்'' என்று கூறித் துதித்தாள்.

19. வீரபத்திரர் தோன்றுதல்

சிவபெருமான் தக்கன் வேள்வி அழியத் திருவுளம் கொண்டார். அவருடைய நெற்றிக் கண்ணிலிருந்து ஆயிரம் தலைகளும், இரண்டாயிரம் கைகளும் உடைய வீரபத்திரக் கடவுள் தோன்றினார். உமையம்மையின் கோபக் கனலிலிருந்து பத்திரகாளி தோன்றினாள். சிவபெருமான், ''மகனே! எம்மை விலக்கித் தக்கன் வேள்வி செய்கின்றான். நீ அங்கு சென்று நமது அவிப்பாகத்தைக் கேள். அவன் நல்லுணர்வு பெற்று நல்கினால் இங்கு வருக. இல்லையேல் அவன் தலையை அறுத்து யாகத்தை அழிப்பாயாக'' என்று கட்டளையிட்டார்.

வீரபத்திரரின் மூச்சுக் காற்றிலிருந்தும், வியர்வையிலிருந்தும் பல வீரர்கள் தோன்றினர். பத்திரகாளியும் பல்லாயிரம் காளிகளைப் படைத்தார். அனைவரும் தக்கனின் வேள்விச் சாலையை அடைந்தனர். வீரபத்திரர் தம் சேனைத் தலைவனைப் பார்த்து, ''வேள்விச் சாலையினின்று ஒருவரும் வெளியேறா வண்ணம் காவல் புரிக'' என்றார். சாலையைச் சுற்றி வீரபத்திரரின் வீரர்கள் சூழ்ந்தனர். தம்மை எதிர்த்த தக்கனின் படைகளைக் கொன்றனர்.

20. யாக சங்காரம்

வீரபத்திரர் பத்ரகாளியுடன் யாக சாலையுள் நுழைந்தார். தேவர்கள் அஞ்சி நடுங்கினர். வீரபத்திரர் வேள்வியைக் கண்டார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோபம் கொண்டார். சங்கெடுத்து ஊதினார். மேருமலை பிளந்தது. பூமி வெடித்தது. அண்டங்கள் இடிந்தன. தக்கன் வீரபத்திரரிடம், ''நீ யார்? வந்த காரணம் யாது?'' என வினவினான். வீரபத்திரர், ''நான் சிவ குமாரன். உன் வேள்வியில் சிவனுக்குரிய அவிப்பாகத்தைப் பெற வந்தேன். தருக'' என்றான். தக்கன், ''உங்கள் சிவபெருமானுக்கு வேள்வியில் அவியை உலகம் இனித் தராது'' என்றான். வீரபத்திரர், ''வேள்விக்கு அதிபதி ஒப்பில்லாத சிவனே எனவே அவியைக் கொடு'' என்று கூறினார்.

தக்கன், ''சுடுகாட்டில் கூத்தாடும் பித்தனுக்கு அவியைத் தர மாட்டேன்'' என்றான். ''தக்கன சிவனை இகழ்வது உங்களுக்கும் சம்மதமே போலும்'' என்று வீரபத்திரர் தேவர்களைச் சாடினார். அவர்கள் ஊமையர் போல் நின்றனர்.

வீரபத்திரர் கதாயுதத்தால் திருமாலின் மார்பில் அடித்தார். திருமால் மயங்கி விழுந்தார். பிரமனின் தலையில் குட்டினார். கலைமகள் முதலிய தேவ மங்கையர்களின் மூக்கையும் மார்பையும் தம் வாளால் கொய்தார். சந்திரனின் உடல் சிதையுமாறு நிலத்தில் தேய்த்தார். சூரியனின் பற்கள் உதிரும்படிக் கன்னத்தில் அடித்தார். பகனுடைய கண்களைப் பறித்தார். யமனுடைய தலையை வெட்டினார். அக்கினியின் ஏழு நாக்குகளை அறுத்தார். அக்கினியின் மனைவியான சுவாகா தேவியின் மூக்கை நகத்தால் கிள்ளி எறிந்தார். நிருதியைத் தண்டினால் அடித்து மாய்த்தார். உருத்திரர்கள் திருவடிகளில் வீழ்ந்து வணங்கியதால் போகும் வழியைக் காட்டி ஓடச் செய்தார். வருணனையும் வாயுவையும் குபேரனையும் கொன்றார். ஈசானர் வணங்கி உருத்திரர் ஓடிய வழியில் ஓடினார். அசுரேந்திரனை வாளால் வெட்டினார். வேள்வியின் அதிதேவதை யான எச்சனின் தலையைத் துண்டித்தார்.

தக்கன், ''வரங்கள் பல தந்த சிவனை மறந்தேன். தந்தை பிரமன் செய்த வேள்வியிலும் சிவனுக்கு அவி கொடுக்கக் கூடாது என்று தடை செய்தேன். வேத நெறியை மறத்து இவ்வேள்வியைச் செய்தேன். தந்தையேயன்ன ததீசி முனிவரின் அறிவுரையையும் ஏற்காது நிந்தித்தேன். வீரபத்திரர் கேட்டும் அவியைத் தர மறுத்தேன். விதி வழி மதி சென்றது போலும்'' என மனத்திற்குள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொல்லிக் கொண்டான். வீரபத்திரன் அவன் தலையை வாளால் வெட்டி வேள்வித் தீயில் போட்டார். பத்ரகாளி வேதவல்லியின் காதுகளை அறுத்தாள். தக்கனின் பெண்களின் தலையைத் தடிந்து பந்து போல் வீசினாள். காளியும், வீரபத்திரரும் தேவர்களையும் முனிவர்களையும் வெட்டி வீழ்த்தினர்.

திருமால் அயர்ச்சி நீங்கி எழுந்தார். வீரபத்திரருடன் போரிட முனைந்தார். சிவனருளால் ஒரு பெரிய தேர் வீரபத்திரர் அருகில் வந்தது. பிரமன் உயிர் பிழைக்க விரும்பி அத்தேரில் சாரதியாய் அமர்ந்தார். போர் நடந்தது. திருமால் ஏவிய சக்ராயுதத்தை வீரபத்திரர் விழுங்கினார். போரில் தோல்வியுற்ற திருமால் தன்னை மன்னித்தருள வீரபத்திரர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். ''நீர் எங்களைத் தண்டித்து முறை செய்ததால் புனிதமடைந்தோம்'' என்று தொழுதார்.

சிவபெருமான் உமையம்மையுடன் அங்கு எழுந்தருளினார். இறந்தவர்களை உயிர்ப்பித்தருளச் சிவனிடம் உமை வேண்டினாள். சிவனின் ஆணைக்கிணங்க வீரபத்திரர் அனைவரையும் உயிர்த்தெழச் செய்தார். தக்கன் மட்டும் உயிர் பெற்று எழவில்லை. தக்கனை உயிர்ப்பிக்குமாறு சிவனைப் பிரமன் வேண்டினான். தலையை இழந்த தக்கனின் உடலைக் கொண்டு வர வீரபத்திரர் பணித்தார். தக்கனின் உடல் கொண்டு வரப்பட்டது. வீரபத்திரர் தக்கனுக்கு யாகத்தில் மாண்டிருந்த ஓர் ஆட்டுத் தலையைப் பொருத்தினார் அசமுகனான தக்கன் சிவனைப் பிழை பொறுத்தருள வேண்டினான். (அசமுகன்-ஆட்டின் முகம் உடையவன்) சிவபெருமானை முதல்வனாக நினையாது செய்யப்படும் வேள்வி முதலியன புண்ணியமாகாது பாவமாகும் என்பது யாக சங்காரத்தால் உணர்த்தப்படும்.

உமாதேவி வீரபத்திரரையும் பத்திரகாளியையும் கணவன், மனைவியாக வாழ ஆசி கூறினாள். சிவபெருமான் தேவர்களை நோக்கி, ''உங்களைத் தண்டித்தது நீங்கள் வினை நீக்கம் பெறும் பொருட்டேயாகும்.எனவே வெட்கப்பட்டு இரங்க வேண்டாம்'' என்று கூறி அனைவருக்கும் அருள்புரிந்து கயிலையை அடைந்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வீரபத்திரக் கடவுளுக்கு மேலுலகத்தில் ஒரு புவனம் தந்தார். வீரபத்திரக் கடவுள் அப்புவனத்தில் பூதர்கள் சூழத் தன் துணைவியாருடன் அரியணையில் அமர்ந்தருளினார்.

21. அடிமுடி தேடுதல்

பிரமன் தக்கனை நோக்கி, ''நீ சிவனை நினைத்துத் தவம் செய்து பெற்ற சிறப்புக்களையெல்லாம் தொலைத்தாய். ஊழ்வினைப் பயனால் அப்பெருமானை இகழ்ந்தாய். செல்வம் வந்த போது இறைவனை மறத்தல் உன்னிடம் மட்டுமல்லாமல் உலகோர் யாவரிடமும் அமைந்துள்ள குற்றமாகும். முன்னொரு காலத்தில் எனக்கும் திருமாலுக்கும் கூட மயக்கம் உண்டாயிற்று. சிவபெருமான் இன்று போல் அன்றும் எம் மயக்கத்தைப் போக்கி அருள் செய்தார். அப்பெருமானின் திருவடிகளை அன்புடன் அருச்சனை செய். அவர் பிறவித் துயரை நீக்கி ஞானத்துடன் கூடிய இன்னருள் புரிவார்'' என்றார்.

தக்கன், ''தந்தையே! நான் உய்யும் திறத்தை எனக்கு உணர்த்தினாய், முன்பு தங்கட்கும், திருமாலுக்கும் உண்டான மயக்கத்தை எம்பெருமான் தீர்த்து அருள் செய்ததைச் சொல்லுக'' என வேண்டினான். பிரமன் சொல்லத் தொடங்கினான்.

முன்பு நானும் திருமாலும் தாம் தாம் பிரமம் என்று சண்டையிட்டோம். அப்போது நாரதர் தோன்றி, ''சிவப்படையை உங்கட்கு அளித்த இறைவனை மறந்தீர். சிவநாமத்தைச் சிந்தித்து அறிவு தெளிவடையுங்கள். இனிப் போரை நிறுத்துங்கள். மேலும் வாதித்து நீங்கள் போரிட்டால் ஆதியாய் அருவும், உருவும் அருவுருவுமான ஒரு பரம்பொருள் உங்கள் நடுவே ஒரு பேரொளி வடிவமாகத் தோன்றும். அதன் அடிமுடிகளைக் காண உங்களால் இயலுமேல் முயலுங்கள்'' என்று கூறிச் சென்றார்.

நாரத முனிவர் கூறியதைக் கேளாமல் நாங்கள் ஆயிரம் ஆண்டுகள் போரிட்டோம். எங்களின் அறியாமையையும் ஆணவத்தையும் போக்க சிவபெருமான் எண்ணினார். மாசி மாதம் அமாவாசை நாளுக்கு முதல் நாளான சதுர்த்தசி நாளில் நள்ளிரவில் எங்கள் இரண்டும் பேருக்கும் நடுவில் தீ மலையாகத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தோன்றினார். அப்பொழுது ஆகாயத்திலிருந்து ஓர் ஒலி கேட்டது. ''சிறுவர்களே! உங்களுடைய வலிமையைச் சிவன் காண்பார். இப்பேரொளியின் அடியையும் முடியையும் காணுங்கள்'' என்று அந்த ஒலி அறிவித்தது.

ஆணவத்தின் உச்சியிலிருந்த நாங்கள் இருவரும் சிவனின் அடி முடிகளில் ஒன்றைக் கண்டவரே முதற்கடவுளாவர் என்று உறுதி செய்து கொண்டோம். நான் அன்னப்பறவை வடிவம் கொண்டு முடி தேடி மேலுலகம் பறந்தேன். திருமால் பன்றி உருவம் எடுத்து அடிதேடிக் கீழுலகம் சென்றார். ஆண்டுகள் பல ஆகியும் முடியையும் அடியையும் காண இயலவில்லை.

எங்கள் ஆணவம் நீங்கியது. சிவலிங்க வழிபாடு செய்யத் தொடங்கினோம். சிவன் காட்சி தந்தார். ''இரும்பை இரசவாதத்தில் வல்லவர் பொன்னாக்கிய தன்மை போல, ஒன்றுக்கும் பற்றாத எங்களுக்கும் அருள் செய்து எம் தொழில் தலைமையையும் தந்தருளினீர். நன்மை செய்த தங்களை மறந்தோம்'' என்று கூறித் துதித்தோம். சிவபெருமான், ''நீங்கள் நடந்தவற்றை நினைக்க வேண்டாம் நீங்கள் செய்த சிவபூசையை ஏற்று மகிழ்ந்தோம். வேண்டும் வரம் யாது'' எனக் கேட்டார். அப்பெருமானிடத்து அன்பு ஒன்றையே வேண்டினோம். அவரும் அருள் புரிந்தார். ஒளி வடிவான பெரிய உருவம் மலையாகச் சுருங்கித் திருவண்ணாமலை எனப்பட்டது என்று கூறிய பிரமன், ''மகனே! ஒளி வடிவாகச் சிவபெருமான் உருவெடுத்த இரவையே சிவராத்திரி என்று கூறுவர். அவரை அன்று வழிபடுவோர் வீடுபேறடைவர்.

வல்வினைகள் செய்து பிறவிக் கடலில் மூழ்கும் பக்குவமில்லாதவர்கட்கு அப்பெருமானின் அருள் கிட்டாது. இருவினையொப்பு, மலபரிபாகம் உற்றவர்கட்கே அப் பெருமானின் அருள் கிட்டும். அவர்கள் சத்திநிபாதர்கள் ஆவர். நீயும் தொல்வினை நீங்கி ஞான உணர்வு பெற்றாய். அந்த இறைவனே நமக்குத் தாயும், தந்தையும், குருவும், தவமும் செல்வமும் ஆவார். அவரை வழிபட்டு உய்க'' என்று பிரமன் தக்கனுக்குக் கூறிச் சென்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

22. தக்கன் சிவபூசை செய்தல்

பிரமன் கூறியதைக் கேட்ட தக்கன் காசிக்குச் சென்று கங்கையில் மூழ்கினான். மணிகர்ணிகை என்னுமிடத்தில் ஓராலயம் அமைத்தான். அதில் ஒரு சிவலிங்கத்தை எழுந்தருளப் பண்ணி ஆயிரம் ஆண்டுகள் அன்புடன் வழிபாடு செய்தான்.

சிவபெருமான் காட்சி தந்தருளினார். அவரை வணங்கி, பெருமானே! அகந்தையால் உம்மை இகழ்ந்தேன். என் பிழைகளைப் பொறுத்து அருள் புரியும்'' என்று வேண்டினான். சிவபெருமான் தக்கனுக்கு அருள் புரிந்து தன் பூதக் கூட்டங்கட்குத் தலைவன் ஆக்கினார். திருமால், பிரமன், இந்திரன் உள்ளிட்ட பிற தேவர்கள் தலங்கள் தோறும் சென்று சிவபெருமானை வழிபட்டுத் தம் உடலிருந்த வடுக்கள் நீங்கப் பெற்றனர். தத்தம் இருப்பிடம் சென்றனர்.

இவ்வாறு வியாழ பகவான் பழைய வரலாறுகளை இந்திரனின் மகனான சயந்தனுக்குக் கூறினார். சயந்தன் கேட்டு மகிழ்ந்தான்.

23. கந்த விரதம்

கருவூரை முசுகுந்தச் சக்கரவர்த்தி ஆண்டு வந்தார். அவர் ஒருநாள் வசிட்ட முனிவரிடம் கந்தவேளுக்குரிய விரதர்களைக் கூறும்படிக் கேட்டார். அவர் அவற்றைக் கூறலானார். வார விரதங்களில் வெள்ளிக்கிழமை விரதம் சிறந்தது. சுக்கிராச்சாரியார் கூறியபடி அவ்விரதம் இருந்து பகீரதன் என்னும் மன்னன் கோரன் என்னும் அரக்கனிடம் இழந்த அரசை மீண்டும் பெற்றான்.

ஒருசமயம் நாரதர் விநாயகரிடம் வந்து தான் சப்த ரிஷிக்களை விட மேலான பதம் பெற யாது செய்ய வேண்டும் என்று கேட்டார். விநாயகர் முருகனுக்குரிய கார்த்திகை விரதம் இருக்கும்படிக் கூறினார். அவர் பரணி நாளில் ஒரு பொழுது உண்டு, கார்த்திகை நாள் காலையில் நீராடி, தூய வெள்ளை ஆடை உடுத்தி முருகப் பெருமானை அர்ச்சித்து வழிபட்டு முருகன் புகழைக் கேட்டார். இரவு முழுவதும் தியானித்தார். மறுநாள் ரோகிணி நாளில் நீராடி முருகப் பெருமானை வழிபட்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முனிவர்களுடன் உணவு உண்டார். இவ்வாறு பன்னிரண்டு ஆண்டுகள் கார்த்திகை விரதமிருந்து நாரதர் சப்த முனிவர்கட்கும் மேலான பதத்தை அடைந்தார்.

இந்த கார்த்திகை விரதத்தை ஒரு அந்தணன் மேற்கொண்டு மனுச் சக்கரவர்த்தியாகி உலகம் முழுவதையும் அரசாண்டான். வேறோர் அந்தணன் இந்த விரதம் மேற்கொண்டு அரிச்சந்திரனின் தந்தையான திரிசங்கு என்னும் பேரரசனாகி ஆட்சி புரிந்தான. ஓர் அரசனும் வேடனும் இவ்விரதத்தை மேற்கொண்டு வள்ளன்மையுடைய அந்திமான். சந்திமான் என்ற பெயர்களை யுடையவர்களாய் ஆண்டனர்.

முருகனுக்குரிய விரதங்களுள் சஷ்டி விரதமும் ஒன்று. ஐப்பசி மாதம் வளர்பிறைப் பிரதமை முதல் ஆறுநாட்கள் காலையில் நீராடி விதப்படி பூசை செய்து முருகப்பெருமானை வழிபட வேண்டும். கந்த புராணத்தையும் முருகனுக்குரிய புகழ் நூல்களையும் படிக்க வேண்டும். தினம் தண்ணீர் மட்டும் அருந்தி உண்ணாதிருக்க வேண்டும். ஏழாம் நாள் முருகப் பெருமானைச் சிறப்பாக வழிபட வேண்டும். பின் பாரணை செய்ய வேண்டும். இதுவே ஒப்பில்லாத விரதம். கிரௌஞ்ச மலையுடன் தாரகாசுரனைக் கொன்ற ஒப்பில்லாத வேலையுடைய முருகப் பெருமானைத் தேவர்களும், முனிவர்களும் இந்த விரதத்தை ஆறு நாட்கள் மேற்கொண்டு முருகவேளை முறைப்படித் தம்பம், பிம்பம், கும்பத்தில் பூசித்துத் தத்தம் பதத்தின் தலைமையை மீண்டும் பெற்றனர் என்று கந்தவேள் விரதங்களை வசிட்டர் உபதேசித்தார்.

முசுகுந்தன் நெடுங்காலம் அவ்விரதங்களைக் கடைப்பிடித்து வந்தான். முருகப்பெருமான் காட்சி தந்தருளினார். முசுகுந்தன் உலகம் முழுவதையும் அரசாளும் வண்ணம் வீரவாகு முதலிய ஒன்பது வீரர்களையும் தனக்குத் துணைவர்களாகத் தந்தருள வரம் வேண்டினான். முருகப் பெருமானும் அவ்வாறே அருளினார். நவவீரர்கள் சற்றுத் தயங்கினர்.

முருகப் பெருமான் தன் கட்டளையை மறுத்த அவர்களை மண்ணுலகில் மனிதர்களாய்ப் பிறந்து முசுகுந்த மன்னனின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

படைகளாய் அவனைப் புறம் காத்துப் பலகாலம் இருக்கும் படியும் பின் தவம் செய்து தம்மிடம் வரும்படியும் பணித்தார். ஒரு சமயம் முசுகுந்தன் விண்ணுலகம் சென்று இந்திரனுக்குச் சேனாபதியாகி வலன் என்னும் அசுரனை அழிக்கத் துணை புரிந்தான். அவ்வமயம் அங்கு இந்திரன் பூசை செய்து வந்த சோமாஸ்கந்த மூர்த்தியைக் கண்டு முசுகுந்தன் பரவசமானான். ''ஏகனே வணக்கம். அம்மை பாகனே வணக்கம். விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்ற மூவகை உயிர்கட்கும் உயிராய் இருப்பவரே வணக்கம். பதிஞானம் பெற்று உம்மை உணர்ந்த ஞானியர்கட்கு முக்தியை அளிப்பவரே வணக்கம் முப்பத்தாறு தத்துவங்கட்கு மேலானவரே வணக்கம்'' என்று பலவாறு துதித்தான்.

சிவபெருமான் அருள் செய்து. ''திருமால் அளவற்ற காலம் மகிழ்வுடன் வழிபாடு செய்து நம்மை இந்திரனிடம் கொடுத்தான். முசுகுந்த மன்னனே, நம்மை மண்ணுலகத்திற்குக் கொண்டு சென்று வழிபாடு ஆற்றுவாயாக'' என்று இந்திரன் கேளாதவாறு கூறி அருளினார். இந்திரன் முசுகுந்தனுக்கு விருந்தளித்து ஆடைகளையும் ஆபரணங்களையும் ஆயுதங் களையும் அளித்து இன்னும் வேண்டுவனவற்றைச் சொல்லுமாறு கேட்டான். முசுகுந்தன் மண்ணுலகில் பூசை செய்யும் பொருட்டுச் சிவமூர்த்தத்தை தர வேண்டினான்.

இந்திரனுக்குத் தர விருப்பமில்லை. எனினும் அதனை முதலில் பூசித்து வந்த திருமால் இணங்கினால் அதைத் தருவதாகக் கூறினான். முசுகுந்தனும் திருமாலை வேண்டி அனுமதி பெற்றான். பின்னும் இந்திரன் தான் பூசித்து வந்த மூர்த்தியைப் பிரிய மனம் இல்லாமல் அதே மாதிரி ஆறு மூர்த்திகளைச் செய்வித்தான். அவற்றை ஒவ்வொன்றாக முசுகுந்தனுக்குக் கொடுத்தான். முசுகுந்தன் தான் முதலில் கண்ட மூர்த்தி அவையல்ல என்று தெரிவித்தான். இந்திரனும் வேறுவழி இல்லாமல் உண்மைச் சிவ மூர்த்தியுடன் ஆறையும் கொடுத்தான். இந்திரனிடம் ஏழு மூர்த்திகளையும் பெற்றுக் கொண்டு முசுகுந்தன் பூவுலகிற்கு வந்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமால் பூசித்த மூர்த்தியைத் திருவாரூரில் வேதாகம முறைப்படித் தாபித்தான். மற்றஆறுமூர்த்திகளைத் திருநாகைக் காரோணம், திருநள்ளாறு, திருக்காறாயில், திருக்கோளிலியூர், திருவான்மியூர், திருமறைக்காடு என்ற ஆறு இடங்களிலும் ஒரே நாளில் பிரதிட்டை செய்தான். திருவாரூரில் பிரதிட்டை செய்த மூர்த்தத்தை வழிபட்டு வந்தான். திருவாரூரில் சிறப்பாக விழா நிகழ ஏற்பாடு செய்தான். நெடுங்காலம் அரசுசெய்து பின் தன் புதல்வன் அக்கினிவன்மனுக்கு முடிசூட்டிவிட்டுத் தவம் புரிந்து விண்ணுலகை அடைந்து முருகப் பெருமானின் திருவடிகளை வணங்கி வழிபட்டுக் கொண்டிருந்தான்.

24. வள்ளி திருமணம்

தொண்டை நாட்டில் மேற்பாடி என்னும் சிற்றூருக்குப் பக்கத்தில் உள்ளது வள்ளிமலை, வளங்கள் பல நிறைந்தது. வேடர்கள் பலர் அங்கு வாழ்ந்து வந்தனர். வேடர்களுக்குத் தலைவன் நம்பி என்பவன். அவனுக்கு ஆண்மக்கள் சிலர் இருந்தபோதிலும், பெண் மகவை விரும்பி அந்நிலத்திற்குரிய தெய்வமான முருகப் பெருமானை வழிபட்டு வந்தான்.

கண்வ முனிவருடைய சாபத்தினால் திருமால் சிவமுனிவ ராகவும், இலக்குமி மானாகவும், உபேந்திரன் நம்பியாகவும் பிறந்திருந்தனர். திருமாலின் அவதாரமாகிய சிவமுனிவர் வள்ளி மலையில் சிவனை நோக்கித் தவம் செய்து கொண்டிருந்தார். அப்போது இலக்குமி பெண் மானாக அவர்முன் வந்தாள். கண்ட முனிவர் காம உணர்ச்சி பெற்றார். கண் மலர்களால் புணர்ந்தார். திருமாலின் மகளான சுந்தரவல்லி மான் வயிற்றில் கருக் கொண்டாள். அந்த மான் வள்ளிக் கிழங்கு எடுக்கப்பட்ட குழியில் பெண் மகவை ஈன்று சென்றது. குழந்தை அழுதது.

வேடர் தலைவன் நம்பி அக்குழந்தையின் அழுகையொலி யைக் கேட்டான். குழந்தையை எடுத்து மனைவி கையில் கொடுத்தான். அவள் மகிழ்ச்சியோடு உச்சி மோந்து, முத்தம் தந்து மார்போடு அணைத்தாள். அன்பின் மிகுதியால் பால் பெருகப் பாலூட்டினாள். தொட்டிலிலிட்டுத் தாலாட்டினாள். வள்ளிக் கிழங்கை அகழ்ந்த குழியில் கண்டெடுத்ததால் அக்குழந்தைக்கு வள்ளி என்று பெயரிட்டனர். முருகனுக்குத் திருவிழாச் செய்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குழந்தைக்குப் பன்னிரண்டு வயது ஆகியது. அவளைத் தினைப்புனம் காக்க அனுப்பினர். அப்போது வள்ளிக்குத் திருவருள் புரிய முருகப்பெருமான் கந்த மலையிலிருந்து தணிகை மலைக்கு எழுந்தருளினார். நாரதர் முருகப் பெருமானிடம் சென்று வள்ளி தினைப்புனம் காத்துக் கொண்டிருப்பதைக் கூறினார். முருகப் பெருமான் வேடர் கோலம் தாங்கி அங்குச் சென்று வள்ளியிடம் காதல் மொழிகள் பல கூறினார்.

அவ்வமயம் வேட்டுவர் தலைவர் நம்பி அங்கு வந்தான். வேடராக வந்த முருகன் வேங்கை மரமாக மாறி நின்றார். நம்பியுடன் வந்த வேடர்கள் புதிதாகத் திடீரென்று தோன்றிய இந்த மரத்தினால் தீங்கு நேரலாம் என்று கூறி வெட்டி எறியக் கூறினர். நம்பி அது வள்ளிக்குத் துணையாகும் என்று வெட்டாமல் விட்டு விட்டான். நம்பியும் வேடர்களும் அங்கிருந்து சென்ற பின் முருகப் பெருமான் வேங்கை மர வடிவம் நீங்கி முதிய சிவனடியார் வேடம் கொண்டு வள்ளியிடம் உரையாடிக் கொண்டிருந்தார். நம்பி மீண்டும் அங்கு வந்தான். முதிய சிவனடியார் வேடம் கொண்டு வள்ளியிடம் உரையாடிக் கொண்டிருந்தார். நம்பி மீண்டும் அங்கு வந்தான். முதிய சிவனடியார் வேடத்திலுள்ள முருகப் பெருமான் நம்பிக்குத் திருநீறு தந்து வாழ்த்தியருளினார். நம்பி சிவனடியாரைப் பார்த்து, ''நீர் எங்கு வந்தீர்?'' என்று கேட்டான். சிவனடியார் ''குமரி ஆட வந்தேன்'' என்றார். நம்பி, ''தாங்கள் கூறிய தீர்த்தத்தில் நீராடிச் சுகமே இருப்பீர். தனித்திருக்கும் எம் புதல்விக்குத் தாங்களும் துணையிருப்பீர்'' என்று கூறிச் சென்றான்.

பசி என்று கூறிய சிவனடியாருக்கு வள்ளி தேனும், தினை மாவும் இனிய கனிகளும் தந்தாள். பசி தீர்ந்த சிவனடியார் தாகம் தீரத் தண்ணீர் வேண்டும் என்றார். வள்ளி அவரை அழைத்துச் சென்று சுனை ஒன்றைக் காட்டினாள். சிவனடியார், ''வள்ளி! என் தாகத்தைத் தணித்தாய். அதுபோல என் மோகத்தைத் தணித்தா யானால் என் மனக்குறை தீரும்'' என்றார்.

வள்ளி நடுங்கி, ''முதியவரே! நீர் பேசுவது உம் தவக் கோலத்திற்குப் பொருந்தாது. வேடர்கள் அறிந்தால் தீங்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உண்டாகும்'' என்றாள். முருகப் பெருமான் விநாயகரை நினைத்தார் அவர் யானை வடிவில் வள்ளி முன் வந்தார். வள்ளி அஞ்சி காப்பாற்றும்படிகூறிச் சிவனடியாரைத் தழுவிக் கொண்டாள். யானை திரும்பிச் சென்றது. சிவனடியார் ஆறு முகங்களும், பன்னிரு திருக்கரங்களும் கொண்ட முருகப் பெருமானாகக் காட்சி தந்தருளினார். வள்ளி வணங்கித் துதித்தாள். தன்னை ஆட்கொண்டருள வேண்டினாள். முருகப் பெருமான் அவளுடைய முற்பிறப்பை நினைவூட்டினார்.

பின் முருகப் பெருமான் கூறியபடி மீண்டும் தினைப்புனம் சென்றாள். தோழி வள்ளியிடம் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கண்டு, ''வள்ளி! நீ எங்கு சென்றாய்?'' எனக் கேட்டாள். வள்ளி, ''நான் மலை மீதுள்ள சுனையில் நீராடச் சென்றேன்'' என்றான். அவ்வமயம் முருகப்பெருமான் வேடர்கோலத்தில் வந்து, ''நான் விரட்டி வந்த யானை இங்கு வந்ததா?'' என்று வள்ளியையும், தோழியையும் பார்த்துக் கேட்டார். வேடன், வள்ளி இருவரின் பார்வைப் பரிமாற்றங்களைக் கண்ட தோழி ஒருவர் மேல் ஒருவர்க்கு உள்ள காதலை இவர்களின் கண்களே சொல்லும் என மனத்திற்குள் நினைத்தாள்.

வேடன் வடிவிலுள்ள முருகப் பெருமான், ''தோழியே! என்னை உன் தலைவியிடம் கூட்டுவி. கூட்டாது போனால் உன் தலைவியின் உருவத்தை ஒரு துணியில் எழுதிக் கொண்டு பனை மடலால் செய்த குதிரையில் ஏறி உம் ஊர்த் தெருவில் ஊர்வேன்'' என்றார். தோழி வேடன் அவ்வாறு செய்தால் பழி உண்டாகுமே என்று அஞ்சி வள்ளியை அழைத்து வந்து அவரிடம் கூட்டு வித்தாள். தினைப்புனத்தில் கதிர்கள் முதிர்ந்து தினைகள் விளைந்தன. வள்ளி தினைப்புனம் காவல் இல்லாது வீட்டில் இருந்தாள். முருகப் பெருமானின் பிரிவாற்றாது வள்ளி உடல் மெலிந்தாள். அது கண்ட பெற்றோர் முருகப் பெருமானுக்கு வெறியாட்டு விழா நிகழ்த்தினர்.

தினைப்புனத்தில் வள்ளியம்மையைக் காணாத முருகர் வாடி வருந்திப் புலம்பினார். ஒருநாள் நள்ளிரவில் நம்பியரசனின் குடிலுக்குப் பக்கத்தில் போய் நின்றார். தோழி வள்ளியம்மை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முருகப் பெருமானுடன் உடன்போக்கு அனுப்பினாள். பொழுது விடிந்தது. மகளைக் காணாத தாய் கொடிச்சி எங்கும் தேடினாள். தோழியிடம் கேட்க அவள் தான் அறியேன் என்றாள். ''நம் மனையிலுள்ள காவலைக் கடந்து என் மகளை எவனோ களவில் கொண்டு போனான்'' என்று நம்பி வெகுண்டான். போர்க்கோலம் பூண்டு வேடுவர்களுடன் புறப்பட்டான்.

வழியில் சோலையில் வேடன் வடிவிலிருந்த முருகப் பெருமானையும் வள்ளியம்மையையும் கண்டு வளைத்துக் கொண்டனர். அம்பு மழை பொழிந்தனர். அவை முருகப் பெருமான் மீது மலர்களாக விழுந்தன. முருகன் அருளால், கொடியாக அமைந்த சேவல் கூவத் தொடங்கியது. அந்த ஒலியிலேயே நம்பியரசனும் அவனுடைய புதல்வர்களும் வேடர்களும் மாய்ந்தனர். அது கண்டு வள்ளி வருத்தம் அடைந்தாள். முருகப் பெருமான் சோலையை விட்டு அகல, வள்ளியும் பின் தொடர்ந்தாள்.

அப்போது நாரதர் தோன்றி, ''வளர்த்த தந்தையும் சுற்றத்தாரும் இறந்து கிடக்க வள்ளியம்மையை உடனழைத்துக் கொண்டு போவது தங்கட்குத் தகுதியாகுமோ?'' என முருகப் பெருமானைக் கேட்டார். அதனைக் கேட்ட முருகப் பெருமான் இறந்த உறவினர்களை எல்லாம் வள்ளியம்மையைக் கொண்டே எழச் செய்தார். முருகப் பெருமான் தன் தெய்வ வடிவில் காட்சியளித்தார். நம்பிராசனும் பிறரும் வணங்கினர். ''எம் சிற்றூருக்கு வந்து அக்கினி சாட்சியாகத் திருமணம் செய்து வள்ளியம்மையுடன் உம் ஊருக்குச் செல்லும்'' என வேண்டினர்.

அனைவரும் மேற்பாடியை அடைந்தனர். நம்பிராசன் திருமண ஏற்பாடுகளைச் செய்தான். நாரதர் வேள்வித் தீ வளர்த்து முறைப்படித் திருமணச்சடங்குகளைச் செய்யத் தொடங்கினார். நம்பிராசன் தன் மகளை முருகப் பெருமானுக்குத் தாரை வார்த்துக் கொடுத்தான். சிவபெருமான், பிரமன், திருமால், இந்திரன் முதலிய கணங்கள் சூழ உமா தேவியாருடன் எழுந்தருளினார். அனைவரும் திருமணம் கண்டு மகிழ்ந்தனர். மலர் மழை பொழிந்தனர். அந்நிகழ்ச்சியையும், தம் செயலையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அங்குள்ளோர் அறியாதபடி, முருகப் பெருமான் தம் தாய் தந்தையை வணங்கினார். அவர்கள் மறைந்தனர். வேடுவர்கள் தூய்மையான மலர்களையும் அறுகம்புல்லையும் அரிசியையும் மணமக்கள் மீது சொரிந்து வாழ்த்தினார். தினைமாவும்,தேனும் இனிய பழங்களும் வள்ளிக் கிழங்கும் பிறவும் இலைகளாலான பாத்திரங்களில் படைத்து மணமக்கட்குத் திருவமுது ஊட்டினர். தாயும் தோழியும் செவிலித் தாயும் வள்ளியம்மையைத் தழுவி வாழ்த்தி விடை கொடுத்தனர். சிவஞானபோதம் எட்டாம் சூத்திரத்திற்கு விளக்கமாய் அமைந்தது வள்ளி திருமணத் தத்துவமாகும்.

முருகப் பெருமான் வள்ளியம்மையோரோடு திருத்தணிகைக் கோயிலில் எழுந்தருளினார். வள்ளிம்மை, திருத்தணிகை மலையின் சிறப்பினைச் சொல்லுமாறு முருகப் பெருமானை வேண்டினாள். முருகப் பெருமான், ''நாம் சூராதிசூரர்களுடனும் வேட்டுவர்களோடும் போர் செய்த போது கொண்ட கோபத்தை இங்கு வந்துத் தணித்துக் கொண்டோம். ஆதலால் இம்மலை செருத்தணி (செரு-கோபம், தணி-தணிதல்) என்று பெயர் பெற்றது. காமாட்சியம்மை ஏகாம்பர நாதரை வழிபட்ட காஞ்சிப் பதிக்கு அருகில் உள்ளது இம்மலை. மலர்களில் சிறந்தது தாமரை. ஆறுகளில் சிறந்தது கங்கை. தலங்களில் சிறந்தது காஞ்சி. அதுபோன்று மலைகளில் சிறந்தது செருத்தணி. நாம் கொம்பு ஊதியும், வேய்ங்குழல் இசைத்தும், யாழ் மீட்டியும் ஏழிசை பாடியும் ஆடியும் திருவிளையாடல் புரிவோம். சிவபெருமான் கயிலை மலையையே பெரிதும் விரும்புவது போல, எமக்கு இத்தணிகை மலையே பெரிதும் விருப்பம்.

இந்திரன் எம்மைப் பூசிக்கும் பொருட்டு இம்மலையிலுள்ள சுனையில் மூன்று நீலோற்பல செடிகளை வளர்த்தான். அம்மூன்று செடிகளிலும் காலை, உச்சிவேளை, மாலை ஆகிய மூன்று வேளைகளில் வேளைக்கு ஒன்றாக மூன்று மலர்கள் மலரும். இச் சுனையில் அன்புடன் நீராடி எம்மை வழிபடுவோர்க்கு இம்மை, மறுமை நலன்கள் எளிதில் கிடைக்கும். இம்மலையில் ஐந்து நாட்கள் தங்கி நோன்பு இருப்பவர்கள் தாம் எண்ணிய இன்பங்களை அனுபவித்து இறுதியில் வீடுபேறு அடைவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவராயினும், முனிவர்களாயினும் மற்ற எவர்களாயினும் இம்மலையைத் தொழாதவர்கள் செடி கொடி முதலானவற்றை விடத் தாழ்ந்தவராவர். பாவங்கள் பல செய்தாரும் இம்மலையை அடைந்து வழிபட்டால் நற்கதி அடைவர். இம்மலையில் ஒரு சிறு தருமம் செய்தால் அது பலவாக விரிவடையும். பாவங்கள் சிறுமை அடைந்து தேயும். இம்மலையின் அற்புதங்களாகப் பல கோடி சிறப்புக்கள் உண்டு'' என்றார். இதனைக் கேட்ட வள்ளியம்மையார் இம்மலை உயிர்கட்கு பல நன்மைகளைப் பயப்பது என்று மகிழ்ந்தார்.

வள்ளியம்மையும் முருகப்பெருமானும் மலையின் ஒரு பக்கத்தே சிவாகம விதிப்படிச் சிவலிங்கம் பிரதிட்டை செய்து வழிபட்டுச் சில காலம் வீற்றிருந்தனர். பின் கந்த வெற்பை அடைந்தனர். தெய்வ யானை அம்மையிடம் வள்ளியம்மையின் வரலாற்றை முருகப்பெருமான் கூறினார். இரு பெண்களும் திருமாலுக்குப் புதல்வியராய் இருந்த போது தம்மை அடையத் தவம் செய்ததையும் தாம் அருளியதையும் கூறினார்.

வல்லியம்மை தெய்வயானை அம்மையை நோக்கி, ''முற்பிறப்பில் நான் உங்கட்கு உடன் பிறந்த தங்கை. இப்பிறப்பில் வேறொரு முறையால் தங்கை ஆனேன்'' என்று கூறி வணங்கி எழுந்தாள். இருவரும் ஒருவரை ஒருவர் தழுவி மகிழ்ந்தனர். கந்தப் பெருமான் கந்த வெற்பில் தேவியர் இருவருடன் வீற்றிருந்தருளினார். ஞானம் கைகூடிய அன்பர்கள் அனைவரும் முக்திக் கனியை என்றும் இடையறாது அனுபவிக்க அருள் பாலிப்பவர் ஞான பண்டிதரான கந்தப் பெருமான் ஆவார். சேவலும், மயிலும்,ஆடும், வேலும் மற்றப் படைக்கலங்களும் முருகப் பெருமான் இடும் பணிகளைச் செய்து கொண்டு ஆலயத்தில் பக்கங்களில் விளங்கின.

''ஆறிரு தடந்தோள் வாழ்க! ஆறுமுகம் வாழ்க! வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க! குக்குடன் வாழ்க! செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீர் அடியார் எல்லாம்''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"புன்னெறி அதனில் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடியன் ஆக்கி இருவினை நீக்கி ஆண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி"

வற்றுதல் இல்லாத அருட் பெருக்கைக் கொண்ட முருகப் பெருமானின் அருள் வளம் பொருந்திய புராண வரலாற்றைத் தகுந்தவர் கேட்குமாறு சொன்னவரும், புராணத்தின் மெய்ப் பொருளை ஆராய்ந்து காண்பவரும், குற்றம் வராமல் கற்றவரும் புராணத்தில் வல்லவருடன் கேட்க முயல்பவரும், புராணத்தை வாசிக்கக் கசிந்துருகிக் கேட்டவரும் வீடுபெற நிற்பவரே ஆவர்.

கந்தப் பெருமானின் திருவடிகளைத் தெவிட்டாத காதலுடன் போற்றித் துதிப்போமாக!

தட்ச காண்டம் முற்றிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கந்தபுராணம் உணர்த்தும் தத்துவக் கருத்துக்கள்

நுட்பமான அரும்பெரும் தத்துவக் கருத்துக்களை யாவரும் இனிது உணர்தற் பொருட்டுப் பெரியோர்கள் பரு வடிவில் அழகுற அமைத்து விளக்க உதவுவதே புராணக் கதைகளாகும். கந்தபுராணம் விளக்கும் நுட்பமான முக்கிய தத்துவக் கருத்துக்கள் இங்குக் கூறப்படுகின்றன.

முருக அவதார தத்துவம்

நல்லோர்களைக் காக்கவும், தீயோர்களை ஒடுக்கவும் உரிய காலத்தில் இறைவன் வெளிப்பட்டுத் தோன்றுதல் அவதாரம் எனப்படும். சிவபெருமானே முருகனாக அவதரித்தார்.

"மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால்அளக்க
வொண்ணாமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் நிமலமூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி அருளொடு சரவணத்தில்
வெறிகமழ் கமலப் போதில் வீற்றிருந்தருளினானே"

நெருப்பே நெருப்புக் கொழுந்தாவதுபோல், சிவபெருமானே சிவக்கொழுந்தாக எழுந்தருளினார்.

சிவபெருமானிடம் மறைந்திருந்த சக்தியே முருகனாக அவதரித்தது. சத் - சிவம். சித் - சிவசக்தி. இவற்றினிடைத் தோன்றுவது ஆனந்தம் - குமரன். "அருளது சக்தியாகும் அரன் தனக்கு", "சக்தி தன் வடிவே தென்னில் தடையிலா ஞானமாகும்" என்று சிவஞான சித்தியாரில் கூறியுள்ளபடி, ஞானப் பிழம்பாகிய சிவபெருமானின் அருளும் ஞானமே. அந்த ஞானத்திடையே தோன்றுவதும் ஞானானந்தமே. எனவே முருகவேள் ஞானானந்த வடிவினர். ஆறுமுகங்களும் முற்றறிவு, வரம்பிலின்பம், இயல்பாகவே பாசங்களின்று நீங்குதல், முடிவிலாற்றல், பேரருள், தன்வயமுடைமை என்ற ஆறு குணங்களை உணர்த்தும். உலகில் தோற்றம் வேண்டுமானால் ஆகாசத்திலே பிறந்து, வாயுவினாலும் அக்கினியாலும் ஏந்தப் பெற்று, கங்கையாகிய நீரில் வசிக்கப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெற்றுக் கடைசியில் நிலத்தில் தங்கினார் முருகப் பெருமான். ஐம்பெரும் பூதங்களோடு தொடர்பு அடைந்த கதையே முருகப் பெருமானின் திருஅவதாரக் கதை.

மும்பொருள் விளக்கம்

முருகப்பெருமான்	-	பதி
தேவர்கள்	-	பசுக்கள்
சூரபன்பன்	-	ஆணவம்
சிங்கமுகன்	-	கன்மம்
தாரகன்	-	மாயை

பாசம் இறைவனை அணுகாது, உயிர்களையே தளைத்து நிற்கும். அசுரர்களின் செயல் பதியை அணுகாது, பசுக்களாகிய தேவர்களையே துன்புறுத்தின.

சூரசங்கார தத்துவம்

வேல்	-	ஞானம்
சூரன்	-	அஞ்ஞானம்

சூரனை வேல் தடிந்தது. அஞ்ஞானத்தை ஞானம் வென்றது, என்பதை உணர்த்தும். சூரியகாந்தக் கல்லினிடத்துத் தோன்றிய சூரியகிரணம் அதன்முன் வைக்கப்பட்ட பஞ்சை எரிப்பது போல, சிவபெருமானிடமாகத் தோன்றிய சிவகுமாரன் அசுரர்களை அழித்தான் என்பது சூர சங்காரத் தத்துவமாகும்.

சத்காரிய வாதப்படி உள்ள பொருள் அழியாது, இல்பொருள் தோன்றாது. முக்தியில் ஆணவம் அழியாது, தன் சக்தி அடங்கி நிற்கும் என்றபடி சூரபன்மன் அழியாது மயிலும், சேவலுமாகி முருகனுக்கு வாகனமும் கொடியுமாய் அமைந்து அடங்கி நின்றான். தாரகன் யானையாகி ஐயனாருக்கு வாகனமானான். சிங்கமுகன் காளிக்குச் சிங்க வாகனமானான்.

சேவலும் மயிலுமாய் இருகூறாய் நின்ற சூரன் முருகப் பெருமானின் அருட்பார்வை பட்டதும்,

"தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர்."

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்ற தத்துவத்தை உணர்த்தும். சேவல் நாத தத்துவத்தையும் மயில் விந்து தத்துவத்தையும் உணர்த்தும். மேலும் அசுரர்கள் வாழ்ந்த இடங்களான வீரமகேந்திரம் காரண சரீரத்தையும், அசுரபுரி சூக்கும சரீரத்தையும், மாயாபுரி தூல சரீரத்தையும் உணர்த்தும் என்பர்.

தீய குணங்களை அசுர சம்பத்தென்றும் நல்ல பண்புகளைத் தேவ சம்பத்தென்றும் சொல்வார்கள். முருகன் தீயதைப் போக்கி, தூயதை அருள்கின்றவன் என்பதை அசுர சங்காரம் உணர்த்தும்.

தெய்வயானை, வள்ளியம்மை திருமண தத்துவம்

உயிர்களின் பக்குவ நிலைக்கு ஏற்ப இறைவன் வெவ்வேறு வடிவில் வந்து ஆட்கொள்வான் என்பது சைவ சித்தாந்தக் கோட்பாடு. அதன்படி தேவேந்திரன் மகளாக வளர்ந்த தெய்வயானையை முருகன் தெய்வ வடிவிலும், குற மகளாக வளர்ந்த வள்ளியை வேட்டுவ வடிவத்திலும் வந்து ஆட் கொண்டார்.

வள்ளியம்மை - இச்சா சக்தி
தெய்வயானை - கிரியா சக்தி
முருகப்பெருமான் - ஞானசக்தி

வள்ளி திருமண தத்துவம்

தவநலஞ் சான்ற ஆன்மாக்கட்கு இறைவன் மானுடச் சட்டை தாங்கிக் குருவாய் எழுந்தருளிப் போந்து, அவை புலன்களின் வழி மயங்கி நின்ற தன்மையையும் அவை சிவானந்தப் பெருஞ் செல்வம் துய்த்தற்குரிய சித்துப் பொருள் என்பதையும் உணர்த்தி அருள்வான் என்றும், அவ்விதம் உணர்த்திய வழி ஆன்மாக்கள் உலகமுகப் படாமல் நீங்கி, இறைவனின் திருவடியை அடையும் என்றும் சிவஞானபோதம் எட்டாம் சூத்திரம் கூறுகின்றது.

"மன்னவன் தன் மகன் வேடர் இடத்தே தங்கி
வளர்ந்து அவனை அறியாது மயங்கி நிற்பப்
பின்னவனும் என் மகன் நீ என்று இவரிற் பிரித்து
பெருமையோடும் தான் ஆக்கிப் பேணுமா போல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துன்னிய ஐம்புல வேடச் சுழலிற் பட்டுத்
துணைவரையும் அறியாது துயருறும் தொல்உயிரை
மன்னும் அருட்குருவாகி வந்து, அவரின் நீக்கி
மலம் அகற்றித் தான் ஆக்கி மலரடிக்கீழ் வைப்பான்''

– சிவஞான சித்தியார் சுபக்கம், செ. 253

என்று அருணந்தி சிவாசாரியார் கூறியதற்கேற்ப வள்ளியம்மை, நம்பியரசன் முதலிய வேடர்கள்பால் வளர்ந்து தன்னையும் அறியாது, தன் முதல்வனான முருகனையும் அறியாது மயங்கின காலை, முற்செய் தவத்தால் முருகப் பெருமான் எழுந்தருள, பொய்ச் சார்பாகிய வேடர் குலத்தை விட்டு மெய்ச் சார்பாகிய முருகனிடம் சேர்ந்தார். வள்ளி திருமணம் ஆன்மாவானது தன்னிலையை உணர்ந்து சிவமாந்தன்மைப் பெருவாழ்வை அடைவதைக் குறிக்கும்.

தாரகாசுரன், சிங்கமுகன், சூரபன்மன் இவர்களின் சங்காரத்திற்குப் பின்பு வள்ளி திருமணம் நடைபெறுகிறது. இது மூன்று மலமும் கழன்றால் முழுமுதற் பொருளே வலிய வந்து நம்மை ஆட்கொள்ளும் என்பதை உணர்த்தும்.

கந்தபுராணம் உணர்த்தும் அறம்

கந்தபுராணத்தில் தட்சன், சூரபன்மன் இருவருமே நன்றி மறந்ததால் துன்பம் அடைந்தார்கள்.

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'' (குறள் – 110)

என்பது வள்ளுவர் வாக்கு. எனவே ஒருவன் தனக்குப் பிறர் செய்த நன்றியை (நன்மையை) மறவாமல் இருக்க வேண்டும் என்பது கந்தபுராணம் உணர்த்தும் அறக் கருத்து ஆகும்.

தேவர்கள் தங்கட்குத் தலைவர் சிவபெருமான் என்பதை அறிந்திருந்தும் தட்சனை எதிர்க்கத் துணிவு இல்லாமையால் தக்க யாகத்தில் கலந்து கொண்டார்கள். ஆதலால் உடந்தைக் குற்றம் செய்தமையால் பெரிதும் துன்பம் அடைந்தார்கள். இது நாம் எவ்வளவு நல்லவர்களாக இருந்தாலும் பிறர் செய்யும் தீய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செயலுக்குத் துணை நின்றால் அது நம்மையும் பாதிக்கும் என்பதையும், எனவே நாம் நற்செயல்கள் செய்வதோடு, தீச்செயல்களையும் துணிவோடு எதிர்த்து நின்று போராட வேண்டும் என்பதையும் உணர்த்தும்.

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க! மலிவளம் சுரக்க! மன்னன்
கோன்முறை அரசு செய்க! குறைவிலாது உயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்!

– கச்சியப்ப சிவாச்சாரியார்

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



தெய்வானை உடனமர் ஸ்கந்தகுரு நாதன்
ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயத்தின் வெள்ளிவிழா நினைவாக
சமர்ப்பிக்கப்பட்ட ரத்னக்கிரீடம் மற்றும் தங்க சிம்மாசனத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருப்பரங்குன்றம்

ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம்

கந்தன் பாதம் கனவிலும் துணை செய்யும்